மகாபாரதத்தின் தத்வங்கள்

by

C. S. நடராஜன், M. A.

MADRAS-14.

Price: Rs. 3/-

மகாபாரதத்தின் தத்வங்கள்!

2741

by

C. S. நடராஜன், M.A.,
MADRAS - 14.

Price : Rs. 3/-

No. of Copies.: 2000

Dedicated with profound respects to his Holiness Kanchi K amakoti Peetathipati & to late Dr. C. P. Ramaswamy Ayyar.

Copies can be had from author at—
Type IV, 11, P. & Tel. Staff Qrtrs., Madras-14.

Printed at
Shanker Power Press, 7, Sunkurama Chetty St , Madras-1.

REFACE

Certain of my friends were one day talking obliquely on the various stories contained in our epic story of the Mahabharata. and passing adverse criticisms on the way in which our revered grand old man Sri C. Rajagopalachari has translated the Sanskrit version freely and without any adulteration, which (they say) is likely to reach Western hands, only to be jeered and commented on the stories relating to our heroes of old. I am not a Defender of the faith., but still, I returned with hurt feelings, that such a great epic, full of inner meanings and profound sense of morality should be looked down upon by our fellows.

It is this incident that has induced me to write a short catechism on the various characters of the epic, touching throughout the allegorical implications of the stories. Those who have read John Bunyan's "Pilgrim's Progress" will know what an allegory is and how that novel was made up of making each emotion as fear, anger, love, etc. a human character, and how the development of the theme contained was just apposite with the name of the character. Similarly, the great Vyasa, who is regarded as an Avatar of the Lord Vishnu Himself was not only responsible for a proper division of the Vedas in to four, but was also the author of mahabhaarata, the Bhaghavata and the Bramanda Purana of which Skandam and Adhyatma Ramayana form part, Vyasa was a great sage, a Maharishi and a Yogi who could well see into the happenings on this earth in the long past, his present days and future days to come. His ege was supposed to be the Dwapara Yuga and the beginning of Kali Yuga. His birth in this world as the son of Parasara and Satyavathi is keenly noted, but his disappearance nobody knows. He probably exists even to-day somewhere in this wide world.

Whether Mahabharata is a history or a story need not worry us unnecessarily. What is the true knowledge derived from reading the epic and what is the esoteric significance of the story and how most useful is it in th: atmic pursuit, (which must naturally come down on every man at some stage or other, or at least during later days after a lot of sufferings and enjoyments at least out of fear of death or sights of deaths) are the various points mainly dealt upon by me in this short work.

I hope readers will find it interesting, educative and reformative and it will only be a recompense to me if at least half of them are turned towards the right path of moral life and consequent happiness.

I am deeply grateful to the efficient manner in which this work has been composed and printed at concessional rates by M/s. Shankar Power Press, especially when no printer and publisher came forward to undertake a work of this type by a new author in the field.

I am also translating from Sanskrit into English and Tamil, with text and translations of Vyasa's "Adhyatma Ramayana", for which I have had to court for donations and I owe a deep sense of gratitude to the following spontaneous donors in this connection :

Dr. C. P. Ramaswamy Ayyar	Rs. 250
Sri C. R. Pattabiraman, Ex. Union Minister and Advocate, Madras.	Rs. 100
Sri V. Dorai, Proprietor, Bombay Stores, Pycrofts Road, Triplicane, Madras-5	Rs. 51
Sri Governor, Madhya Pradesh, Bhopal.	Rs. 50
Sri V. S. Lakshmanan, Ananda Pictures (Pvt.) Ltd , Teynampet, Madras.	Rs. 50
Sri T. K. Mallinathan, C.A., Accountant, Madras, Motor & General Insurance Co., Ltd., Madras	Rs. 50
Sri C. R. Nathan, Dental Surgeon, Vellore, N A. Dt.	Rs. 50
Sri V. Sankaran, Agent, Indian Bank Ltd., Triplicane, Madras.	Rs. 50
Sri T. Sadasivam, The Kalki, Kalki Gardens, Kilpauk, Madras.	Rs. 50
Sri Justice K. S. Venkataraman, High Court Judge, Madras.	Rs. 50
Sri M. S. Krishnan, Advocate, Jambulinga Mudaliar Road, Madras-14.	Rs. 50
Sri K. Raghunathan, Advocate, Trivellore.	Rs. 30
Sri Moni Bose, Shivmoney & Co., Delhi.	Rs. 50
Major Viswanathan, M/s. Shivmoney & Co , Madras.	Rs. 50

Sri C. S. Hariharan, C.A., Auditor, Balaji Nagar First Cross Street, Madras.	Rs.	30
Sri R. Madhava Rao, 45, North Mada Street, Mylapore. Madras.	Rs.	25
Sri S. Krishnaswamy Iyengar, Advocate, Trivellore.	Rs.	25
Sri K. N. Ramayyar, 2/15, Ramaswamy St., Madras-1.	Rs.	25
Sri Sreenivasan, Hemanth Pharmacy, Triplicane High Road, Madras.	Rs.	25
Sri V. V. Raghavan, Advocate. Madras.	Rs.	25
Sri Valliappa Chettiar, Agent, The Indian Bank Ltd., Alwarpet, Madras-21.	Rs.	25
Sri B V. S. Mani, Administrative Officer, Beehive Foundry, Broadway, Madras-1.	Rs.	25
Sri C. S. Seshadri, Advocate, Trivellore,	Rs.	25
Sri V. Emberumannar Chetty, Mls. V. Perumal Chetty & Sons, Madras-1.	Rs.	25
Sri N. S Mani, Mani's Tutorial, Mowbray's Road, Madras-4.	Rs.	20
Sri S. V. Sahasranamam, B.A., 20, Thandavarayan St., Royapettah. Madras-14.	Rs.	20
Sri R. Durairajan, "The Hindu", Madras.	Rs.	20
Sri M. C. T. M. Muthiah Chettiar, 'Chidambaram House', Purasawalkam, Madras,	Rs.	20
The Principal, New College, Madras.	Rs.	20
Sri K. Narayan, Chief Inspector of Branches, The Indian Bank Ltd., Madras.	Rs.	20
Sri S. Vaidyanathan, Director, Subramaniam Educational Institute, Madras.	Rs.	20
Sri Justice P. Ramakrishnan, High Court Judge, Madras	Rs.	20
Sri K. Natesayyar, Jaggery Merchant, 5, Adna Pillai Street, Madras-1.	Rs.	20
Sri C. S. Ekambarayyar, Advocate, Vellore.	Rs.	20
Major Ramaswamy, Triplicane, Madras-5.	Rs.	20
Sri N. Viswanathan, Assistant, The Indian Bank Ltd., Madras.	Rs.	20

Sri M. Visweswara Rao, Engineer,
The Crompton Engg. Co. (Madras) Ltd.,
25, Thandavaroyan Street, Royapettah,
Madras-14. Rs 20

Sri K. Sreenivasan. Advocate. Sripuram View,
Venkatachala Mudali Street, Madras Rs. 20

and many others have contrihuted their might towards the success of these publications Much more is needed and so, a sincere request is herewith made to readers who are inclined to contribute. Immediate printed receipts are issued and books as and when ready despatched in due course.

C. S. NATARAJAN, M.A.,
Author,
Type IV, Block 11,
P. & T. Quarters, Madras-14

Review by Sri K. S. Ramaswamy Sastriar

The author Sri C. S. Natarjan, M. A. has done a signal public service by his mental insight and clarity of expression in the matter of describing the story and moral of the MAHABHARATA and of depicting various striking male characters in that supreme Indian Epic(like Bishma and Drona and Vidurs) and noteworthy female characters like Kunthi and Gandhari. Many beautiful verses in the Bhagawad Gita have been appositely chosen and appropriately included in this work I hope and wish that he will give the book a final and permanent shape and publish it soon, as an act of note worthy service to tha public.

(*Sd.*) K. S. RAMASWAMY SASTRI

முகவுரை.

என்னுடைய சில நண்பர்கள் ஒரு நாள் மகாபாரதக் கதைகளைப் பற்றி விரஸமாகவும், நம் மதிப்புக்குரிய கனம் C. ராஜகோபாலாசாரியார், ஸம்ஸ்கிருதத்திலிருந்து சுத்தமாக கலப்படமில்லாமல் நமக்கெல்லாம் அருளிச்செய்த "வியாசர் விருந்து" என்ற புத்தகத்திலடங்கிய மகாபாரதக்கதைகளைப்பற்றி வித்யாஸமாய் பேசவும் தொடங்கி விட்டார்கள். இக்கதைகள் மேல் நாட்டவர்கள் கையில் சிரிப்பாய் சிரிக்குமே என்ற கருத்து போலும் அவர்களுக்கு. இப்பேச்சுகளுக்குள் வீணாக நுழையாமல், ஆனால் நம்நாட்டு புராதன பழக்க வழக்கங்கள், பண்புகள், வீரர்களைப்பற்றி நம்மவர்களே இங்ஙனம் இழிக்கவும் பழிக்கவும் முற்பட்டார்களே என்ற விசனத்துடன் வீடுதிரும்பும் போது, ஓர் யோசனை தோன்றியதே இப்புத்தகத்திற்குக்காரணம், நான் ஓர் சீர்திருத்தவாதியுமல்ல, மகாபண்டிதனுமல்ல.

இம் மஹா காவ்யத்தில் தோன்றியுள்ள பல பாத்திரங்கள், அவர்களுடைய செயல்கள், குணங்கள், இவைகளில் அடங்கியுள்ள கருத்துகள் தத்துவங்கள் இவைகளைப்பற்றி சுருக்கமாகவும் அறிவுக்கும் பண்புக்கும் உகந்தவையாக உள்ளனவை என எடுத்துக்கூற முன்வந்துள்ளேன். ஆங்கிலத்தில் ஜான்பன்யனின் "வழிப்போக்கனின் முன்னேற்றம்" என்ற கதையைப்படித்தவர்கள் அதில் பயம், கோபம், அன்பு என்கிற உணர்ச்சிகளின் பெயர்களிலேயே ஓர் கதையை ஜோடித்து அது மேல் நாட்டில் அமோகமாக வெற்றிபெற்றது. இதை ஆங்கிலத்தில் "Allegory" என்றுசொல்வார்கள். அதேமாதிரி மகாபாரதத்தில் அடங்கிய அத்தனை பாத்திரங்களும் காரணப்பெயர்கள், இப் பெயர்கள் இடும்போதே அந்தகாலத்தில் சில மூல காரணங்களை வைத்தே பெயரிடுவார்கள் அதனால் அந்த காரணங்களுக்கும் அப்பெயர்களுக்கும் அப்பாத்திரங்கள் செய்துள்ள செயல்களின் கருத்துக்களும் அவைகளைப்பற்றி தத்துவவிளக்கங்களும் ஆராய்ச்சி மூலம் வெகுருசியுள்ளவை. இம் மகாபாரதத்தை எழுதியவர் வ்யாஸ மகரிஷி. அவர்விஷ்ணுவின் அவதாரமாகவே கிருஷ்ணத்வைபாயனர் என்ற பெயருடன் த்வாபரயுகத்தின் முடிவிலும் கலியுக ஆரம்பத்திலும், ஸ்ரீ கிருஷ்ணவதாரத்துடனேயே இப்பூமியில் அவதரித்தவர். இதே மாதிரி தரேதாயுகத்திலும் ஸ்ரீராம, பரசுராமாவதாரங்கள் உண்டாயின, கடவுளை மனிதனளவில் எடைபோட்டால் விளங்காது, நாராயணதத்வத்தைப்படித்தவர்கள் அவருடைய பல அம்சங்களை இப் பூமியில் தர்மத்தை நிலைநாட்டுவதற்காகவும் அதர்மத்தை ஒழிக்கவும்அடிக்கடி ஆவிர்பவித்தே வந்துள்ளார் என்பதை புரிந்துகொள்வார்கள்.

வ்யாஸ பகவான் இப்பூமியில் வந்து இம் மகாபெரிய காவியத்தையல்லாமல் வேதங்களை நான்காகப்பிரித்தார், பாகவதம், ப்ரம்மாண்ட புராணம் இத்யாதி நூல்களை ஜனங்கள் அறிவு வளர்ச்சிக்காக சிறிய வயதிலேயே இயற்றினார். ப்ரம்மாண்டபுராணத்தின் பகுதிகள்தான் ஸ்காந்தமும் அத்யாத்ம ராமாயணமும் இவை இரண்டும் வ்யாஸராலேயே இயற்றப் பட்டவை. மற்றபகுதிகள் இவருடைய சிஷ்யர்கள் இயற்றினார்கள் என்று சொல்லுகிறார்கள். வ்யாஸர், மகாயோகி, தபஸ்வி, த்ரிகால ஞானியாவார். அவர் நிகழ்ந்த, நிகழ், வரும்காலங்

கள் மூன்றையும் நேரில் கண்டறியக்கூடிய சக்தியைப் பெற்று இந்நூல்களை எழுதியதாகக்கூறப்படுகிறது.

அவர் பசராசரமுனிவருக்கும் ஓர் செம்படவப்பெண் ஸத்யவதிக்கும் பிறந்தவர் என்பதை மட்டுமே கவனிக்கிருர்களேயன்றி, அவர் மறைவைப்பற்றி ஒருவருக்கும் தெரியாது. ஒருகால் இன்றும் எங்காவது இப்பூமியில் தவம் செய்து கொண்டிருக்கிருரோ என்னவோ ?

மகாபாரதம் ஓர் சரித்திரமா, கதையா என்கிற சர்ச்சை அனுவச்யமானது, அதைப்பற்றி மனதைக்குழப்பிக்கொள்ள வேண்டியதில்லை. ஓர் உயர்ந்த பாரத சரித்திரம் என்றே நம்புவோம், நம்புவதற்க்குள்ள பல ஆதாரங்களும் உள்ளன. இம்மகாபாரதநூலை படிப்பதில் நாம் அறியும் முக்கிய கருத்துக்களும் நம்முன்னேற்றத்துக்குறிய நல்லுரைகளும், ஆத்மீக தத்துவத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஏதாவது விஷயங்கள் இருக்கின்றனவா என்பதை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டே இந்நூலை எழுதினேன்.

வாசகர்கள் இந்நூல் மூலம் அறிவு வளர்ச்சியடைந்து சமூக நல் வாழ்க்கையில் பணபாடுகளுடனும் நம் "முன்னுள் பணபுகள் குன்ருமல் பாதிபேர்களாவது நல்வாழ்வு வாழ்வார்களானுல் என்நூலை மிகையுடன் கௌரவப்படுத்திய பெருமை எனக்குண்டாகும்.

இந்நூலை மிகச்சிறந்த முறையிலும் குறைந்த சார்ஜிலும் செய்து கொடுத்த சங்கர் பவர் பிரஸ்ஸுுக்கு என் நன்றிகள்.

மற்றும் அடியேன் மேற்கூறிய "அத்யர்த்ம ராமாயணம்" என்பதை ஸம்ஸ்க்ருத மொழிகளுடன், எதிர்பக்கத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் மொழி பெயர்த்து தனித்தனி புத்தகங்களாக ஆக்க முயற்சி எடுத்துள்ளேன். அதற்கு ஊக்கமளித்து நன்கொடை மூலம் மேற்கொண்ட பலப்பிரமுகர்கள் என்னை கௌரவித்ததற்கு, என்மன முந்தக நன்றி. இன்னும் இதை வாசிக்கும் நேயர்களும் இம்மாதிரி நன்கொடையில் ஈடுபட எண்ணிஞல், அவர்கள் என்முகவரிக்கு பணம் அனுப்பிஞல், உடனே என் ரசீது அனுப்புவதுடன் புத்தகங்கள் தயாராகும்போது அவ்வப்போது தபால் மூலம் அனுப்பப்படும்.

மதிப்புரை.

நம் இந்திய நாட்டின் தலைசிறந்த இதிகாசமான மகாபாரதத்தின் முகிய பாத்திரங்களான பீஷ்மர், துரோணர், விதுரர் மற்றும் குந்தி, காந்தாரி, ஆகியவர்களின் வாழ்வில் நிகழ்ந்த முக்யமான அம்சங்களை, இந்நூலாசிரியரான ஸ்ரீ C. S. நடராஜன், எம். ஏ., அவர்கள் கதைச் சுவை குன்ருமல், நன்ருய் எழுதியிருக்கிருர். இடையிடையே பொருத்தமான இடங்களில் பகவத் கீதையும் விளக்கப்படுகிறது. இந்நூல்கள் விரைவில் பூர்த்தியாகிப் பொதுமக்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்.


(ஒப்பம்) **கே. எஸ். ராமசாமி சாஸ்திரியார்**



சங்கராச்சாரியார்

குருர்பிரம்ம குருர்விஷ்ணு சத்குரோ
மகேஸ்வரஹ குருஸ்சாக்ஷி குருர்தேவஹா
சத்குரும் நமாம்யஹம்.

பிரம்மா, விஷ்ணு, ஈஸ்வரன் இம்மும்மூர்த்திகளும் சாக்ஷிபூதமா யிருக்கிற தேவர்களும், தங்களிடத்தில் வீற்றிருக்கும் குருவாகிய தங்களை நான் நமஸ்கரிக்கின்றேன்.



ஸ்ரீ வேத வியாஸ பகவான்

நித்யாநந்தம் பரமஸுகதம் கேவலம் ஞானமூர்த்திம்
விச்வாதீதம் ககனஸத்ருசம் தத்வமஸ்யாதிலக்ஷ்யம் |
ஏகம் நித்யம் விமலமசலம் ஸர்வதீஸாக்ஷிபூதம்
பாவாதீதம் த்ரிகுணரஹிதம் ஸத்குரும் தம் நமாமி ||

நித்யானந்தமாய் பரமானந்தமுகிலாய் அத்வைதவஸ்துவாய் ஞானமூர்த்தியாய் அண்டத்துக்கப்பாலாய் வான்போன்றுனுய் தத்வமஸ்யாதி மஹாவாக்கியப்பொருளாய் ஒருத்தனுய் நித்தனுய் நிர்மலனுய் ஸ்தாணுவாய் ஸர்வாந்தர்யாமியாய் கற்பனை கடந்தவனுய் குணரஹிதனுயுமிருக்கிற பரமகுருவை நமஸ்கரிக்கின்றேன்.

॥ श्रीः ॥

ओं नमो भगवते वासुदेवाय

कृष्ण त्वदीयपदपङ्कजपञ्जरान्तः अद्यैव मे विशतु मानसराजहंसः ।
प्राणप्रयाणसमये कफवातपित्तैः कण्ठावरोधनविधौ स्मरणं कुतस्ते ॥

बद्धेनाञ्जलिना नतेन शिरसा गात्रैस्सरोमोद्गमैः
कण्ठेन स्वरगद्गदेन नयनेनोद्गीर्णबाष्पाम्बुना ।
नित्यं त्वच्चरणारविन्दयुगलध्यानामृतास्वादिनाम्
अस्माकं सरसीरुहाक्ष! सततं संपद्यतां जीवितम् ॥

करचरण कृतंवा कर्मवाकायजं वा
श्रवणनयनजं वा मानसं वा अपराधान् ।
विहितमविहितं वा नित्यकर्मानुसारं वा
यद्यत्कर्मकरोमितत्तदखिलं तवैवच ॥

हे कृष्ण! हे कृष्ण! हे कृष्णा ॥

THE LIBERTY PRESS, MADRAS-1

வணக்கப்பாவின் கருத்துரை

"கண்ணா! தாமரை இதழ்களைப் போலுள்ள உன் பாத கமலங்கள் இப்போதே என் மனதாகிற ராஜஹம்ஸத்தின் முன் நுழையட்டும். என்ப்ராணன் என்னை விட்டகலும் போது கபவாத பித்த ஸ்லேஷ்மங்களால் பீடிக்கப்பட்டு என்னுடைய கண்டமானது உன்னை எப்படி ஸ்மரிக்கக் கூடும். (1)

இருகக்கும்பிடும் என் இரு கைகளாலும் குனிந்த தலையினாலும், மயிர்க் கூச்சலுடன் சிலுக்கும் என் உடலினாலும், மேல் நோக்கி வரும் கண்ணீர்களால் நனைந்த என் நெஞ்சின் ப்ரதிபலிப்பான என் முகத்தினாலும், பிரதி தினமும், எல்லோராலும் வணங்கப்பட்ட உன் பாதங்களை நினைந்து நெக்குருகி என் நெஞ்சு நனையட்டும். (2)

கை கால்களினால் செய்யப் பட்டனவையும், என் நித்ய
வேலைகளினால் செய்யப் பட்டனவையும், என் நித்ய
சரீரத்தினால் செய்யப் பட்டனவையும், என் நித்ய
காது கண்களினால் செய்யப் பட்டனவையும், என் நித்ய
மனதினால் செய்யப் பட்டனவையும், தப்புகளிருந்தால்

ஏ கண்ணா! எல்லாம் உன் செயலே என என்னை காப்பாற்று! என்னை தீய செயல்களில் புகவிடாமல் செய்! உன் பாத கமல நினைப்பினால், என் நெஞ்சுருகி நனையட்டும். (3)

(குலசேகராழ்வாரின் முகுந்த மாலா)

மஹாபாரதத்தின் சுருக்க உரை

மஹாபாரதத்தின் முக்கிய கதை ஆஸ்திகர்களான எல்லா ஹிந்துக்களுக்கும் குழந்தைப் பருவ முதல் நம் பாட்டிமார்கள் மூலமும், மேதைப் பருவம் வரை கதா காலக்ஷேபங்கள் மூலம் ஊட்டி வளர்க்கப்படும் ஒரு பெரிய கதை. இதன் ஆரம்பமாகட்டும் சரி, இதன் நடுவிலாகட்டும் சரி, கடைசிவரை அநேக கிளைகதைகள் உண்டு. கிளை கதைகளின் கருத்து என்னவென்றால் ஒருவருக்கொருவர்

முன்னே நடந்ததை வைத்து தன் உட்கருத்தை வெளிப் படுத்தும் ஒரு வழி. இப்போதும் நம் பேச்சுகளில் அப்படி நிகழ்வதுண்டு. பெரிய கதையே ஒருவர் மற்றொருவர்க்கு சொன்னதுதான், ஆகையால் ராமாயண மகாபாரதக் காவியங்கள் சரித்திரமா அல்லது வெறும் கதை தானு என்ற கேள்வி பலரின் மனதை குழப்பிக்க வேண்டிய அவசியமே யில்லை. மஹாத்மா காந்தியின் சரித்திரம் கூட நூறு வருஷங்கள் சென்றபின் வெறும் கதையே ஆகிவிடும். ஏன், நம்முடைய வாழ்க்கை கஷ்ட சுகங்களே நம் பேரன் மார்களுக்கு ஓர் கதையாகிவிடும். அவைகளின் உட் கருத்தை எடுத்து நாமாவது நல்வாழ்க்கை வாழ, தீயச் செயல்களை அகற்றி, நற்செயல்களையே நாம் செய்ய வேண்டும் என்று நினைக்கின்ற பேரன் மார்களே கிடைப்பது அரிது. ஆகையால் சரித்திர பூர்வகமாக சொல்லப்பட்ட காவ்யங்களிரண்டில் பெரிய காவ்யம் மஹாபாரதம்.

இது வேத வ்யாஸரால் இயற்றப்பட்டது. அவரு டைய காலங்களில் காகிதங்கள் கிடையாது. அச்சகங் கள் கிடையாது. பனை ஓலைகளும் எழுத்தாணியும் கூட இருந்தனவோ இல்லையோ தெரியாது. இக்காவியத்தின் படி பாரதத்தின் கதா பூர்வமான சரிதை த்வாபரயுகத் தின் முடிவிலும் கலியுகத்தின் ஆரம்பத்திலும் நடை பெற் றதாக கருதப்படுகிறது. இச்சரிதையின் காலத்தை ஆராய்ச்சி செய்த சிலர் இது சுமார் 5000 அல்லது 6000 வருஷங்களுக்கு முன் நடந்திருக்குமோ என்று சந்தேகிக் கிருர்கள். இதை நிர்ணயமாக இத்தனை வருஷங்களுக்கு முன் நடந்தது என்று ஒருவரும் திடமாக சொல்ல முடிய வில்லை. ஏனென்ருல் அதற்கு போது மென்ற அத்தாட்சி இல்லை. ஆனுல், இந்நூலின் அத்தாட்சியையும் இந்நூலை இயற்றிய வியாஸரின் சொல்வன்மையும் குணவன் மையும் நோக்குங்கால், இச்சரிதையும் வியாஸரும் சேர்ந்திரண்டும் சத்யமாய் விளங்கிய த்வாபரயுகத்தின் முடிவில் நடந்தே இருந்திருக்க வேண்டும் என்று தோன் றுகிறது.

"யுகமுடிவு" என்ருல் என்ன?

யுகங்கள் 4 வகையாக பிரிக்கப்பட்டன : கிருத த்ரேதா, த்வாபர கலி. நான்கு என்ற எண்ணிற்கு ஒரு தனி மகத்துவம் உண்டு. நான்முகன், நாலு வர்ணம், நாலுவேதம்

இன்னும் அநேகம். இதில் எந்த யுகம் சிறந்தது எந்த யுகம் தாழ்ந்தது என்ற கேள்விக்கு இடமில்லே. ஏனென்ருல் ஒரு யுகம் முடிந்து இன்னெரு யுகம் ஆரம்பம் என்னும் போது ஒருப்ரளயமோ பூமியின் அழிவோ அல்லது அண்ட சராசரங்களின் மோதல்களோ எதுவும் விஞ்ஞான ரீதியாக வும் சரி,சாஸ்திர புராண ரீதிகளாயும் சரி ஏற்பட்டிருந்ததாக ஆதாரமே கிடையாது. ப்ரளயம் என்ற பதத்திற்கே அநேக அர்த்தம்.முக்கியமான அர்த்தம்“மாறுதல்” என்று ஆங்கி லத்தில் “*revolution*” என்பதேயாம். உலகிலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் ஒரு விதமான சட்ட பூர்வமாகவோ, கால பூர்வமாகவோ அல்லது சந்தர்ப்ப பூர்வமாகவோ *morality or moral life or even normal happy life*” என்று சொல்லும் “நல்லொழுக்கம்” தவறினல் தாளுகவாகவோ அல்லது சமுதாய சீர்திருத்தங்களினுலோ, அல்லது ஒரு பெரிய மகான் எனப்படும் அவதார புருஷன் தோன்றுவார். உலகச்சீர்திருத்தம் நடைபெறுவது யுகப்பிரளயம் எனலாம். எல்லா மதங்களுக்கும் சம்மதமான கீதையில் “யதா யதா க்லானிர் பவதபாரத தர்மஸம்ஸ்தாபனர்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ” என்று கண்ணன் கூறுகிருர்.

ஆகையால் பாகவதத்தில் யுகப்ரளயங்கள் எப்படி ஏற்பட்டன. பகவான் பத்து அவதாரங்கள் எப்போது எப்படி எதற்காக எடுத்து உலக தர்மத்தை நிலேநாட்டினுர் என்று பார்த்தால் தான் தெரியும். பாகவதத்தை படிக்க பெரிய சமஸ்கிருத மேதாவிகள் வேண்டியதில்லே. *Simple Samskrit* என்று சொல்லப்படும் சுலபமான ரீதியில் வ்யாஸ பகான் நமக்கு அருளிச் செய்த பாகவதம் ஓர் சிறந்த நூல்.

அந்நூலேப் பார்த்தால் யுகப்பிரளயங்களேப் பற்றி தெரிய வரும். அதில் கலியுகமே மிகச் சிறந்தது என்று கூறுவது விந்தையல்லவா? இதைப் பற்றித் தனியாக எவ்வளவு வேண்டுமானுலும் எழுதலாம். ஆனல் இப்போது மகா பாரதத்தைப் பற்றி பேசுவோம்.

மகாபாரதம் மேற்சொன்னபடி த்வாபரயுக முடிவுக்காக என்று குருக்ஷேத்திர யுத்தத்துடன் யுகம் முடிவடைந்தது கூறப்படுகிறது. பார்க்கப் போனல் ஓரோரு மகா யுத்தமும் ஓரோரு உலகப்ரளயம் தான். யோசனே பண்ணிப்

பாருங்கள்: முதல் உலக யுத்தம் (1914-18) நிகழ்ந்த காரணம்: *Kaiser* என்ருெரு ஜெர்மனி தேசத்து மஹாவல்லமை பொருந்திய அரசனின் சொந்தக்காரன் ஒருராஜ குமாரன் *Serbia* என்னும் தேசத்தில் கொலையுண்டதால் ஏற்பட்ட தீவிரத்தினுல், உண்டானது. அந்த ராஜ குமாரன் கொலையுண்ட காரணத்தை அறியுங்கள். அவனுடைய தீச் செயல்களே, காம வெறிகளே என்று விளங்கியது. கெய்ஸர் அந்நாட்டின் மேல் படைஎடுத்தான்: அந்நாடு மிகச்சிறிய நாடு, என்ன செய்வார்கள் பாவம். ஸெர்பிய நாட்டு ஏழை மக்கள், ராஜகுமாரன் கொலையுண்ட காரணத்தை விளக்கினுர்கள். கெய்ஸர் கேட்க வில்லை. எப்படி துச்சானளின் துயிலுறுறிப்படலம் துரியோதனன் மனத்தைகூடகரைக்கவில்லையோ, அம்மாதிரியே ஏழைமக்களின் கூக்குரல்கள் கெய்ஸரின் காதிலும் விழவில்லை. கோபத்தின் தாபமும், அகத்தின் தீவிரமும்செல்வத்தினும் வல்லமையின் கர்வமும் அப்பேர்க் கொத்தது. தர்மத்தின் வன்மையெல்லாம் குறைந்து அதர்மமே ஓங்கி விளங்கி வந்த ஓர் நிலையை அடைந்தார்கள். சில நாடுகள் அவனுடைய அதர்மச்செயலையும் ஆமோதித்தனர். சிலர் தமக்கேன் என்று சும்மாவும் இருந்தனர். ஆனுல் பல நாடுகள் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் கொதித்தெழுந்தன, ஜெர்மனிக்கு எதிரே போரிட முன் வந்தன. மஹாபாரத யுத்தத்தில் துாயோதனின் ஸேனுபலம் பெரியதா, பாண்டவர் ஸேனு பலம் பெரியதா என்ற கேள்விக்கு இங்கே சரியான உபமானம், காணவேண்டும். கடைசியில் என்ன வாயிற்று? ஐந்து வருடகாலம் பலத்த உலக யுத்தமாக மாறி அநேகம் பேர் மாண்டும் கெய்ஸரின் மனம் மாறவில்லை. அவன் வல்லமையை அழிப்பார் யாவரும் இல்லாமற் போயிற்று. உலகத்தையே தன்னுள்ளடக்கமாக ஆக்குவான் போலிருந்தது. ஆண்டவன் அப்போது அமெரிக்கர் மூலமாய் வந்து அவன் பலத்தையும் கர்வத்தையும் அடக்கினுர். பல தேசங்கள் நாசமாயின. இன்றைக்கும் அந்த முதல் யுத்தச் சுவடுகள் இருக்கின்றன. இது ஓர் கதையல்ல. இன்னும் கொஞ்சகாலம் சென்ருல் பெரிய புராணமாக மாறிவிடலாம்.

பிறகு 1935ல் அரக்கன் ஹிட்லர் தோன்றினுன். நாட்டுக்கு நன்மையே செய்யப்போவதாக சொல்லி, *Mein Kempf* என்னும் அறிய நூலை இயற்றி, நாட்டு ஜனங்களை

ஏமாற்றி, அரசாட்சியை கைபற்றினுன். அந்நாட்டவர்கள் அவனேயே நம்பினுர்கள். முதலெல்லாம் சீரழிந்திருந்த நாட்டின் செல்வத்தை பெருக்கினுன். பல நாடுகளுடன் உறவு கொண்டாடி அந்நாடுகளின் நட்பையும் மதிப்பையும் பெற்றுன். உலகமே அவனுடைய நற்செயல்களேப் போற்றின. அவன் இட்டதிட்டத்தைப் பார்த்து இட்டலி என்னும் தேசத்தவர் முஸ்ஸோலினி என்ற மற்ருெரு அரக்கனிடம் நாட்டை ஒப்படைத்தார்கள். ஜப்பானும் அதே மாதிரியே, கட்சியே இல்லாமல் ஒருவன் ஆட்சிக்கு இணங்கினுர்கள். அதுவே *Nazism, Fascism* எனப்படும் அரசியல் தத்துவங்களே கைக்கொண்டன. இவை இரண்டிற்கும் கொஞ்சம்தான் வித்தியாசம். அப்போது இவ் ஒவ்வொருவருக்கும் பதவியின் அகந்தையும், (அகங்காரம் என்று சொல்லப்படும் ஆறு துர்குணங்களில்“மதம்” ஆவது.) பொருமையும் (“மாத்ஸர்யம்” எனப்படுவது) ஏற்பட்டது. எந்த நாட்டின் வல்லமைக்கும் புத்திக்கும், செல்வத்திற்கும் காரணங்களாய் விளங்கிய “யூதர்கள்” என்ற ஜாதி வகுப்பினரையே பூண்டுடன் வேரறுக்க ஹிட்லர் முயன்ருன். மதியை இழந்தான். அரக்ககுணம் மேலோங்கியது. ஜெர்மனி சாம்ராஜ்யத்திலுள்ள யூதர்களே யெல்லாம் சுட்டெறிந்தான். யூதர்கள் ஓடினுர்கள். கதறினுர்கள்.அவர்களுடைய குழந்தைகள்,பாலூட்டும்தாய்மார்கள் எல்லோரும் விம்மி அழுதார்கள்.உலகம் பொறுக்குமா!கடவுள்தான் பொறுப்பாரா! மற்ற நாடுகளிலுள்ள யூதர்கள் வேண்டினுர்கள். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கியும், ஹட்லர் முஸ்ஸோலினி ஷமிட்ஸு இம் மூவரின் அட்டூழியங்களே பொறுக்காமல் எல்லா நாடுகளும் கிளம்பி இரண்டாவது மகாயுத்தம் உண்டாகி (1939-1944 இதுவும் 5 வருடங்களே நீடித்து, உலக ஜனத்தொகை மிகவும் குறைந்தது. பலவிதமான சேதங்கள் விளேந்த பின், மூன்று அரக்கர்களும் அழிந்தார்கள். தர்மம் மறுபடியும் மேலோங்கிற்று. அதர்மம் தாழ்ந்து சமாதானம் நிலவியது. இதுவும் ஓர் ‘யுகமுடிவு’ மாதிரியன்ருே?

இப்போதும் (1967)ல் ஜனத்தொகை அதாவது “பூபாரம்” என்பது மிகுந்து இருக்கிற நேரத்தில், 3வது மகாயுத்தம் எந்த நிமிடம் வந்துவிடுமோ, என்ன மாதிரி சேதங்கள் விளேயுமோ என்று மானிடர்கள் அனேவரும் திகைத்துக் கொண்டிருக்கிருர்கள்.

இதை எல்லாம் ஊடுருவிப் பார்த்தால் கடவுள் என்றிருந்தால் ஏன் சும்மா இருக்க வேண்டும்? ஒரு நினைப்பிலேயே அவ்வளவு சக்தி வாய்ந்த கடவுள் தர்மத்தை நிலை நாட்டி க்ஷேமங்களை உண்டாக்கலாமே என்ற கேள்வி எழும்புகிறதல்லவா?

“தெய்வம் மானுஷ ரூபேண” என்று தத்வத்தின் படி நல்ல செயல்களுக்கும்தீய செயல்களுக்கும் அவனேகாரண பூதனும் சாக்ஷிபூதனும் விளங்குகிறான் என்று பரமஆஸ்திகர்கள் கூறுகின்றார்கள் அல்லவா? அது வாஸ்தவமே.

வ்யாஸ பகவான் அருளிச் செய்த “அத்யாத்ம ராமாயணத்தில் மிகச்சிறப்பாக ஒவ்வொரு நிகழ்ச்சியையும் சம்வாத ரூபமாக விளக்குகிறார். அதில் ஸ்ரீராமன் எப்படி தர்மத்துக்கு கட்டுப்பட்டு நியாயங்களை வழங்கினார் என்பதை ஒரொரு எடுத்துறையிலும் அதிருசியுடன் காணலாம். அந்த கிரந்தத்தை படிக்காமல் இராமாயணம் என்னவென்றறியாமல் அதை பழிக்கும் அறிஞர்கள், இந்த மேற்சொன்ன மூலகாவியத்தை அக்கரையுடனும் ஆவலுடனும் படித்தார்களானால் நிஜமாகவே அறிஞர்கள் ஆவார்கள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

ராமாயணத்தையும் மஹாபாரதத்தையும் இகழ்ந்து பேசக் கூடிய நிலைவந்து விட்டதென்றால் எல்லார் மனதும் ததும்பித்தான்எழுகிறது. அந்த புத்தியையும் கொடுப்பதும் ஆண்டவன் தானே? ஒரே பரமாத்மா எல்லா ஜீவராசிகளுக்குள் இருந்து அச் ஜீவாத்மாக்களின் நல்வாழ்க்கையை கோரும்; அது போல் அல்லவா ஆண்டவனின் ஸ்வரூபம்?

ஆகையால் தர்மமோ அதர்மமோ எல்லாவற்றிற்கும் பின்னும் அதர்மமே ஓங்கி வளர்ந்து. தர்மம் அழியாது பார்த்து கொன்டே இருக்கிறோமல்லவா? ஏன்! ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வீட்டிலும் நிமிடத்துக்கு நிமிடம் ராமாயண கதையோ, பாரதக் கதையோ நிகழ்வதை பல ரூபங்களில் காண்கிறோமே.

பாரதத்தின் ஆரம்பம்

இப்போது முக்கிய தத்துவ விளக்கத்திற்கு வருவோம். அதுவும் மகாபாரதத்தின் தத்துவத்தை விளக்கி சொல்லுவதென்ருல் பல புத்தகங்கள் எழுதிக்கொண்டே இருக்கலாம். ஆனுல் சுருக்கமாக சொன்னுல் தான் விரசம் தட்டாமல் கவனிப்பார்கள் என்று சுருங்கச் சொல்ல வேண்டி இருக்கிறது.

உலகில் பஞ்சபாண்டவர்கள் ஐந்து ஸத்புத்திரர்களாய் பிறந்தார்கள். மற்றையகௌரவர் நூறுபேர்களாய் ஜனித்தார்கள். அதேவம்சத்தில் தாயாதிகளாய் பிறந்து இந்நூறு பேர்களும் சரி, அவர்களுடைய தந்தை தகப்பன் மார்களும் சரி, அஸத் புத்திரர்களாய் இருந்திருக்க முடியாது. பிறந்து பால்ய முதல் யௌவனம் வரை ஒருவருக் கொருவர் அண்ணன் தம்பியும் போல் மிகவும் அன்புடனும் எல்லாரும் கண்டு மகிழ ஆனந்தமாயும் வளர்ந்துதான் வந்தார்கள். குந்தியும் காந்தாரியும் மிகவும் ஒற்றுமையாக அக்கா தங்கை போல் பழகிதான் வந்தார்கள். அவர்கள் இருவருக்குள்ளும் இருந்த பரஸ்பர அன்பும் மரியாதையும் கடைசிவரையும் மாறவும் இல்லே. பாண்டவர்கள் வனவாசம் சென்றபோது கூட குந்தி காந்தாரியுடனேயே எப்போதும் போல பழகி வந்தாள். அப்பேர்க் கொத்த உத்தமிகள் அவ்விருவர். குந்தி சத்வ குணமுடையவள். எதையும் பொருக்கும் சக்தி அவளிடம் உண்டு. ஆனுல் காந்தாரிக்கு கொஞ்சம் பிடிவாதமும், அதனுல் ஏற்படும் வெறுப்புத்தன்மையும் கொஞ்சம் உண்டு. இருந்தாலும் அவளுக்கிருந்த தாராள மனப்பான்மை, உத்தம பதிவிரதைகளில் ஒருவளாக விளங்கச் செய்தது. காந்தாரியின் குறலுக்கு கண்ணனே ஒருதரம் நடுங்கினுன் என்ருல் பார்த்துக்கொள்ளுங்களேன். தந்தை திருதராஷ்டிரரோ பிறவிக் குருடராயிருந்த போதிலும் சகலதர்மங்களும் சிறந்த தர்ம ந்யாயங்களேயும் அறிந்தவர். குருடராயிருந்து சக்ரவர்த்தி பதவியை அதிகாரம் வகித்தார் என்ருல் அது சாமான்யமானதல்ல. சகோதரன் பாண்டுவின் பிரிவிலிருந்து விசனத்தாலேயே ஊனக்கண்களே இழந்தவன் போல இருந்தான் என்றே சொல்லலாம். அவ்வளவு சகோதர வாஞ்சையுடன் வாழ்ந்து வந்தவரானதால் தான் பீஷ்ம துரோணுதி ப்ரமுகர்கள் மாற்ருன் சகோதரர் விதுரர் உள்பட, அந்த குருட்டு சக்ரவர்த்தியின்

வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு நடந்து வந்தார்கள். ஏன்? துர்யோதனனே தந்தையின் கோபத்திற்கும் தாபத்திற்கும் ஆளாகக் கூடாது என்று தன் பேச்சு மொழிகளிலும் சரி, தன் நடத்தையிலும் சரி, தன் உபசாரத்திலும் நடந்து வந்தான். அதனுல் தான் அந்த தந்தைக்கு கடைசி வரை அப்பேர்ப்பட்ட பிள்ளையின் எந்தக்காரியத்திலும் தலையிடாமல் பூரண நம்பிக்கையுடனும் தெய்வ சிந்தனையிலும் காலத்தை கழித்தான். அப்பேர்க் கொத்த பிள்ளை பீமன் கையில் மாண்டான். அதில் கண்ணனின் தூண்டுகோலால் மாண்டான் என்று கேள்விப்பட்டதும், பீமனை தன் பிள்ளை போல் பாவித்து வந்த த்ருதராஷ்டிரன் அவனை தன் கையாலேயே அதே வஞ்சனையினுலேயே கொல்ல ஆசைப்பட்டான். கண்ணன் நடுவில் புகுந்து இரும்புத்தூணை நடுவில் நிறுத்தி யிராவிட்டால் பலத்திற்கே உருவான பீமனும் த்ருதராஷ்டிரன் கையில் பொடி சூரணமாய் போயிருந்திருப்பான். இந்த விவரங்களெல்லாம் வ்யாஸ பாரதமோ, அல்லது அதன் தமிழ் பூர்வமாயுள்ள வில்லிபுத்தூராரின் பாரதத்தையே படித்தவர்கள், அந்த நூல்களில் விவரிக்கப்பட்ட சம்வாதங்கள் மூலம் ஊடுருவிப்பார்த்து அறிவார்கள். நான் அவைகளை ஆர்வத்துடன் எழுதுவதற்குக் காரணம் அந்நூல்களில் உள்ள ஸாராம்சம்.

1. "த்ருதராஷ்டிரன்" தத்துவம்

அவ்வளவு சக்திவாய்ந்த த்ருதராஷ்டிரன் தத்வ ரூபமாய் பார்த்தால் எதைக்குறிக்கிறது? "மூடத்தனம்" என்றொரு அறிய வார்த்தை எல்லா பாஷைகளிலும் மரபு மாத்திரம் திரும்பி ஒரே அர்த்தத்துடன் விளங்குகிறது. பல ரூபங்களிலும் விளங்குகிறது. அது எப்படி என்ருல், மூடம்' என்பது பலவித பாவங்களைக் குறிக்கிறது. சாதாரணமாக முட்டாள் தனம் என்று எல்லோரும் எண்ணுகிறோம். அது அர்த்தம் என்றும் சொல்லுகிருர்கள். அது மிகவும் தப்பு. முட்டாள் தனம் வேறு, மூடம்வேறு. முட்டாள் தனம் அல்லது குருட்டுத்தனம் என்ற முடிவில் முடியலாம். ஆனல் மூடம் என்பது சிறந்த அறிவாளிகளும் சில காரியங்களில் மௌடீகமாய் அதாவது மூடத்தனமாய் நடந்து கொள்வதுண்டு. அதனுல் அவர்கள் முட்டாள்கள்

அல்ல. வானம் மூடமிட்டிருக்கிறது, என்கிறோம் மப்பும் மந்தாரமுமாய் இருக்கும்போது. ஆகையால் அப்பதத்திற்கு இருள், கருப்பு, த்ருடம் என்ற அர்த்தங் களுமுண்டு. உதாரணமாக மூடபக்தி மூடநம்பிக்கை மூடச்சொல்கள் என்று பலவிதமாக பலவித திரிந்த அர்த்தங்களுடன் பேசுகிறோம். நிஜமான அர்த்தங்கள் என்ன வென்றால் மூடபக்தி, ஒரே சித்தத்துடன் ஒரே கருத்துடனும் ஆண்டவன் பாதங்களை கட்டாயம் அடைந்தேதீருவோம் என்பது மூடபக்தி. துருவன், ப்ரஹலாதன், நந்தனர் இன்னும் மற்றைய நாயன்மார்களையும் ஆழ்வாராதிகளையும் கூறலாம். துருவன் மற்றையர்கள், முட்டாள்கள் கூறுகிற படி பார்ப்பனக் கதைகளாக இருக்கலாம். ஆனால் நாயன் மார்கள் ஆழ்வாராதி வர்க்கங்களும் சரித்திர பூர்வங்கள் அல்லவா? இல்லை இவைகளும் மூடக்கதைகளா? இதே மாதிரி தான் மூடநம்பிக்கைக்கு த்ருடமான நம்பிக்கை என்று அர்த்தமே யொழிய முட்டாள் தனமான நம்பிக்கை என்ற தப்பர்த்தமல்ல. மூடநம்பிக்கை என்றால் "*superstition*" என்ற அர்த்தத்தில் பேசு கின்றனர். அந்த *superstition* என்ற அழகான ஆங்கில பதத்திற்கே அர்த்தம் வேறு. அதை நடைமுறையில் கொண்டுள்ள அர்த்தம் வேறு "*That which states about super things, beyond the comprehension of human beings*" என்பதே அப்பதத்தின் தாத்பர்யம். மஹாத்மா காந்தியின் கொள்கைகளெல்லாம் அம்மூடநம்பிக்கையான ஒரே நம்பிக்கையினால் தான். இந்த வழியில் சென்றால் சுதந்திரம் அடைந்தே தீருவோம் என்ற த்ருடமான நம்பிக்கையினால் தான் அவருடைய உயர்ந்தகொள்கைகள் எழும்பின. ஸத்யாக் ரஹம்என்பதுஸதாரணமான கொள்கை அல்ல. உண்ணாவிர தம்என்பது மிகவும் கடினமான விரதம். ஆப்பிரிக்க மக்கள் இக்கொள்கைகளை பின்பற்ற முயற்சித்து அவைகளில் தோல்வியுற்று பயங்கர மாவ் மாவ் என்ற வெள்ளையனை கண்டால் கொல்லுவதுதான் சரி என்றெல்லாம் தத்வங்கள் கிளம்பி, அநேக பேர்கள் மாண்டு, பின்பு வெள்ளையர்களே எல்லா கறுப்பினர்களும் மாண்டு விட்டால் அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமற் போனாலும் காட்டையும் மலை செடி மரக்களைத்தான் ஆள வேண்டி வரும் என்று கூட்டி முன் யோசனையுடன் உணர்ந்து ஆப்பிரிக்கர்களை நல் வழியிலேயே ராஜ்யத்தை நாகரீக வழியில் ஆள்வதை புகட்டி சுதந்திரம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

ஆதிசங்கரர் "ப ஜ கோ வி ந் த ம், பஜகோவிந்தம் பஜகோவிந்தம் மூடமதே ஸம்ப்ராப்தே ஸம்நிஹிதே காலே நஹி நஹி ரக்ஷதி டுஹ்கு ங்கரணே அங்கே 'மூடமதே'என்ற பதத்திற்கு ஏ முட்டாள்களே என்றஅர்த்தமேயில்லை. அப்பேர்க்கொத்த உயர்ந்தகுணங்கள் படைத்த ஆதிசங்கர் உள்ளத்தில் மற்றவர்களை முட்டாள்கள் என்று சொல்ல எண்ணமே தோன்ருது. இருப்பினும் அவ்விடத்தில் அப்ப தத்திற்கு "ஒரே புத்தியுடன் நிரந்தரமான கொள்கையுடன் (*"Unshakeable faith"*) பஜகோவிந்தம் கோவிந்தனை துதி என்ற அர்த்தம்.

ஆங்கிலத்தில் "*allegory*" தொடர் உருவகம் என்பார்கள். அதுபோல த்ருதராஷ்டிரன் "த்ருடம்" என்ற அர்த்தமோ, மூட ம,என்ற படியோவைத்துக்கொள்ளலாம். மற்றென்று, ராஜ்ய பார விஷயங்களில் வெகு சமர்த்தன். எதையும் துரிதமாகச் செய்யக் கூடியவன். "நாளை பார்க்கலாம்" என்பதே கிடையாது. அப்பப்போது சாமர்த்திய மாகவும் நல்லபடியாகவும் த்ருடமான மனதுடனும், துரிதமான முடிவுகளுடனும். எல்லோரும் இன்புற வாழ வேண்டும் என்ற ஒரே மூட அல்லது குருட்டுக் கருத்துடனும் ஆண்டு வந்த ஓர் ராஷ்டிரபதி அல்லது பேரரசன். குருட்டுக் கருத்து ஏன் என்ருல், மாயையால் சூழப்பட்ட இவ்வுலகில் ஏற்ற தாழ்வு இல்லாமல் இருக்க முடியாது. அவ்வேற்ற தாழ் வினல் விளையும் பொச்சரிப்பு பொருமை இம் மாதிரியான துர்குணங்கள் வளர்வது ஸகஜம். அத் துர்குணங்களைத் தடுக்க ஸத்குணங்கள் மேலோங்க விடுவது ஒரே வழி தவிர வேறே கிடையவேகிடையாது. இவ்வாறு துர்குணங் களையும் ஆறுஸத்குணங்களையும் சொல்லும்போது கீதையில் பகவான் படிப்படியாக அவைகளை தொகுத்திருக்கிருர். ஒன் றிஞல் மற்றென்று விளைவது என்றும் கொள்ளலாம் பரம ஸாதுகள் கூட 4துர்குணங்களையும் (காம, க்ரோத மோஹ லோபங்கள்) 90% போக்கி விடக் கூடும். துர்குணங்கள் எல்லாவற்றையும் போக்கிவிட்டால் அவனே ஆண்டவன் ஆகிவிடுகிருன் 5வது துர்குணமாகிற மதத்திஞல் ஏற்பட்ட (கர்வத்திஞல் ஏற்பட்ட என்று அர்த்தம்) 6வது மாத்ஸர்யம் என்பது. அதுதான் பொச்சரிப்பு. இதெல் லாம் சேர்ந்துதான் அகங்காரம் மமகாரம் அல்லது "தான்" என்பது. தன்னை மறந்து நிஷ்காமியாய் விளங்கிய பேரரசன் ஜனகன் ஒருவன் தான். மற்றவர் யாருமே யில்லை எனலாம். எல்லாம் கற்று எல்லாவற்றையும் துறந்த துறவி

கள் கூட சில சமயங்களில் தன்னை மறந்து தன்னை பற்றி கொஞ்சம் தற்புகழ்ச்சியாய் பேசி மற்றவர் மகிழ்வதை பார்த்து தான் மகிழ்வதை அன்றும் கண்டோம் இன்றும் காண்கிறோம்.

ஆகையால் தான் குருட்டு நம்பிக்கையாகிய "எல்லோரின் நலம்" என்பதை கற்றறிந்த திருதராஷ்டிரன் குருடனாகவே ஆனான். குருடனாக சொல்லப்பட்டிருக்கிறது. கடைசியில் தன்னலம் என்றும் பாராதவன் புத்ர பாசம் என்று வரும்போது தவறினான். அதேமாதிரி "மூடம்" உள்ள எம்மனிதனுக்கும் தன் நலம், சுயநலம், என்று வரும்போது, கொஞ்சமேனும் தயக்கம் உண்டாகத் தான் உண்டாகும். தந்நலம் கருதாது போர் செய்யும் வீரன் கூட எதிரி தன்னைவிட பலசாலி என்றோ தான் சாவது நிச்சயம் என்ற துணிவு ஏற்படுமுன், அல்லது தான் சாகும் நேரத்திலாவது ஒரு கணமேனும் மனம் கலங்கும். யமனெதிரில் எவர் போராடமுடியும் ? இதற்கு த்ருஷ்டாந்திரங்கள் மஹாபாரதத்திலிருந்தே அநேக கதைகள் கூறலாம். த்ருதராஷ்டிரனே அதற்கும் த்ருஷ்டாந்தம் தானல்லவா? அதற்கு நேரெதிராக சாஷாத் யமதர்மனின் புத்ரனாகக்கருதப்பட்ட தருமராஜன் போரில் புகுந்திருந்தால் அதாவது வீரமூர்க்கத்துடன் வைர்ய பாவத்துடன் புகுந்திருந்தால், பாரதப்போரென்ன. கிருஷ்ண பரமாத்மாவே நடுங்கும்படியாக அண்டசராசரங்களெல்லாம் நடுங்கி யிருந்திருக்கும். அப்போரையே தருமர் ஸ்ரீகிருஷ்ணனின் விளையாட்டாகக் கருதி அவ்விளையாட்டுக்கு தானுமிணங்கி, தன் மாமனாகிய சல்யனுடன் விளையாட்டுப்போர் நடத்தினாராம்.

2. சந்தனு

குருடப்பிறவியாக விவரிக்கப்பட்டுள்ள இத் த்ருதராஷ்டிரன், தைவீகமென கருதப்பட்டுள்ள கங்கையையே மணந்துகொண்ட ஸந்தனுவுக்கும் செம்படவச்சி ஸத்யவதிக்கும் பிறந்த ஸந்ததியில் வளர்ந்து, சந்திரவம்சம் என பெயர் எடுத்த வம்சத்தில் பிறந்தவன். பெயர்களை கவனிக்கும் போது, எல்லாம் காரணப் பெயர்கள். கங்கையோ எம்பெருமான் சிவன்முடியில் இருக்கப்பட்டவள். காங்கேயன் என்று பெயரெடுத்த முருகக் கடவுளின் தாய். ராமாயணத்தில் வரும் குகனின் தாயும்

அவளே. என்றைக்கும் அழிவேயில்லாத கங்கையையே மணந்தவன் ஸந்தனு. ஸாத்வீகமே உருவாய் விவரிக் கப்பட்டவன். ஸத்வகுணங்களையே அநுஷ்டிப்பவன். தானே ஸத்வம் என்பதால் தான் "ஸந்தனு" என்று பெயரிடப்பட்டது. ஸத்துவ குணங்களுக்கு இயல் பாயுள்ளது ஸத்யமே யன்றோ! ஆகையால் தான் அவ னுக்கு ஸத்யவதி என்ற மனைவி அமைந்தாள் என்றார் வ்யாஸ பகவான். அதிக ஆழ்ந்த தத்வம் நிறம்பியது மஹாபாரதம். ஸத்வகுணங்கள் எவனிடம் பரிபூரணமாக உளதோ அவனி டத்தில் ஸத்யமே குடிகொள்ளும் அல்லவா? அப்பேர் பட்டது முன் கூறியபடி ஸதாசிவம் என்று கூறப்பட்ட ஓர் உருவு அன்றோ? ஆகையால் தான் கங்கையும் அவனி டம் ஈடுபட்டு அஷ்ட வஸுக்களையும் பெற்றாளாம். அஷ்ட வஸக்களே அஷ்டதிக்குபாலகர்கள். அஷ்ட மருத்துக்களும் அவர்களே. பஞ்சபூதங்களுக்கு அதிபதியாயுள்ளவர் களும் மூன்றுமூர்த்திகளும் சேர்ந்து எட்டுபேர்களும் அவர் களே. ஆகையாலேதான் கங்கைக்கு இவ்வுலகில் மாத் திரமல்ல. பூர், புவர், ஸுவர் என்று சொல்லப்பட்ட 3 லோகங் களிலும் அவளுக்கு புகழுண்டு. அவளை துதிக்கிறார்கள். போற்றுகிறார்கள். அவள் ஒருவளிடமே ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற 3 குணங்களும் பரிபூர்ணமாயுள்ளன. அவ ளுக்கு வாயுவின் பலமுண்டு. அக்னியின் கோபமுண்டு. வருணனின் சாந்தமுண்டு. சிவனின் சக்தியுண்டு. யம னின் தருமமுண்டு. இந்திரனின் பராக்ரமமுண்டு. விஷ்ணு வின் புத்தியுண்டு. ப்ரம்மனின் படைப்புத்திறமுண்டு. எங்கு பார்த்தாலும் பரந்திருக்கக்கூடிய விச்வரூபத்தையும் காண்கிறோம். ஒன்றுமேயில்லாமல் வரக்ஷித்தனத்தையும் காணலாம். (*emptiness*) அன்றும் இன்றும் என்றும் எப் போதும் நதிகள்ரூபமாய் மேற்கூறிய குணங்களுடன் விளங்கிக் கொண்டிருக்கிறாளல்லவா? இப்பேர்பட்டவளை மனைவியாக அடையவோ, முடியில் தரிக்கவோ ஸந்தனு ஸாக்ஷாத் ஈசுவரனின் ஒரு உருவு என்று ஏன் கொள்ளப் படாது? சந்திரன் ஈசுவரனின் அணியாக விளங்குபவன். ஆகையால் ஸந்தனுவின் வம்சமே சந்த்ர வம்சம் எனக் கொள்ளப்பட்டது. ஹரிசந்திரன், ஸ்ரீராமர் இவர்களெல்லாம் இதே மாதிரி ஸூர்யவம்சம் எனப்பட்டது.

அப்போது ஸூர்ய வம்சத்திற்கும் சந்திர வம்சத்திற் கும் உள்ள வித்தியாசங்கள் என்ன என்று ஆராயுங்காலத்

தில், ராமாயணத்தையும் மஹாபாரதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியவரும். தற்கால ரீதியில் பேசும்போது ஆரிய வம்சத்திற்கும் திராவிடவம்சத்திற்கும் என்ன வித்தியாசங்கள் உள்ளனவோ அவைகளே சூரிய சந்திர வம்சத்தினங்களுக்கும் உள்ள வித்தியாசங்கள். அவைதான் என்ன? எப்படி ஆரியர்களுக்கும் அசல் திராவிடர்களுக்கும் (நாமெல்லாம் அசல் ஆரியர்களுமல்ல. அசல் திராவிடர்களுமல்ல. ஏன் இந்தியா பூராவுமே எனக்கூடச் சொல்லலாம்.) ஆசாரங்கள், அநுஷ்டானங்கள், துதிமுறைகள் பழக்க வழக்கங்கள், உடை ஆபரணுதிகளில் வித்தியாசங்கள் காண்கிறோம். அதே மாதிரிதான் சூரிய வம்சத்தினருக்கும் சந்திர வம்சத்தினருக்கும் உள்ள வித்தியாசங்களும். ஆனல் அவர்கள் தனித்தனியாக இப்பாரத கண்டத்தில் வாழவுமில்லை, வாழ விரும்பவுமில்லை. அவர்களிலும் *intermarriage* (கலப்பு மணம்) என்று சொல்லுகிறார்களே அது நடந்து கொண்டுதானிருந்தன என்று புராணங்களிலுள்ள பல கதைகளிலிருந்து காண்கிறோம். ராமாயணத்திலும் சரி, அம்மாதிரி திருஷ்டாந்திரங்கள் பல. ஆனல் ஒரே ஒரு முக்கியமான நிபந்தனை என்னவென்றால் *inter-caste*(வர்ண ஸங்கிரஹம்) *marriage* களிலும் கூட, பெண்கள் ஆண்களின் வம்சமோ அல்லது வர்ணமோ அவர்களின் ஆசார பழக்க வழக்க ஒழுக்கங்களை தழுவ வேண்டும். இந்த ஒழுக்கங்கள் ஒன்று ஒசத்தி, தாழ்வு என்ற ப்ரசினையே எப்போதும் கிளம்பியதுமில்லை. அதற்கு உண்டான ப்ரமேயமும் ஏற்பட்டதுமில்லை. சூரிய வம்சத்தைச் சேர்ந்த மஹரிஷிகள், ராஜாக்கள், கோத்ராதி ஜனங்கள், 4 வர்ண பேதங்களுடன் இருந்தார்கள். சந்திர வம்சத்தைச் சேர்ந்த மஹரிஷிகள், மஹாராஜாக்கள், உயர்ந்த குலங்கள், உயர்ந்த உத்தம குணசீலர்களும் இருந்தார்கள். பார்க்கப்போனல் சூரியனும் சந்திரனும் இவை இரண்டும் மஹாதேவனின் இரு கண்கள் அல்லவோ? எந்த கண் ஒசத்தி, எந்த கண் தாழ்வு சொல்லுங்கள் பார்ப்போம்.

ஆகையால் சந்தனு சந்திரவம்சத்திற்கு ஒரு மூல புருஷராய் கொள்ளலாம். அதாவது நல்ல குணங்கள். பழக்க ஒழுக்கங்கள் நிறைந்த பண்புமிக்க ஓர் மூல உரு. அவ்வுருவிலிருந்து கிளம்பிய மற்ற உருவுகள் பலவிதமாய் பலரூபங்களாய் பலவிதமான குணங்களுடன் கிளம்பின. இது எவ்வாறு என்பதுதான் நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

2741

3. பீஷ்மர்

ஸந்தனுக்கும் கங்கைக்கும் மொத்தம் 8 பேரன்கள் பிறந்தார்கள். இவர்கள் அஷ்டவசுக்கள் என்பார்கள். எட்டு திக்குகளிலும் எட்டு திக்கஜங்கள்(அதாவது யானைகள்) மேல் இருந்துகொண்டு இவ்வண்டத்தை காக்கிறார்களாம். இவ்வஷ்டவசுக்களும் புராணங்களில் பிறந்து பிறந்து குழந்தைப்பருவத்திலேயே ஒருவர் தவிர மற்றவர் இறப்பதையும் காண்கிறோம். தேவகி வயிற்றிலும் இவ்வஷ்டவசுக்கள் பிறந்து கிருஷ்ணனை தவிர மற்ற எழுவரும் கம்ஸன் கையில் மாண்டார்கள். அம்மாதிரி ஸந்தனுவுக்கு பிறந்த எட்டு பேர்களில் கடைசியாக உயிருடன் தப்பி பூமியில் என்றும் நிலைநாட்டிய பேருடன் விளங்கியவர் தான் பீஷ்மர். இதேமாதிரிதான் கண்ணனும்.

பீஷ்மரும், கண்ணனும் இருவரும் 8 வசுக்களில் இருவராக இருந்தவர்கள் என்று சொன்னோமல்லவா! இவர்களுக்குள் முக்கியமான ஓர் மேலோங்கிய ஒற்றுமையை காண்கிறோம். இருவரும் த்ருடபிரம்மசர்யர்களாக விளங்கினார்கள். ஆச்சர்யமாக இருக்கிறதா! பீஷ்மர் தான் செய்த சபதத்தின்படி வைராக்கியத்துடன் ப்ரம்மசரியத்தை ஒழுங்காய் நடத்திக் காட்டியவர். அதனாலேயேதான் இச்சா மரணம் என்ற ஓர் உன்னத நிலையை அடைந்தவர். கண்ணனோ பதினெட்டாயிரம் மனைவிமார்களுடன் வசித்ததாகவும் அவருக்கு அநிருத்தன் என்ற பிள்ளை கூட உண்டு என்றும் கூறப்பட்டு இருக்கிறது. இருந்தும், பீஷ்மரைவிட அதிதீவிர ஒழுங்குடன் ப்ரும்மசரியத்தை கடைப்பிடித்தவர் கண்ணன் என்றும் கூறப்படுகிறது. எப்படி என்றால் ஒருகாலத்தில் அக்னியை குண்டத்தில் எழுப்பி அது மிகவும் காடாக்னியாக விளங்க, அதை சமனப்படுத்த சுத்த பிரம்மசாரியானவன் ஒருவனால் தான் முடியும் என்று எல்லா மஹரிஷிகள் கூற, ஒருவரும் அந்த நெருப்புப்பிழம்பின் அருகில் கூட நெருங்குவதற்கு பயப்பட்டார்களாம். அதாவது தங்கள் தங்களுடைய ப்ரம்மசரியத்தில் ஒழுங்கீனம் ஏதாவது இருந்திருக்குமோ என்று அச்சப்பட்டார்களாம். கடைசியில் பீஷ்மர் கூட பயப்பட்டாராம். கண்ணன் அப்போது தான் தன்னுடைய நைஷ்டிக ப்ரம்மசரியத்தை எல்லோருக்கும் விளக்கினாராம். என்ன அர்த்தம்! (*vide Bhishma's story from Maha-Bharata by C.R.*)

எல்லோர் உள்ளத்திலும் பரமாத்ம ஸ்வரூபியாய் விளங்கிக் கொண்டும் ஸகல விதமான தேவர்களில் ஒருவ ராய் நின்றுகொண்டும் (கீதை. அ. 11), எல்லோருடைய கர்மானுஸாரத்தினுலும், புத்தியானுஸாரத்தினுலும், குண விசேஷங்களாலும் செய்யப்படுகிற காரியங்களுக்கு ஸாக்ஷிபூதனுயும், ஆட்டி வைத்துக்கொண்டிருப்பவனுகவும் இருக்கிற அந்த பரமாத்ம ஸ்வரூபமானது, ஜீவாத்மாவின் மனதாலும் புத்தியாலும் இந்திரியங்களாலும் நடத்தப்பட்ட காரியங்களால் ஒரு கொஞ்சமும் கூட பாதிக்கப்படமாட் டாது. ஸ்ரீகிருஷ்ணுவதாரத்தின் விசேஷமே அதுதான். அவனும் ஒருடலைப் படைத்துக்கொண்ட மாதிரியும் அவனும் பல வித மான காரிய விசேஷங்களில் ஈடுபட்டு வைக்கப்பட்டிருந்த போதிலும், அவனுடைய பரமாத்மா ஸ்வரூபமும், ஜீவாத்மஸ்வரூபமும் ஐக்கியப்பட்டு தான் ஒருருவே ஆட்டிவைக்கும் கடவுள் என்று உணர்த்தும் போது நாம் என்ன அறிகிருேம்? கேவலம் காரியா கர்ரி யங்கள் வேறு. மனம் வேறு. உதாரணமாக ஒருபையன் கையில் புத்தகம் வைத்துக்கொண்டு மனதை எங்கெங்கோ ஓடவிடுகிருன். பார்ப்போருக்கு அவன் படிப்பதாக காண் கிருன். ஆனுல் அவன் மனதோ எங்கோ ஓடுகிறது. அவனுடைய இந்திரியங்களும் பலவித சேஷ்டைகளிலும் அதேசமயத்தில் ஈடுபடுகின்றன. ஆகையால் எது முக்கியம்? மற்றவை எவையும் முக்கியமல்ல. அந்த மனது என்று சொல்லப்படுகிற ஒரே தத்வம் தான் முக்கியமானது. மனதை அடக்க வேண்டும். "மனக்குரங்கு", ஏகாக்ர சிந்தையுள்ள மனம்", என்றெல்லாம் கூறப்படுவது மேற்சொன்ன க்ருஷ்ணனின் ப்ரும்மசர்யத்தை விளக்கிக் காட்டுகிறதல்லவா?

மேலும் "பீஷ்மர்" என்பதே தேவர்களால் அளிக்கப் பட்ட ஒரு பட்டம். ஸத்யவதியின் தகப்பனிடத்தில் தான் கல்யாணமே செய்து கொள்வதில்லை. தனக்கு எந்த விதத் திலும் புத்திர ஸந்ததியை உற்பத்தி செய்து கொள்வதில்லை. என்ற திட வைராக்ய சபதத்தை தேவர்களறிய ஏற்றுக் கொண்டதால் அவருக்கு "தேவானும் ப்ரிய:" என்றும் "பீஷ்மன்" அல்லது ஒரு கடுமையான வ்ரதத்தை மேற் கொண்டு அதை நடத்தியும் காட்டுபவன் ஆதலால் எல்லா தேவ மனுஷ்ய கோடிகளாலும் போற்றப் படப் போகிற வன் என்று தேவர்களே அவருக்கு பட்டமளித்தார்கள்.

அதற்கு முன்னும் அவருக்கிட்ட பெயர் "தேவவிரதன்". எவ்வளவு அழகான காரணப் பெயர்? சதா தைவசிந்தனை யிலும் அதன்படி நல்லொழுக்கத்திலும் நல்ல எண்ணங் களிலுமே கருத்துடையவர்.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்ன வென்றால் ஒருவனுக்கு உள்ளம் என்பது பரிசுத்தமாயிருக்கு மேயானால் அதாவது, தீய எண்ணங்களுக்கே இடம் கொடுக்காமல் இருப்பவனானால், அவனுடைய பேச்சுகளும் செயல்களும் கூட நல்வழியிலேயே இருக்கும் என்பது கருத்து. இதையே தான் பகவத் கீதையில் திரும்ப திரும்ப உறுத்தி உறுத்தி கூறுகிறார் கிருஷ்ண பரமாத்மா.

Tathra Sathvam Nirmulathvath Prakasam anamayam,
Sukhe Sangena Badnati Gyana sangena chaanaga,,
(ch. XIV.6)

(Of these, satva,being immaculate, is, Iluminating and flawless: it binds through selfidentification with happiness and wisdom, O sinless Arjuna:—
(Translation by Annie Beasent)

Karyam ithyeva yatkarma niyatam kriyate Arjuna!
Sangam tyaktva Palam chaeva satyago Satviko mathaha,,
(ch. XVIII. 9)

(An action enjoined by the scriptures which is done as a duty, giving up attachment and fruit, that alone is regarded as a sattvic form of relinquishment)

Sarva bhutheshu ena ekam Bhavam avyyamikshate
Avibhaktam Vibhakteshu Tatgyanam Viddi Satvikam.
(ch. XVIII. 20

(That by which man sees one imperishable entity in all beings undivided among the divided, know that knowledge to be Sattvic.)

Mukta sango Anahamvadi Drityutsaha Samanvitaha
Sidhya Asidhyon Nirvikarahr Karta Satvika vuchyate,,
(ch. XVIII. 26)

(Freed from attachment, unegoistic, endowed with firmness and vigour and unaffected by success or failure such a doer is said to be Sattvic)

Pravrithim cha Nivruttim cha karya karya Bayabaye bandam Moksham cha ye Vetti budhihi sa Parta Satviki
Ch.—xviii. 30)

(Arjuna, that reason which knows what is right action and what is right cessation of action what must be done and what ought not to be done, what is fear and what constitutes fearlessness, what is bondage and what is liberation, is Sattvic)

ஸத்வ குணம் (அல்லது நல்லுள்ளம்) எப்பேர்ப் பட்டது, ஸாத்வீக த்யாகம் என்பது என்ன, ஸாத்வீக ஞானம் எங்ஙனம், ஸாத்வீக செயல்கள் என்னென்ன, ஸாத்விக ஆராய்ச்சி முடிவில் எப்படி இருக்க வேண்டும் என்பதை கண்ணன் தெள்ளத் தெளிவாக எடுத்து உரைத்திருக்கிறன். அப்பேர்க்கொத்த புருஷராய் விளங்கினராம் பீஷ்மா. அதனுலேயேதான் அவருக்கு மரணம் என்பது கிடையாது. அவர் கோரிய போதுதான் கிடைத்தது என்ருல் யாருக்கு அம்மாதிரி கிட்டும். தாயுமானவர் கூறியப்ரகாரம் "இன்றைக் கிருத்தாரை நாளைக்கிருப்பர் என்று எண்ணவோ திடமில்லை" என்றபடி பாமரனுக்கு மரணத்தை எதிர்க்கக்கூடிய சக்திகிடைக்க வேண்டுமென்ருல், பீஷ்மரைப்போன்று ஸாத்வீக குணங்களையே மேற்கொண்டவனுய் இருக்க வேண்டும். எவனும் ஒருவன் சீர்கெட்ட வாழ்க்கை நடத்தியிருந்த போதிலும் எந்த சமயத்திலும், இப்பொழுதிலிருந்தே கூட, தன் வாழ்க்கைச் செய்கைகளை திருத்தி நல்வழியிலே செல்ல முற்படலாம் என்பார்கள். போன வாழ்க்கையைப் பற்றிசிந்தனையே வேண்டியதில்லை. கண்ணனே கீதையில் சொல்கிறன்.

Apichet Suduracharo bhajate Mam Ananyabak Sadhureva Samantavyaha Samyak Vyavasito hi Saha.
(Ch-IX-30)

(Even if the vilest sinner worships Me with exclusive devotion, he should be considered a saint; for, he has rightly resolved i.e, he is positive in his belief that there is nothing like devoted worship.)

மேலும், கண்ணன் பீஷ்மர் இருவரும் வசுக்கள் என்று சொன்னோம். இருந்தபோதிலும், கண்ணன் தான் பரமாத்மா ஸ்வரூபமே என்று தன் அவதார விசேஷத்தை காட்டியே விட்டான். (அது சிசுபாலன் போலுள்ள அந்தகர்களுக்கு புலப்படவில்லை.) எனினும், பீஷ்மர் அந்த அவதார விசேஷத்தை உணர்ந்து, தான் அம்புப் படுக்கைமேல் படுத்திருந்தபோது எல்லோருக்கும் உணர்த்தியதுமல்லாமல் "விஷ்ணு ஸஹஸ்ரநாம" த்திற்கே மூலபுருஷராய் விளங்கினர். அதனால் பீஷ்மர் என்ற உருவை சிந்திக்கும்போது ஜிவாத்மா பரமாத்மாவை அடைய என்னென்ன முயற்சிகள் எடுத்துக் கொள்கின்றன என்பதை உணர்த்துகிறதல்லவா? பாரதப் போரில் ஒருநாள் பீஷ்மர் தலைமை வகித்த போது, கண்ணன் அர்ஜுனனுக்கு தேரோட்டியாகவும், தான் ஆயுதம்எடுத்து யுத்தம் செய்வதில்லை என்ற ப்ரதிக்ஞை செய்திருந்த போதும், பீஷ்மர் அப் ப்ரதிஞ்ஞையை கண்ணன் எம்மட்டும் கடைபிடிக்கிறன் என்று பார்க்க வேண்டி, தன்முழுபலத்தையும் ப்ரயோகித்து கோர யுத்தம் செய்கிறார். பாண்டவசேனைகள் திணறின; சிதறின; வெகுவாய் அழிந்தன. இதைக் கண்ட மாத்திரத்தில் கண்ணன் வெகுண்டு தன் சக்ரத்தை கையில்எடுத்து பீஷ்மர் மேல்பாய வருகிறார். அப்போது பீஷ்மர் உடனே வில்லைக் கீழேஎறிந்து, இருகைகளையும் கூப்பி, கண்ணனை வணங்கி சிரித்தாராம். எதைப்பற்றி? ப்ரதிஞ்ஞை முறிந்ததைப் பற்றியல்ல. கண்ணன் சக்ராயுதத்தை வரவழைத்த அழகையும், அதை அவன் கையிலெடுத்த அழகையும் கண்டு ஆனந்தத்துடன் சிரித்தாராம். இதுவே தான் கண்ணனின் எண்ணமும். பீஷ்மரை கொல்ல சக்கரத்தை எடுத்துக் கொண்டு வரவில்லை. தன் போலோத்த ஓர் வசுவுக்கு இத்தனை நாள் தன் மெய்ருபத்தை காட்டவில்லையே, பீஷ்மரின் முடிவுகாலமும் நெருங்கிக் கொண்டு வருகிறதே, அதுவே தக்க தருணமென்று சக்ராயுதத்துடன் வந்தாரென அழகாக வில்லிபுத்தூரார் பாடல் பாடுகிறார். இதே மாதிரி பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் ஓர் ஏகபாவம் வந்துவிட்டால் அதுவே முக்தியெனவும் மோக்ஷமெனவும் கருதப்படுகிறதல்லவா? வேறென்ன?

பீஷ்மருக்கு புத்ர பாக்யம் கிடையாது. அதனால் 'புத்' என்ற நரகத்திற்கு சென்று விட்டாரா? இல்லை. அவர்தான் பரமாத்மாவை உணர்ந்த முமுக்ஷு ஆயிற்றே. அவருக்கு மறுபிறவி ஏது? ஸ்வர்க்கம் ஏது, நரக மேது? அவர்

அந்தப் பேரான சக்தி எது உளதோ அத்துடன் ஐக்ய மடைந்து விட்டார். அதுதான் முக்தி என்றும் மோக்ஷ மென்றும் சொல்லப்படுகிறது. ஸ்வர்க்க போகமும், நரக வேதனையும் பரப்ரம்மத்தை அறியாதவனுக்கே. அதை அறிய முயற்சியேனும் செய்யாதவனுக்கே. போகமும் வேதனையும் அனுபவித்த பிறகு, மறுபடியும் மறுபடியும் ஜன்மத்தை எடுத்துத் தான் விட்ட முயற்சியிலிருந்து மேன் மேலும் முயற்சி எடுத்துக் கொண்டு பரமாத்மாவை அடை கிறான். இடையில் எத்தனை ஜன்மங்கள் என்பது தான் யோசிக்க வேண்டிய விஷயம். "ஜன்மா: கர்மானு—ஸாரணே." என்கிற ப்ரகாரம் அவன் செய்த, செய்து கொண்டிருக்கிற கர்ம பலன்களை, இஜ்ஜன்மத்திலேயோ இன்னும் பல ஜன்மங்களிலேயோ அனுபவிக்க வேண்டும். அதனாலே தான் வேதங்கள், "நல்ல கர்மாக்களையே செய். நல்லெண்ணங்களுடனேயே வாழ்க்கையை நடத்து" "இன்னும் பாவச் செயல்களை செய்து பாவ மூட்டையை கனப்படுத்திகொள்ளாதே" என்றெல்லாம் மொழிகின்றன. 'இதே ஸந்தர்ப்பத்தில் ஒரு சின்ன விஷயம் சொல்லப்பட வேண்டியிருக்கிறது. குந்தி தேவி ஒருதரம் கண்ணனைப் பார்த்து, "கண்ணா! எனக்கு மேன்மேலும் கஷ்டங்களையே கொடுத்துக் கொண்டிரு: நான் இப்போது அனுபவிக்கும் வேதனைகளெல்லாம் பூர்வ ஜன்ம கர்ம பலன்களாய் இருக்கலாம். ஆகை யால் அவைகள் மீதி கொஞ்சம் கூட இருக்காமல் எல்லா பலன்களையும் இந்த ஜன்மத்திலேயே அனுபவித்து விட எனக்கு மேல் மேலும் கஷ்டங்களையே கொடு. அப்போது தான் எப்போதும் உன் சிந்தனையாகவே இருப்பேன். ஸுகத்துடன் இருந்தால் உன்னை எப்போது எப்படி நினைக்கப் போகிறேன்!" என்றாளாம்.

4. விதுரர்

வடமொழியில் "வித்" என்பதற்கு அறி என்று அர்த்தம். ஆகையால் விதுரர் என்பது எல்லாவற்றையும் அறிந்தவர் என்கிற காரணப் பெயராகும். அவர் திருத ராஷ்டிரருக்கும் பாண்டுவுக்கும் மாற்றாந்தாய் புதல்வர் அல்லது தம்பியாவார். அவர் சிறந்த பக்திமான். தன் பிறப்பை யறிந்து தாழ்மையையும் ஏழ்மையையும் சிறந்த

குணங்களாக கொண்டவர். மிகவும் ஸாத்வீ. அதனால் கோழையல்ல; சிறந்த வில்லாளி; வீரனும் கூட. பரமாத்மா கிருஷ்ணனை அவதார புருஷன் என்றுணர்ந்து எப்போதும் அவனுடைய சிந்தையிலேயே ஈடுபட்டவர். பாரதப்போர் மூளும் முன்பு, கண்ணன் பாண்டவர்கள் சார்பில் கௌரவர்களிடம் தூது சென்ற போது, துரியோதனன் தன் மாளிகைக்குப் பலத்த உபசாரங்களுடன் அத்தான் அம்மாஞ்சி முறையில் கண்ணனை அழைத்தான். ஆனால் அவ்வழைப்புக்கு ஏதோ சாக்கு போக்கு சொல்லி, விதுரர் வீட்டுக்கு அழையாத விருந்தாளியாக நுழைந்தாராம். விதுரருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. சந்தோஷம் மிகுதியால் ஆனந்தக் கண்ணீர் உகுத்து கண்ணனை மிக மரியாதையுடன் வரவேற்று தர்ப்பாஸனத்தில் உட்கார வைத்தாராம். கண்ணன் தான் வந்த காரியத்தை சொல்லி விதுரரின் விருந்தாளியாக வந்திருப்பதாகவும் சொன்னாராம். விதுரருக்கோ ஒன்றுமே தோன்றவில்லையாம். தன்னுடன் அப்போது தங்கியிருந்த குந்திதேவியிடம் இந்த சமாசாரத்தை தெரிவித்தாராம். குந்தியோ மிகவும் சாந்தஸ்வரூபமுள்ளவள். அவளுக்கு அந்த சமாசாரத்தை மிகவும் சாதாரணமாக எடுத்துக் கொண்டு வீட்டிலுள்ள பதார்த்தங்களில் மிகவும் எளிமையாகவே சமையல் படைத்து கண்ணனுக்கு திருப்தியாகவே உணவைப் படைத்தாளாம். ஏழைகளிடத்தில் பரமாத்மா எவ்வளவு சௌலப்யமாக ஈடுபடுகிறார் என்பதை இந்த நிகழ்ச்சி காட்டுகிறதல்லவா? இரக்கம் என்பது பகவானின் இயற்கையான ஸ்வபாவம். அதனால் தான் அவரை 'கருணாமூர்த்தி'-என்றும் "ஏழைப் பங்காளன்" என்றும் ஆபத்பாந்தவர் 'மார்க்க' ஸஹாயர் என்றெல்லாமும் அழைக்கிறோம். அதனால் பணக்காரர்களுக்கு ஆண்டவன் க்ருபை கிடையாது என்ற தப்பர்த்தமல்ல. பணம் கொடுப்பவனும் அவனே எடுப்பவனும் அவனே. பணம் படைத்தவர்க்கு தன்னாலேயே ஓர் அகங்காரம் மமதை என்ற துர்க்குணங்கள் சேருவதால், அவைகளை அகற்றி, ஆண்டவன் ஞாபகத்துடன் பணத்தைச் சீராக நல்வழிகளில் செலவிடுபவனுக்கும் ஆண்டவன் அருள் நிறையவுண்டு. துரியோதனனும் பணம் படைத்தவன். தருமருக்கும் அதே மாதிரி செல்வம் நிறைந்திருந்தது. இரண்டு பேர்களிடத்திலும் ஆண்டவன் ஈடுபாடு சமானமாக இருந்ததா? இல்லை. எல்லா ஸத்வ குணங்கள் நிறைந்த தருமருக்கு எப்போது

சூதாட்டத்தின் மேல் புத்தி போயிற்றே, அதற்கு அவருக்கு பெருத்த தண்டனை பின்னுல் கிடைத்தது. துரியோதன னுக்கு மமகாரம் வளர வளர செல்வம் சேர்ந்தது. இது ஆண்டவனுக்கு ஓர் விநோதமான விளையாட்டாக இருந்த தல்லவா? பொன்னைக் காய்ச்ச காய்ச்ச அதன் மேனியும் ஒளியும் ப்ரகாசிக்கிறது. அதேமாதிரி ஸாத்வீக குணங்கள் நிரம்பிய ஒருவனுக்குதன் தப்பைத் தான் உணரும்படி செய்து, அவன் திருந்தி இன்னும் நல்வழிக்கே ஆண்டவன் கொண்டு போகிருர் என்று கொள்ள வேண்டும்.

சக்ரவர்த்தியின் தம்பியாய் இருந்தும்கூட, அதே மாதிரி விதுரருக்கு ஏழ்மை ஏன்? இந்த ஏழ்மை ஆண்டவன் இட்டதல்ல. அவரே ஸ்வீகரித்துக்கொண்டு, ஏழ்மையின் ஸுகத்தையும், தாழ்மையின் பெருமையையும் உணர்ந்தார். குந்திதேவிக்கு பாண்டவர்கள் படும் கஷ்டங்கள் குறித்து மனவேதனை படும்போதெல்லாம் விதுரர்தான் ஆறுத லளித்து வந்தார். அவர் சொன்ன ஆறுதல்களெல்லாம் சேர்ந்தால் பெரிய வேதாந்த புத்தகமே எழுதி விடலாம். அதாவது எல்லா ஆறுதல்களும் வேதாந்த பரமாகவே இருந்தன. தற்காலரீதியாக, "பழிக்குப் பழி" என்றே அவளுக்கு வேறுவிதமான கலகத்தூண்டுதல்களோ சொல்லவேயில்லை. விதுரர் ஒருவர் இருந்திராவிடில் குந்தி யின் வாழ்க்கையே வேறுவிதமாகப் போயிருந்திருக்கும்.

பாரதத்திலேயே கண்ணனின் சிறந்த பக்தர்களில் பீஷ்மருக்கடுத்தபடி விதுரரையும், பிறகுதான் பாண்டவர் களையும் கூறப்படுகிறது. பாரதப்போரில் கலந்து கொள்ளா மல் யாத்திரை சென்றவர்கள் இருவர். ஒருவர் விதுரர். மற்ற வர் பலராமர். விதுரருக்கு போரின் அடிப்படை தத்வமே பிடிக்கவில்லை. பலராமருக்கோ இருபக்கங்களின் தாக்ஷண் யம் வேறு. கண்ணனின் ஈடுபாடு அதில் இருப்பது அவருக்கு பிடிக்காமல் ஹிமாசலம் பக்கம் சென்று விட்டாராம்.

கடைசியாக கீதையில் கண்ணன் சொன்ன திருவாக் கின்படி, விதுரரின் வாழ்க்கையிலிருந்து நமக்கு ஏழ்மை யிலும் தாழ்மையிலும் கூட கண்ணன் நினைப்புள்ளவனு யிருந்தால், மனநிம்மதி நிச்சயமாய் உண்டு என்று தெரி கிறது. மன நிம்மதி என்பது எவர்களுக்கும் ஸுலபமாய் கைகூடாததொன்றன்றே?

Ananyas chintayanto mam ye janaha paryupasate.
Tesham nityabiyukthanam yogak-shemam vahamyaham
(IX-22)

(Those devotees, howcver, who knowing no one else, constantly think of Me, and worship me in a disinterested way, to those ever united in thought with Me, I bring full security and personally attend to their needs.)

விதுருருடைய பூர்வசரிதையை பார்க்கையில் விதுரர் தர்மராஜாவாகிய யமனுடைய மறு அவதாரமெனத் தெரிகிறது. சுருக்கமாக அக்கதை என்னவெனில் மாண்டவ்யர் என்ற மஹரிஷி தபம் செய்து கொண்டிருந்த போது, சில கொள்ளைக்காரர்கள் கொள்ளையடித்துக்கொண்டு வந்ததை அவர் ஆஸ்ரமத்தில் ஒளித்து வைத்து, ராஜஸேவகர்கள் துரத்துவதால் ஒளிந்து கொண்டு பிறகு ஓடிவிட்டார்கள். மாண்டவ்யர் கொள்ளைக்காரர் தலைவன் என்று கருதி ராஜா அம்மஹரிஷியை கழுவிலேற்ற உத்திரவிட்டு விட்டான். நிஷ்டையிலேயே இருந்த மஹரிஷி தெளிந்ததும் ஞானத்ருஷ்டியால் தனக்கு நேர்ந்ததை உணர்ந்து, யமதர்மராஜாவிடம் தனக்கு எப்படி அத்தண்டனை யடையவும், அந்த சரீர கஷ்டத்தை அநுபவிக்கவும் நேர்ந்தது என்று கேட்கிறார். அதற்கு யமன் "நீ சிறு வயதில் பூச்சிகளையும் புழுக்களையும் ஹிம்சை செய்திருக்கிறாய். அதனால் இந்த தண்டனை" என்றானும். மஹிரிஷி கோபமடைந்து தன்னை அறியாமல் தான் செய்த அச் சிறிய குற்றத்திற்காக இப் பெருந்தண்டனையா, இது நீதியல்ல, என்று யமனை, நீ பூமி வாசம் ஒரு ஜன்மம் செய்ய கடவாய் என்று சபித்தாராம். அதன்படி யமன், பூமியில் விசித்ரவீரயனுக்கும் அவன் பெண்சாதி அம்பாலிகையின் தோழிக்கும், விதுரராக பிறந்தாராம், விதுரர் ஸர்வக்ஞர். எல்லா தர்ம சாஸ்திரங்களையும் அறிந்தவர். நியாயத்தையே எடுத்துரைப்பவர். சூதாட்டத்திற்கு முன், விதுரர் தான் திருதிராஷ்டிரரிடம் இந்த சூது வேண்டாம் என்று எடுத்துரைத்தவர். விதுரர் வார்த்தைக்கு திருதிராஷ்டிரன் எப்போதும் மதிப்பு தந்து வந்தான். பிள்ளையிடம் முறையிட்டான். என்ன பயன்! அவன் தான் பிடிவாத குணம் படைத்த வனாயிற்றே; விதி வென்றது. விதுரர் பேச்சு எடுபடவில்லை.

தர்மராஜாவே விதுரராக வந்தார். அத்தருமராஜா வின் பிள்ளையாகவே, குந்தியின் வயிற்றில் தருமபுத்திரரும் அவதரித்தார். மகாபாரத காவியத்தில் இவ்வளவு அழகாக பெயர்களையும், புருஷர்களையும், ஸ்த்ரீகளையும் ஜோடித் திருப்பது வ்யாஸரின் கற்பனு சக்தியா? அல்லது நடந்ததை நடந்த ப்ரகாரம் ஞானதிருஷ்டியினுலோ அல்லது நேர் பார்வையினுலோ கண்டு அநுபவித்து ஞாபகத்துடன் எழுதியதா?

மௌட்யர்கள் எவ்வளவு சுலபமாக இம்மகா பெரிய காவ்யத்தை "ஆரியர் கதை, நம்ப வேண்டாம்" என்று சொல்லி விட்டார்கள்? கதையாகவே இருந்து போனுலும் போகட்டும். அக் கதைகளுக்குள்ளிருக்கும் உட்கருத்துக் களையும் உண்மைகளையுமாவது உணர்ந்தார்களா? இல்லை, அவைகளைப் பற்றி அவதூருக பழிக்கிருர்கள். ஏன்? தாமஸ குணம் மேலிட்டவர்கள். இதற்கும் பகவான் கூறுகிருர், கீதையில்:

Adharmam dharmamithi ya manyate tamasavrita-I
Sarvartan viparitamscha Budhissa Partha tamasi-II
(Ch-XVIII-32)

(That reason, which enveloped in ignorance, thinks the wrong to be right and regards all things contrary is Tamasic, Arjuna.)

இழிபிறப்பாயினும், அவ்விழிப் பிறப்பை துரியோ தனனும் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்த போதிலும், பொறுமையையே கடைபிடித்தவராய், தான் முன் செய்த அநியாய தண்டனைக்கு ஈடாய், இழி சொல்களெல்லாம் மனதில் வாங்கி, அவைகளை பொருட்படுத்தாமல், நீதியே உருவாய், தருமமே நிலையாய், பக்தியே செயலாய் இருந்த விதுரரைப் பின்பற்றுவோமாக.

5. துரோணர்

துரோணர் என்பதற்கு "துர் எண்ணம் கொண்ட ஓர் ப்ராம்மணன்" என்று கொள்ளலாமோ? அவருடைய சரித்திரமே அலாதியானது. பாரத்வாஜர் என்ற ப்ரம்மரிஷி யின் புதல்வராய்ப் பிறந்தார். பாரத்வாஜரிடம் வேத வேதங்

கங்களையும் கற்று கொண்டது மல்லாமல், வில் வித்தையில் இச்சை கொண்டு அஸ்த்ர சஸ்த்ர மந்திர தந்திரங்கள் எல்லாவற்றையும் கற்ருர். அதாவது ப்ராம்மண கர்மாக்களை யல்லாமல் க்ஷத்திரிய கர்மாக்களை மேற்கொண்டார் எனலாம். ப்ராம்மணன் தன் கர்மாக்களை விட்டு பிறர் கர்மாக்களை மேற்கொண்டதற்கு,தற்கால ரீதியாக பார்க்கும் போது துரோணர் தான்முதல் அடிப்படையாக விளங்கினுர் போலும். அதன் வினைகளையும், அவர் பிறகு அநுபவிக்கவும் நேர்ந்தது.

பாரத்வாஜாஸ்ரமத்தில் தன்னுடன் நெருங்கிய நண்பனுக துருபதராஜாவின் மகன் மாணவனுக இருந்தான். இவர்கள் இருவரும் நெருங்கிப் பழகிய காலத்தில் துருபதன் தன் நட்பை அதிகரித்து காட்ட, தான் ஸிம்ஹாதனம் ஏறியவுடன் பாதிராஜ்யத்தை துரோணனுக்கு அளித்து விடுவதாகச் சொன்னுன். இதை துரோணன் வாக்குறுதியாக எடுத்துக்கொணடான். பிறகு வயது வந்த பின் துரோணன் ஹஸ்திநாபுரத்திலிருந்த க்ருபாசாரியாரின் தங்கையை மணந்துகொண்டு அஸ்வத்தாமா என்ற புதல்வனை ஈன்றெடுத்தான். தனது ஸம்ஸாரத்தை நல்ல விதத்தில் காப்பாற்ற எண்ணி தனம் சேர்க்க ஆசைவைத்தான். அப்போது துருபதனின் வாக்குறுதியை ஞாபகப் படுத்தி பாஞ்சாலதேசத்தின் ஸிம்ஹாஸனத்தை அப்போது வகித்து வந்த தன் நண்பன் துருபதனிடம் செல்ல எண்ணினுன்.

இதற்குள்ளாக, பரசுராமர், தான் காட்டுக்குப் போகு முன்தான் சம்பாதித்த வித்தகங்களைப் ப்ராம்மணர்களுக்கு நிறைய தானம் செய்து கொண்டிருக்கிருர் என்று கேள்விப் பட்டு, பரசுராமரிடம் விறைந் தோடினுன். இவன் போய் சேரும் போது பரசுராமர் எல்லாவற்றையும் கொடுத்து விட்டிருந்தார். அந்தோ! நிலை தவறிய ப்ராம்மணர்கதி என்ன வெல்லாம்ஆகிறது என்பதை நன்ருக பார்க்கிருேம். இருந்தாலும் தன்னைத் தேடிவந்த ப்ராம்மணனுக்கு ஏதாவது கொடுக்க வேணுமென்று தயை கூர்ந்து, வில் வித்தையின ஸூக்ஷ்மங்களைக் கற்றுக் கொடுத்தார். துரோணரும் அதனுல் சிறந்த வில் வீரரானுர். ப்ராம்மணும்சத்திலிருந்து க்ஷத்திரியாம்சத்திற்கு நழுவி விட்டார் என்றே கூறவேண்டும். பரசு ராமர் என்ருலோ ஜமதக்கினி மஹர்ஷியின் புதல்வராய் பிறந்தும் க்ஷத்திரியாம்சத்தை

பூர்ணமாக வகித்தார் என்ருலோ, அவர் அவதார புருஷ ராய் வந்தார். க்ஷத்திரிய கர்வத்தையும் அதர்மத்தையும் அடக்க தான் கீதையில் சொன்னப்ரகாரம, ஸ்ரீமந்நாரா யணனே பரசுராமராய் வந்து, வந்த காரியங்கள் பூர்த்தி யானதும் மலையாளத்தில் மறைந்து விட்டார். 'க்ருத' 'த்ரேதா' 'த்வாபர' யுகங்கள் மூன்றிலும் இருந்தார் என புராணங்களிலிருந்து அறிகிருேம். கடைசியாக, ராமனிட மிருந்து விடைபெற்று, மலையாள ப்ரதேசத்தில் முடிவாக அடைந்து விட்டதாகவும் ராமயணத்திலிருந்து அறிகிருேம். அப்ப்ரதேசத்தில் தன்னுடைய செல்வங்களை ப்ராம்மணர்களுக்களித்து தானங்கள் பல செய்து தபஸ் செய்ய காட்டையடையுமுன் துரோணன் சென்றதாகவும் தெரிகிறது. மலையாள ப்ரதேசம் பரசுராமர் காலத்தில் மேற்கு மலைத்தொடர்ச்சி பூரா, பம்பாய் உள்பட பரவியிருந் திருக்கவேண்டும். ஹஸ்தினபுரத்தில் இருந்து துரோணர் பரசுராமரை பார்க்கச் சென்றது, பம்பாய்க்கடுத்த லோனுவாலா ப்ரதேசமாக இருக்குமோ என ஊகிக்கலாம். மஹாலக்ஷ்மி, தன்னைப் பிறிந்து ஸ்ரீமந் நாராயணனின் வருகைக்காக பம்பாயில் தபஸ் செய்து கொண்டிருப்பதாக மஹாலக்ஷ்மி கோவிலில் இன்னும் பார்க்கிருேம். பம்பாய்ஓர் செல்வர் பூமியாக விளங்குவதும் அதனுலேதான். ஆனுல் பம்பாயில் ஏராளமாக சம்பாதித்துக் கொண்டு பெருவாழ்வு வாழ்ந்துவிட்டு, பம்பாயைவிட்டு செல்வத்தை சேகரித்துக் கொண்டு வேறே ஊர்களில் செல்வத்துடன் சேர்ந்தவர்கள் இல்லை என்றே கூறலாம். இருந்தாலும் மிகச்சிலரே. ஏராளமான செல்வங்களை பரசுராமர் தானம் செய்வதைக் கண்டு பயந்து, பம்பாயில் ஒதுங்கி தன் ஸ்வரூபத்தை ஜனங்களுக்கு மெய் மறக்க காட்டிக் கொண்டு இன்றும் தபஸ் செய்து கொண்டிருக்கிருள் என்று ஐத்யேகம். சீதை அவளுடைய இன்னெரு அம்சம். அதை மாயா அம்சம் என்றே கொள்ளலாம். புராணங்கள் பொய்க் கதைகளல்ல. மெய்யாகவே நடந்தவை என்பதற்கு இம்மாதிரி அத் தாட்சிகள் நிறைய இருக்கின்றன. ஆகையால், அவதார புருஷராய் வந்து பரசுராமர் ப்ராமண தர்மத்திலிருந்து நழுவினரே என்ற ப்ரச்சனைக்கு இடமில்லை. ஏனெனில், பரமாத்மா தர்மங்களுக்கும் ஜாதி பேதங்களுக்கும், குண பேதங்களுக்கும் அப்பாற் பட்டவர். ஆனுல் துரோணர் அவதார புருஷர் அல்லவே. நம்மைப் போலவே ஒரு மனுஷ்யராகப் பிறந்து தன் தர்மத்திலிருந்தும், கர்மாக் களிலிருந்தும் நழுவுகிற ஒருவனுக்கு என்னென்ன கஷ்டங்

கள் நேரிடுகின்றன என்பதற்கு எடுத்துக் காட்டாக இருந்தார்.

பரசுராமரிடமிருந்து பிறகு பாஞ்சாலேக்குச் சென்றார். துருபதன் பராமுகமாக இருந்தான். பாதிராஜ்யமோகம் தலைகவிழ்ந்தது. த்ரோணன க்ரோதம் கொண்டான். 6 துர்குணங்களின் படிப்படியை கவனமாகப் பாருங்கள். வில் வித்தை காமத்திலிருந்து பாதிராஜ்ய மோகம் தலை யெடுத்து அது கவிழ்ந்து க்ரோதம் அடைந்து துருபதனை எப்படி அடக்கி பாதிராஜ்யத்தை பெறலாம் என்று லோப வழிகளை யோசிக்கலானான்.

ஹஸ்தினாபுரம் திரும்பி தன் வில்வித்தை ஸாமர்த்யத்தை காட்டி, கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் ஆசார்ய னாக அமர்ந்தான். அமர்ந்ததும் அவனைக் கொண்ட நெஞ்ச வஞ்சம் அகலவில்லை. மதம் கொண்டான். முதலில் கர்ணனையும் துர்யோதனனையும் துருபதனை ஜயிக்க அனுப்பினான். அவர்களால் முடியாமற்போய் அர்ஜுனன் ஜயித்து துருபதனை பங்கப் படுத்தி ஆசார்யர் முன் நிறுத்தி னான். தன் எண்ணம் ஈடேறி விட்ட கர்வம் கொண்டு, துரோணன் பாதி ராஜ்யத்தை பிடித்துக் கொண்டு பாதி ராஜ்யத்தை துருபதனுக்கே கொடுத்து விட்டான். வஞ்சம் விடுமா? அது மேலும் மேலும் வளரக் கூடியதாயிற்றே. துருபதன் துரோணன் மீது வஞ்சம் கொண்டு தீவிரமான வேள்விகள் நடத்தினான். துரோணனைக் கொல்லக்கூடிய ஒரு புத்திரனையும், அர்ஜுனனை மணக்கக் கூடிய ஒரு புத்திரியையும் வேண்டினான். அதே மாதிரி த்ருஷ்டத்யும் னனும், த்ரௌபதையும் அக்னியிலிருந்து ஆவிர்ப்பவித் தார்கள்.

துரோணருக்கு கௌரவர்கள் ஆதரவில் இருந்த போதி லும், அவர்களுடைய அதர்மவழிகள் பிடிக்கவில்லை. பாண் டவர்கள் பக்கம் தர்மம் இருக்கிறது என்று எப்போதும் எண்ணி அதை வெளிக்காட்டியும் வந்தார். பாண்டவர் களிடத்தில் அவர்களுடைய குணங்களுக்காக அவர்கள் மேல் அன்பு பூண்டு வந்தார். இது அவருடைய பிறப்பி னால் ஏற்பட்ட ஓர் நல்ல குணமாக இருந்து வந்தது. சூதாட் டத்தின் போதிலும் சரி, துச்சாதனன் துயிலுரித்த போதும சரி பாண்டவர்களை காட்டுக்கு துரத்திய போதும் சரி, அவர்கள் மேல் யுத்தம் தொடுத்த போதும் சரி, அவரு டைய வெறுப்பைக் காட்டினார். துரியோதனனிடத்திலேயே இது அதர்ம யுத்தம் என்று சொல்லவும் சொன்னார்.

துரியோதனனும் உண்ட வீட்டிற்கு இரண்டகம் தேடும் வழி தப்பிய ப்ராமண புத்தியா என்று கேட்கவும் கேட்டு அவருடைய வாயை அடக்கினுன்.

போரில் பதினென்ரும் நாள் துரோணருக்கு தலைமை கொடுத்தார்கள். அவரும் கோரயுத்தம் புரிந்தார். பல்வர் மாண்டனர். பல கௌரவர்களும் மாண்டனர். அப்போது துரியோதனனுக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. பாண்டவர் களை ஜயிக்க முடியாது. அதைவிட யுதிஷ்டிரரை பிடித்து விட்டால் அவரிடம் கெஞ்சி கூத்தாடி மறுபடியும் சூதுக்கு அழைத்து, தோற்கடித்து, காட்டுக்கு அனுப்பி விடலாம், என்ற கெட்டஎண்ணம் கொண்டு துரோணரிடம் இந்த யோசனையை மாற்றி, யுதிஷ்டிரரை பிடித்து கொடுத்து விட்டால், யுத்தத்தை முடித்து விடலாம் என்று கூறினுன். துரோணர் நினைத்தார், "ஏது! துரியோதனனுக்குநல்லபுத்தி வந்து பாண்டவர்களுடன் சமாதான பேச்சு நடத்தி அவர் களுக்குண்டான பாதிராஜ்யத்தை கொடுத்துவிட்டால்தான் பாண்டவர்களிடம் ஆசார்யனுக அமர்ந்து, நல்வாழ்க்கை நடத்தலாம்" என்றுஎண்ணினுர் பாவம். ஆகையால், யுதிஷ் டிரரை பிடிக்க எவ்வளவு தந்திரங்களுடனும், சூழ்ச்சிக ளுடனும் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்துபார்த்து விட்டார்.

பதின்மூன்று நாட்கள் பாரதப்போர் யுத்த தர்மங்களு டன் போரிடப்பட்டு வந்தது. அதாவது (1) த்வந்த்வ யுத் தம் அல்லது இரு வீரர்கள் போரிடும் போது மூன்ருமவன் ப்ரவேசிக்கக்கூடாது. (2) சூரியஅஸ்தமனம் வரையில் தான் போரிட வேண்டும். அதன் பிறகு அவரவர்கள் கூடாரத்திற்கு போய்விட வேண்டியது. (3) போருக்கு வெளியிலோ அல்லது அந்த நாள் போர் முடிந்த பிறகோ, எல்லோரும் பகைமையைப் பாராட்டாமல் ஸ்நேக பாவத்து டன் பழக வேண்டியது. (4) போரில் காயப்பட்டு உயி ருக்கு மன்ருடிக் கொண்டிருக்கிறவர்களுக்கு பகைவர்களா யினும் உடனுக்குடனே அவர்களுக்கு வைத்திய சிகிச்சை யோ அவர்களுக்கு வேண்டியனவோ செய்ய வேண்டியது கடமை. அக்கால யுத்த தர்மங்களுக்கும் இக்காலத்தவைக் கும் என்ன வித்தியாசங்கள் இருப்பினும், நன் மனம் படைத்தவர்கள் கூடி மனிதப்பண்புக்கு அப்பால் யுத்தம் கூடாது என்று கூடியவரையில் பாதுகாத்து வருகிருர்கள் இந்தமாதிரி ஸ்தாபனங்களில் *Red-Cross* ஒரு முக்கியமான ஸ்தாபனமாக விளங்குகிறது.

இருந்த போதிலும் பதின்மூன்றும் நாள் அபிமன்யு கொலையுண்டதிலிருந்து யுத்த தர்மமே நழுவிவிட்டது என்று வைத்துக் கொள்ளலாம். பதினான்காம் நாள் ஜயத்ர தன் மாண்டபிறகு சூர்யாஸ்தமனம் ஆயும் போர் முடிய வில்லை. போரை நீடித்தார்கள். இதை ராஜாஜி அழகாக ஒரு வரியிலே சொல்லுகிறார் :

"*When hatred and anger have been roused, codes of honour and dharma are powerless to control them.*"(P.277)

"விரோதமும் கோபமும் தலை தூக்கும்போது, யுத்த தர்மங்களோ அவை கௌரவங்களோ அவைகளை கட்டுப் படுத்த பலமற்றுப் போகின்றன."

பதினான்காம் நாள் இருட்டில் கடோத்கஜன் கர்ணன் கையில் மாண்டான். அப்போது துரோணரும் மிகக் கடுமையாக கோரயுத்தம் செய்து பாண்டவ சேனைகளில் சேதம் விளைவித்து வந்தார். கடைசியாக ப்ரம்மாஸ்திரத்தை எடுத்து தொடுக்கும் நேரத்தில் கிருஷ்ணன் பார்த்தான். பீமனைக் கொண்டு அஸ்வத்தாமா என்கிற யானையை கொல்லும்படியும், அஸ்வத்தாமா கொல்லப்பட்டான் என்று கத்தும்படிக்கும் செய்தான்.

துரோணர் காதில் விழுந்ததும், புத்ரபாசம் மேலிட்டது, வில்லையும் அம்பையும் கீழே விட்டெறிந்தார். அப்போதும் ஸந்தேகம் விடவில்லை. தருமரை இது நிஜமா என்று கேட்டார். தருமரும் "அஸ்வத்தாமா ஹத: குஞ்ஜர:" என்று சொன்னார். முதல் இரண்டு வார்த்தைகள் காதில் விழுவதற்குள், அவருக்கு தன் உயிர்மேலேயே விரக்தி ஏற் பட்டு விட்டதாம். அப்போது, பீமன் அவரிடம் சொன்ன னும் :-

"உங்களைப் போல ப்ராம்மணர்கள் உங்களுடைய வர் ணத்திற்குரிய நியாயமான கர்மாக்களை விட்டு விட்டு, க்ஷத்திரியர்களைப் போல் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு ராஜபுத்ரர்களின் அழிவைக் கொண்டு வந்துவீட்டீர்கள். உங்கள் பிறப்பிற்குரிய கடமைகளை விடாமல் போயிருந் தீர்களானால் இந்த ராஜபுத்ரர்கள் இந்த நாசத்திற்கு இழுக் கப்பட்டிருக்க மாட்டார்கள். நீங்களோ கொல்லாமையே சிறந்த தர்மம் என்று போதிக்கிறீர்கள். அத்தர்மத்தை காப்பாற்றவும், போதிக்கவும் ப்ராம்மணன் இருப்பதாகச் சொல்லுகிறீர்கள். அப்படியிருந்தும், அந்த உங்கள் பிறப்

பிற்குரிய அறிவை புறக்கணித்து விட்டு; துளிகூடமானமே யில்லாமல் இந்த கொல்கிற தொழிலைப் பூண்டீர்கள். நீங்கள் இப்படி இந்த பாபகரமான வாழ்க்கைக்கு இறங்கி யது எங்களுடைய துரதிர்ஷ்டம்தான்."

துரோணருக்கு புத்தி வந்ததாம். அப்படியே ரதத்தில் யோக நிஷ்டைக்கு உட்கார்ந்து விட்டாராம். அப்போது பாரத சரித்திரத்திற்கே இழுக்காக ஓர் நிகழ்ச்சி பாண்டவர் கள் பக்கம் இருந்த த்ருஷ்டத்யும்னனால் செய்யப்பட்டது. யாருடைய கூச்சலையும், தடுத்தலையும் செவி கேளாமல் கையில்வாளுடன் ரதத்தின் மேல்ஏறி, யோக நித்திரையிலி ருந்த துரோணனின் தலையை வெட்டி வீழ்த்தினானும். துரோணரின் ஆவி பளிச்சென்று வெளியேறி ஆகாயத்தில் கலந்தது என்கிறார் வ்யாஸர். இப்பேர்க்கொத்த துரோண ரின் வாழ்க்கையிலிருந்து, அதன் உட்கருத்துக்களை நாம் நன்றாக உணருவோமாக.

6. குந்திதேவியும் காந்தாரியும்

குந்தியின் பிறப்புப்பெயர் பிருதை. வசுதேவரின் தங்கையாகப் பிறந்தாள். வசுதேவரின் சித்தப்பா, போஜ னுக்கு குழந்தையில்லாமையால் பிருதையை வளர்ப் புப் பெண்ணாக ஏற்றுக் கொண்டு குந்திதேவி என்று நாம மிட்டு வளர்க்கலானான். குந்தியின் சிறுவயதிலேயே தூர் வாஸ முனிவருக்கு குந்திபோஜன் க்ருஹத்தில் சிசுரு ஷை செய்ததற்கு, முனிவர் சந்தோஷப்பட்டு அவளுக்கு தைவீக மந்திரத்தை உபதேசித்தார். அதன்படி அவள் சிறுபிள்ளைத் தனத்தில் பரீக்ஷைசெய்ய எண்ணி சூரியபக வானை நினைத்தாள். குந்தி நல்ல அழகி. சூரியபகவான் அவளெதிரில் நின்று, அவளுக்கு தன் தைவபலத்தால் தாய்மையைக் கொடுத்து, திரும்பவும் சிறுமையையும் கொடுத்துச் சென்றான். சூர்யனின் பிள்ளையாக கர்ணன் பிறந்தான் குந்திக்கு. அபவாதத்திற்கு அஞ்சி, அதை ஓர் பேழையில் வைத்து நதியில்மிதக்க விட்டுவிட்டாள். அந்த பேழை ஓர் தேர்பாகனிடம் சிக்கி, அக்குழந்தை அவனால் வளர்க்கப் பெற்றது.

பிறகு குந்திக்கு ஸ்வயம்வரம் நடந்தது. பரதவம்சத் தில் பிறந்த பாண்டுவுக்கு மாலையிட்டாள். ஹஸ்திநாபுரம் சென்றாள். பீஷ்மரின் உத்தரவின்பேரில் பாண்டு, மாத்ரி என்னும் மத்ரதேசத்து இளவரசியை இரண்டாம் மனைவி யாக மணந்து கொண்டான்.

த்ருதராஷ்டிரன், பாண்டுவின் அண்ணனுக இருந்த போதிலும், பிறவிக் குருடன். ஆகையால் பேருக்கு அரசனுக இருந்தபோதிலும் ராஜ்யபாரம் முழுவதும் பாண்டுவே வகித்து வந்தான். திருதராஷ்டிரனுக்கு, காந்தாரதேசத்து மகளான காந்தாரி மனைவியானுள்.

பாண்டு ஒருதரம் காட்டிற்குவேட்டையாடப் போனுன் அங்கு ஓர் முனிவரும் அவருடைய பத்னியும் மான்வேடங்கள் பூண்டு காமலீலையில் ஈடுபட்டிருந்தனர். ஆண்மானை பாண்டு பாணத்தினுல் அடிக்க, அடிபட்ட முனிவர் பாண்டுவை தன் மனைவிகளோடு புணர்ச்சிக் கொண்டால் மரணமடையக் கடவது என்று சபித்துவிட்டார். மிகவும் விசனமிகுந்து, பாண்டு ராஜ்யத்தை பீஷ்மரிடமும், விதுரரிடமும் ஒப்படைத்துவிட்டு, இருமனைவிகளுடனும் வனமேகினுன். வம்சவ்ருத்தி இல்லாமல் போகிறதே என்று எண்ணி குந்தி பாண்டுவிடம் தான் துர்வாஸரிடமிருந்து பெற்ற மந்திரங்களைப்பற்றிச் சொன்னுள். பாண்டுவும் சம்மதித்தான். பிறகு, தருமதேவன், (யமன்) வாயுபகவான், இந்திரன் இம்மூவர்களுக்கும் முறையே தருமன், பீமன், அர்ஜுனன் இவர்களை குந்திதேவி ஈன்றெடுத்தாள். மாத்ரிக்கும் அம்மந்திரத்தை சொல்லிக் கொடுத்து அஸ்வினி தேவதைகளுக்கு நகுல சகாதேவர்களை மாத்ரி ஈன்றெடுத்தாள். இப்பாண்டவர்கள் ஐவரும் காட்டிலேயே மஹரிஷிகள் ஆஸ்ரமங்களில் வளர்ந்து வந்தார்கள். பலவருஷங்கள் கடந்தன. ஒரு இளவேனிற்காலம் வந்ததும், பாண்டுவும், மாத்ரியும் தனியாக இருந்தபோது பாண்டுவுக்கு காமஇச்சை மேலிட்டு அவனுடைய சபதம் தளர்ந்ததும் பாண்டு மூர்ச்சையாகி இறந்தான். மாத்ரியும் உடன்கட்டை யேறினுள். ஆகையால் பாண்டவர்களை அழைத்துக் கொண்டு குந்தியானவள் ஹஸ்தினுபுரம் சென்ருள். அப்போது யுதிஷ்டிரருக்கு பதினுறு வயதென்கிருர்.

இந்த குந்தியின் வரலாறிலிருந்து நாம்என்ன நல்லதை க்ரஹிக்கலாம்! ஒரு புருஷனிடத்தில் ஸந்ததி பிறக்காமல் போனுல், மற்ருெருவரிடமாவது ஸந்ததி பெறலாம் என்று விளங்குகிறதல்லவா? இதற்கு சாஸ்திரங்களும் இடம் கொடுக்கின்றன. இத்தனைக்கும் குந்தியை மஹாஸாத்வி பொறுமைசாலி, பதிவ்ரதை என்றெல்லாம் வ்யாஸர் கூறுகிருர். பரமாத்மா கண்ணனே தன் அத்தையான குந்தியிடத்தில் மிகவும் அபிமானம் வைத்திருந்தானும். தற்கால ரீதியிலும், தற்கால கொள்கைகள் பிடிக்கும் குந்தியை

கெட்டுப் போனவள் என்று சொல்லக்கூடும். அப்படியல்ல. ஏனெனில், தேவர்கள் சூக்ஷ்மசரீரம்தான் பெற்றவர்கள். அவர்களுக்கு ஸ்தூல சரீரம்கிடையாது. குந்தியிடம் தங்களின் வீக்ஷண்யத்தினுலேயே கர்ப்பங்களை உண்டாக்கினுர்கள். கேவலப் புணர்ச்சியினுலல்ல. அதனுல்தான் பாண்டவர்களை தைவாம்சம் பொருந்திய தேவபுத்ரர்கள் என்கிறேம். அவர்களுக்கும் ஸத்வபலம் நிறைய இருந்தது. தேவ குணங்களும் அவர்களிடம் நிரம்பி இருந்தன. தர்மசிந்தனை, பேச்சில் இனிமை, வீரத்தில் சௌர்யம், இவைகளெல்லா மிருந்தன. மானிட சரீரங்கள் பெற்றதினுலேயே சில ரஜோதம குணங்களும் இருந்தன. குந்தியைப் போலவே, திரௌபதி பஞ்சபாண்டவர்களையும் புருஷர்களாக அடைந்தாள். ஒவ்வொரு வருடம் ஒருவர் என்று பிரித்துக்கொண்டார்கள். ஒவ்வொருவருக்கும் பிள்ளைகளை ஈன்றெடுத்தாள். கடைசியில் இந்த உபபாண்டவர்களெல்லோரும் அசுவத்தாமா கையினுல் மாண்டார்கள். திரௌபதியையும் அக்னிபுத்ரியாகவும், பதிவ்ரதையாகவும், தைவமுமாகவும் வணங்குகிறேமல்லவா? ஆகையால் நம் மனநோக்கத்தை பொருந்தியது நல்லவர்களை கெட்டவர்களாக்குவதோ, அல்லது கெட்டவர்களையும் நல்லவர்களாக்குவதோ என்று திடமாக கூறலாம்.

காந்தாரியைப் பற்றி கூறும்போது காந்தாரி காந்தார தேசத்து ராஜகுமாரி. காந்தார தேசம் தற்கால *Kandahar* என்பதாகும். தன் கணவன் குருடன்என்று தன் கண்களை துணியினுல் கட்டிக் கொண்டாளாம். தனக்கு மாத்திரம் பார்வை எதற்கு என்றுளாம். பிறவிக்குருடனுக்குசெயற்கை குருடியாக வாழ்ந்தாள். சாதாரணமாக இவ்வுலகில் பொருமை நிறைந்த ஒரு ஸ்திரியை காந்தாரி என்றழைக்கிறேம். காந்தாரி மகா பதிவ்ரதையாம். ஆண்டவனின் அருள் பெற்றவளாம். இருந்தும், பொருமை என்பது அவளைவிட்டு அகலவில்லை. பொருமையும் அவளிடம் கிடையாதாம். எவ்வளவுக்கெவ்வளவு கஷ்டங்களை அநுபவிக்க குந்திக்கு பொறுமையும் மனேதிடமும் இருந்ததோ அவ்வளவுக்கவ்வளவு சுகத்தையே கண்ட காந்தாரிக்கு துளிகஷ்டம் பொறுக்கக்கூட அவளால் முடியாதாம். மற்றபடி அவள் பாண்டவர்களிடமோ, த்ரௌபதியிடமோ மிகவும் அன்புடன் நடந்துவந்தாள். குந்தியும் காந்தாரியும் கூடப்பிறந்த சகோதரிகள் போலவே பழகி வந்தார்கள். குந்தி துயர்படும் போதெல்லாம் காந்

தாரிதான் ஆறுதல் சொல்லி வந்தாள். பாண்டவர்களுக்கும், திருதராஷ்டிரன், பிள்ளைசொல்லை மீறமுடியாமல் அதர்ம வழிகளில் செல்கிருரே என்ற கவலையும் தாபமும் இருந்தபோதிலும், அவரிடமும் காந்தாரியிடமும் மரியாதையுடனும் அன்போடும் நடந்து வந்தார்கள்.

குந்திக்கு ஓர் மாசு கற்பிக்க எண்ணி, கண்ணன் போர்தொடங்கு முன் அவளை கர்ணனிடம் அனுப்புகிருர். தான் கர்ணனின் தாய் என்பதை அவனுக்கெடுத்துரைத்து நிரூபித்து கர்ணனைபோரில் ஈடுபடாமல் இருக்க எவ்வளவோ முயற்சி எடுத்தாள். கர்ணன் பிடிவாதமாக உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைப்பவன் அல்ல என்று தாயின் விருப்பத்தை நிராகரித்தான். தன்னிடம் அப்போது தாயன்பு பூண தகுதியற்றவள் என்ருன். ஏனெனில் குழந்தையை மானத்துக்கஞ்சி நதியில் விட்ட பாதகியல்லவா? அதனுலே தேர்பாகன்மகன் என்ற அவமானத்தையும் தனக்கு வாங்கித்தர காரணமாய் இருந்தாளல்லவா? கடைசியில் தாய் என்கிற முறையில் ஒருவரம் தருகிருன், அதாவதுபாண்டவர்களில் ஒருவனையேதன் பாணத்துக்கு இரையாக்குவதாயும், மற்றவர்களை அடிப்பதில்லை என்றும் வ்ரதம் பூண்டான். அதுவும் அவனுல் நிறைவேற்ற முடியவில்லை. கடைசியில் தானேமாண்டான். தானதர்மத்திற்கு கர்ணன் என்று பேர்வாங்கியவன். தான் துரியோதனனின் துர்ச்செயல்களுக்கெல்லாம் தூண்டுகோலாக இருந்த பாதகத்திருல், வினைப்பயனை அநுபவித்தே தீர்த்தான்.

கர்ணன் மாண்டபின் குந்தி அவன் உடல்மேல் பாய்ந்துபுலம்புகிருள். பாண்டவர்கள் திகைத்தனர். தங்களுடைய அண்ணன் என்றறிந்த பின், தருமரே குந்தியை வெறுக்கிருர். அப்போது கண்ணனின் ஆறுதல்கிடைத்து சாந்தம் அடைகிருர்.

பாரதயுத்தத்தில் வெற்றி பெற்று, தருமரும் தன் தம்பிகளுடன் பெரியவர்களுடைய ஆசிகளை பெறவேண்டி, திருதராஷ்டிரரிடம் செல்கிருர். புத்ர சோகத்திஞல் மன வேதனை பட்டுக்கொண்டிருந்த அவர் பீமனை தழுவ எண்ணிஞர். கண்ணன் சூழ்ச்சியால் பீமன் உயிர்தப்பிஞன். இல்லாவிட்டால் கண்ணன் வைத்த இரும்புசிலை நொறுங்கின மாதிரி நொறுங்கியே போயிருந்திருப்பான். ஆங்கிலத்தில் இதைத்தான் *desparation* என்று கூறுகிருர்கள். அந்த நிலையில் ஒருவனுக்கு அசுரபலம் வந்து விடு

கிறது என்பதை இன்றும் நாம் காணலாம். பிறகு காந்தாரியிடம் சென்ருர்கள். அவளும் புத்ரசோகத்திஞல் அவதிபட்டுக்கொண்டிருந்தாள். தருமரைப் பார்த்து நூறுபிள்ளைகளில் ஒரு பிள்ளையையாவது விட்டு வைத்திருக்கக் கூடாதா என்று புலம்புகிருள். தருமன் அவமானத்தால் தலைசாய்ந்து காந்தாரியின் காலில்வீழ்ந்து மன்னிப்பு கேட்டான். கண் கட்டின் சந்தின் வழியாக காந்தாரிக்கு தருமரின் பத்மம் போன்ற காலின் கட்டைவிரல் தெரிந்ததாம். உடனே அது அப்படியே கருத்துவிட்டதாம். கட்டை திறந்து பார்த்திருந்தாளானுல் பாண்டவர்கள் மொத்தவரும் சாம்பலாய் போயிருந்திருப்பார்கள். அவ்வளவு பலமுடையதாம் அந்த பதிவ்ரதா சக்தி. ராமாயணத்தில்கூட சீதையின் முன்பு ராவணன் நின்று அவளை வலியுறுத்தும் போது, தான் நினைத்தால் அவனை தன்சக்தியால் எரித்துவிடக்கூடும்; ஆனுல் அந்தபெருமையை ராமனுக்கு கிடைக்கசெய்ய வேண்டும் என்று எரிக்காமலிருப்பதாக சொன்னுள். முக்கண்ணனுன சிவபெருமானுக்கே அந்த கண்ணுல் எரிக்கும் சக்தி இருந்ததென்ருல், பதிவ்ரதைகளுக்கும் அந்த காலத்தில் அந்தசக்தி இருந்ததாக புராணங்கள் கூறுகின்றன.

முடிவில் திருதராஷ்டிரனும் காந்தாரியும் நாட்டைவிட்டு காட்டிற்குப் போகும்போது, அவர்களுக்கு ஒத்தாசைக்காக குந்தியும் ஸஞ்ஜயனும் கூடவே சென்ருர்கள். எவ்வளவு தீவிரமும் விரோதமும் இவ்விரு தாயாதிகளுக்கு ஏற்பட்டிருந்த போதிலும், கடைசிவரை குந்தியிடம், அது ஒரே குடும்பம், அதில் தானும் ஒருவள் என்ற உணர்ச்சி இருந்து வந்தது எவ்வளவு ஆச்சரியம்!

7. விதுரர்

மஹாபாரதத்திலேயே விதுரரைப் பற்றி அடிக்கடி வருகிறது. கிருஷ்ன பகவானுக்கு மிகவும் வேண்டியவர். பரம கிருஷ்ன பக்தர். எளியவர். தான் ஓர் தாசிபுத்ரன் என்கிற இழிப்பெயரை அகற்றியவர். அவருடைய சரித்திரத்தை சற்று ஆராய்வோம்.

"விதுரர்" என்கிற பெயரிலேயே அவர் எல்லாம் அறிந்தவர் என்று தெரிகிறது. த்ருதஷாட்டிரன், பாண்டு இவர்களுடைய தகப்பனுர் விசித்ர வீர்யனுக்கும் அவருடைய மனைவி அம்பாவிகையின் தோழிக்கும் பிறந்தவர். தான் தன் பிறப்பை என்றும் மறக்கவில்லை. இழிபிறப்பு என்றும் மறக்கவில்லை. பாண்டவர்களிடம் மிகவும் அன்புடையவர். ஒருகாலத்தில் யமதர்மன் மாண்டவ்ய மஹரிஷியிடம் பெற்ற சாபத்தினுல் தர்மமே உறைவிடமாகவும் சத்யத்துக்கும் விஷ்ணுபக்திக்கும் சிறந்து விளங்கும் விதுரராக அவதரித்தவர். மஹா வில்வீரர், அஸ்திர சஸ்திரவித்தையை கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் போதிக்க பீஷ்மரால் அமைக்கப்பட்டவர். இவரிடம் திறன் அடைந்த பிறகுதான் துரோணரிடம் மேற்கொண்டு கற்றுர்கள்.

துரியோதனுதிகள் பாண்டவர்களுக்கு தீமைசெய்ய நினைத்த போதெல்லாம் அவர்களைக் காப்பாற்றியவர். பாண்டவர்கள் வனவாசம் சென்ற போது குந்தி தேவிக்கு ஆதரவாக இருந்தார். காந்தாரியும் குந்திதேவியும் இவரை மைத்துனராகவே கருதி மரியாதை செலுத்தி வந்தனர். இவருடைய தர்மசாஸ்திர ஞானம் மிகவும் விசாலமானதால் திருதராஷ்டிரர் கூட இவருடைய வார்த்தைகளுக்கு மதிப்பு காட்டி அதன்படி நடந்தார்.

ஆனுல்; சூதாட்டத்தின் போதுமாத்திரம் விதுரர் எவ்வளவு சொல்லியும் கேளாமல் பிள்ளையின் வார்த்தைக்கே மதிப்பு கொடுத்து அதன்படி கீழ்படிந்து நடக்க வேண்டியதாயிற்று. இதைத்தான் "விதியின் விளையாட்டு" "வினைப்பயன்" புத்தி; கர்மானுஸாரேண" என்றெல்லாம் சொல்கிருேம். ஆங்கிலேயர்கள்கூட creation of circumstances" அதாவது "மனிதன் நடப்பதெல்லாம் சந்தர்ப்பங்களைப் பொறுத்தே யுள்ளன" என்கிருர்கள்.

பாரதப்போரில் எல்லோரும் மடிந்த பிறகு, விதுரரும் க்ருபாசாரியர், அச்வத்தாமா இவர்கள் மூவரும்தான் மிஞ்சினுர்கள். கடைசியில் த்ருதராஷ்டிரானுடன் காந்தாரி குந்தி இம்மூவருடனும் விதுரரும் கூட சென்றுராம். இவர்கள் இருந்த காட்டில் தீ மூண்டு அத்தீயிலேயே இம்மூவரும் பரலோக ப்ராப்தி அடைந்தனர் என்று மகாபாரதம் கூறுகிறது.

யமதர்மராஜனே விதுரராக அவதரித்தபோது, யமராஜ்யத்தில் யார் பரிபாலனம் செய்தது? உயிர்களை அபகரிக்கிற கார்யங்களை யார் செய்து வந்தது? அப்படியானுல் இத்துவாபர யுகத்தில் சாவு என்பதே இல்லாமலிருந்ததா? என்ற கேள்விகளல்லாம் எழுகின்றனவல்லவா? பார்ப்போம்.

விதுரர் பிறந்த பிறகுதானே குந்தி தேவிக்கும் யமதர்மராஜனுக்கும் அவனுடைய வீக்ஷண்ய கடாக்ஷத்தாலேயே தருமராஜன் பிறந்தானல்லவா? இந்த யமன் வேரு என்ற சந்தேகத்தைத் தெளியவைப்போம். இப்போது மஹாவிஷ்ணு தசாவதாரங்கள் எடுத்தார் என்ருல், பலவருஷங்கள் பூமியில் அவதரித்து துஷ்ட ஸம்ஹாரமும் சிஷ்ட பரிபாலனமும் செய்தார் என்ருல் வைகுண்டத்தில் இருந்த ஸ்ரீமந்நாரயணன் அங்கில்லாமலா போய் விட்டார். அதனுல்தான் இந்த அவதாரங்களைப் பற்றி பாகவதத்தில் கூறும் போதெல்லாம் "ஸ்ரீமந்நாராயணனின் அம்சமாக" அவதரித்தார் என்றுவியாச பகவான் கூறுகிருர். தக்ஷனின் யாகத்தை அழிக்க கைலாசத்தை விட்டுவிட்டு சிவ பிரானே வா வந்தார்? இல்லை. சக்தியின் மறைவைக் கேள்விப்பட்ட சிவன் தன் ஜடையிலிருந்து ஓர் மயிரைப் பிய்த்து அதிலிருந்து தன் உருவிலேயே சூலபாணியாய் வீரபத்ரரை உண்டாக்கி-தக்ஷயக்ஞ நாசம் செய்ய அனுப்பினுர் என்று தஷயக்ஞத்தைப் பற்றி விவரமாய்ப் புராணங்கள் கூறுகின்றன. அந்த ஓர் மயிருக்கே அவ்வளவு சக்தியிருக்குமாகில் சிவனின் யோகசக்தியை என்னென்று கூறுவது? த்ரிபுராந்தகர்களை ஓர் புன்சிரிப்பிலேயே எறித்து விட்ட பிரான் அன்ருே? ஆகையால் இதெல்லாம் திருமூர்த்திகளின் அம்சங்களாய், தேவர்களின் அம்சங்களாய், அவர்களுடைய ரூப, குண, பலங்களுடன் பூமியில் ஓரோர்காரணுர்தமாய் அவதரித்தவர்கள் என்றே கொள்ளவேண்டும். அதனுல் அவர்கள் தன் சுய இருப்பிடங்களாகிய கைலாசம் வைகுண்டம் ஸ்வர்க்கம் இவைகளிலிருந்து அடியோடு மறைந்து விட்டார்கள் என்று அர்த்தமில்லை. அக்னி பகவானை எடுத்துக் கொள்ளுங்கள். அதேமாதிரி வாயுவையும் பாருங்கள். இவர்கள் ஸர்வவ்யாபிகள் - எங்கும் நிறைந்தவர்கள். பரிபூரணகுணசம்பன்னர்கள். இவர்கள் பூமியில்சஞ்சாரம் இன்றும் செய்து கொண்டுதானிருக்கிருர்கள் என்ருல் மற்ற லோகங்களில் இல்லை என்ரு அர்த்தம் கொள்கிறது? இது மகா அபத்தம் அன்ருே?

அம்மாதிரியமதர்மனே தர்மத்தின் உருவாக உலகதர்மத்தின்உறைவிடமாக விதுரர் அம்சத்தில் விளங்கினார். பீஷ்ம துரோண கர்ணாதிகளுக்கும் தர்மநியாயங்களின் பெருமை தெரியாமலா இருந்தார்கள்? கேவலம் துரியோதனன் அளித்த உப்பின் நன்றிக்காக தர்மத்தையும் நியாயத்தையும் அறவே மறந்தார்களா? துரௌபதா வஸ்த்ராபஹரணத்தின் போதுகூட வாளாகத்தானே இருந்தார்கள்? கேவலம் எல்லாம் பரந்தாமனின் செயல் என்றதத்வத்தின் அடிப்படையில் சும்மா இருந்தார்களா? இல்லை. இந்த மானபங்கத்தினால் கௌரவர் அழிந்துபோகப் போகிறார்கள், அதர்மம் நாசமடையப் போகிறது, இதுவும் ஈசன் செயலென்று சும்மாவே இருந்துவிட்டார்களா என்றால், அப்படியல்ல. அவர்கள் எவ்வளவு சொன்னாலும் துரியோதனன் காதில் ஏறாது. அவர்களையே திரும்பப் பழிப்பான். பாண்டவர்களிடம் பக்ஷபாதம் என்று தூற்றுவான். ஆனால், தருமத்துக்கே உறைவிடமாக இருக்கும் விதுரர் மொழிந்தால், துரியோதனன்கூட வணங்காமுடி மன்னனாக இருந்தும் வணங்குவானும். அதனால் தான் கடைசியில் விதுரரானவர் அந்த ஸபையில் எழுந்து,

"Are you so mad that you rush to certain destruction? You are hanging by a slender thread over a bothomless abyss? Drunk with success, you do not see it but it will engulf you." next to the assemly "Youdhishtra had no right to stake Panchali as by then he had himself already lost his freedom and lost all rights. I see that the ruin of the Kauravas is imminent and that, regardless of the advice of their friends and well-wishers, the sons of Dhritarashtra are on the path to hell." *Rajaji.*

அதாவது, "துர்யோதனா! உனக்கு இந்த சூதாட்டத்தின் வெற்றியானது தலைக்கேறி பைத்தியம் பிடித்துவிட்டதா? அதனால் உன்நாசத்தை நீயே தேடிக்கொள்கிறாயா? ஒரு சிகரத்திலிருந்து ஆழமான பாதாளத்தில் விழ ஒரு மெல்லிய நூல்தான் உனக்கு இப்போது ஆதாரமாயிருக்கிறது. பெரியோர்களும் மற்றவர்களும் சொல்கிற புத்திமதியைக்கூட கேட்காமல், கௌரவர்களுடைய நாசத்தை வெகுதுரிதமாய் விளைத்துக் கொண்டிருக்கிறாய்

என்பதை நான் கண்கூடாகப் பார்க்கிறேன்". என்று துரியோதனனிடம் சொல்லிவிட்டு, சபையைப் பார்த்து, "யுதிஷ்டிரர் இந்த ஆட்டத்தில் தோற்றுப்போன பிறகு, தன் சுதந்திரத்தையே இழந்து விட்டார். துரியோதனனின் அடிமையாய்விட்ட பிறகு, எல்லாம் இழந்தவர்க்கு பாஞ்சாலியைப் பந்தயம்வைக்க அவருக்கு உரிமை இல்லை. இது தர்மசாஸ்திரத்திற்கு ஒவ்வாதது," என்று தர்மநியாயத்தை உறைக்கிருர். இதற்கு, துரியோதனன் அவருடன் எதிர்வாதம் செய்யத் துணிவில்லாமல், தன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ப்ரதிகாமி என்கிற தன் ஸாரதியிடம், "இந்த விதுரருக்கு என்மேல் பொரூமை," என்று சாக்குகாட்டினுலும் அவர் உறைத்த நியாயத்திற்கு கட்டு பட்டு மறுபடியும் பாண்டவர்களுக்கு ஒரு (chance)வழிக்கு விட்டுக்கொடுக்க ஒப்புக்கொண்டானும்.

இந்த ஓர் உதாரணத்திலேயே நம் ஆத்மீக தத்வத்தின் ப்ரகாரம் என்ன அறிகிரேும் என்பதைப் பார்ப்போம்.

மனிதனுனவன் கடவுள் ச்ருஷ்டியில் பகவானின் ப்ரதிரூபமாக ஆக்கப்பட்டானென்று எல்லா மதங்களும் ஒப்புக்கொள்கின்றன. ஏனென்ருல் மிருகங்களுக்கும் மற்றும் பல ஜீவராசிகளுக்கும் ஐந்தும் ஐந்துக்குக் குறைவாகவும் அறிவை படைத்தாரென்றும், மனிதனை தன் ரூபமாக்கி அவனுக்கு ஆறறிவு கொடுத்து மற்றச்ருஷ்டி பூதங்களை அடக்கி ஆளச் சக்தியையும் கொடுத்தார். அவனுக்கு ஸேவை செய்யவும் அவனுடைய ராசிபெருகவும் மனிதனுக்குத் துணையாக ஓர் மனைவியைப் பெண்ரூபமாக்கிக் கொடுத்தார். அதுவே சிவசக்தியினுடையவும், அர்த்த நாரீஸ்வரதத்வமும், ஆதாம் ஈவான் என்றும் பலவிதமாக ஆரம்பிக்கின்றன. இந்த ஆருவது அறிவைத்தான் புத்தி என்கிரேும். விதுரரைப் புத்தி எனக் கொள்வோம். விதுரரின் செயல்களைப் பார்த்தோமானுல், புத்தி தத்வத்தை ஸுலபமாய் அறியலாம். புத்திக்கு எல்லா தர்மங்களும் நியாயங்களும், சாஸ்திரங்களும், நன்மை தீமை என்றபாகுபாடும் தெரிகிறது. அறிவுக்கு எல்லாவற்றையும் அறியக்கூடிய சக்தி இருக்கிறதல்லவா ? ஆனுல், மனதானது புத்திகூறும் நியாயங்களுக்கு தன் இச்சைப்படி காரியங்களைச் செய்ய பரிகாரத்தைத் தேடுகிறது. சிங்கத்திற்கும் புலிக்கும் மற்ற ஜீவன்களைக் கொல்லும் போது இது தீச்செயல், ஜீவஹிம்சைஎன்றஅறிவினுல்தான்அந்தஜீவனுக்கு

ஹிம்சையில்லாமல் அவஸ்தையைக் கொடுக்காமல் ஒரே அடியில் தலைமேல் அடித்து, அதன் சித்தஸ்வாதீனத்தை இழக்கச் செய்து, அப்புறம்தான் அதைத் தின்கிறது. அதைத் தின்னும்போது, அதன் மனமானது "ஹேபுத்தியே! ஆண்டவன் மற்ற ஜீவராசிகளுக்கு போல் புல்லையும் பூண்டுகளையும் தின்று உயிர் வளக்கும்படி எங்களுக்கு விதிக்கவில்லையே! புல் பூண்டு தின்றுவரும் ஜீவராசிகளே எங்களுக்கு உணவு என்பதல்லவோ விதித்திருக்கிறுன்? ஆகையால், இது என்ன தப்பு?" என்று மனதானது பரிகாரத்தைத் தேடுகிறது.

விதுரர் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் திருதராஷ்டிரன் தீச்சொல்களுக்குத் தலை வணங்கி, விதியை நொந்தான். நொந்தவன் கர்மாவையும், வினைப்பயன் என்பதையும் மறந்தானென்றே நாம் கொள்ளலாம்.

மகாபாரதத்தில் விதுரரைப்பற்றிச்சொல்லும் போதெல்லாம் தர்மநியாயங்களுக்கு அதிகாரியாகவும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக்கு சிறந்த தோழனுகவும் பாண்டவ கௌரவாதிகளிடமும் ப்ரீதியுள்ளவனுகவும் தான் காட்டுகிருர் வியாசர். பாரதப்போரில் அவர் பங்கு கொள்ள இஷ்டமில்லாமல், வனவாசம் சென்று விடுகிருர் என்று பாரதத்தில் முடிக்கப்படுகிறது.

ஆனுல், பாகவதத்தில் த்விதீயஸ்கந்த முடிவிலும், த்ரிதீயஸ்கந்த ஆரம்பத்திலும், விதுரருக்கும் மைத்திரேய மஹரிஷிக்கும் நடந்த ஆத்மதத்வ விசாரத்தைப்பற்றி கூறப்படுகிறது. அதனுல் விதுரர் ஆத்மவிசாரத்தில் இறங்கிவிட்டார் என்றும், பிறகு, போர்முடிந்த பிறகு யாத்திரையின் போதும், த்ருதராஷ்டிரர், காந்தாரி, குந்தி தேவிகளுடன் காட்டுத்தீயில் அகப்பட்டுக் கொண்டபோது ப்ரசன்னமானுர் என்பது விவரிக்கப்படுகிறது. இது ஒன்றே அவர் யமதர்மராஜனின் அம்சபூதமாய் விளங்கினுர் என்பதற்கு அத்தாக்ஷி. ராமாயணத்தில் எப்படி தேவாதி தேவர்களெல்லாம் வானரரூபிகளாகவும், மஹரிஷிகள் அம்சங்களாகவும் ஜனித்தார்களோ, அப்படியே கிருஷ்ணுவதாரத்தின் போதுதேவர்களெல்லாம் மனுஷ்யரூபங்களில் இப்புண்ய பூமியில் அவதரித்திருக்கிருர்கள். மரங்கள், செடி, கொடி ரூபங்களிலும் ஜனித்திருக்கிருர்கள். ஒவ்வொரு அவதாரங்களிலும் பகவானின்

லீலைகளை அனுபவிக்க வேண்டியே அவர்களும் பூமியில் இறங்கினுர்கள் என்று வைத்துக்கொள்வோம்.

அப்படியானுல், வரப்போகிற அல்லது வந்துகொண்டிருக்கிற அல்லது வந்து விட்ட கல்கி அவதாரத்திலும் அப்படித்தானே அவர்கள் அவதரித்திருக்க வேண்டும்? இதை ஆராய்ச்சி செய்ய ஒரு புத்தகமே எழுதலாம். இருந்தாலும், சுருக்கமாக நாம் ஒவ்வொரு காரிய கர்மாதிகளைக் கவனித்தோமானுல், ஏன், விஞ்ஞான வளர்ச்சி ஒன்றையே எடுத்துக்கொள்வோம். அது எப்படி இவ்வளவு தூரம் வளர்ந்தது? அந்த விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தை கடந்த 50 வருடங்களுக்குள்ளாக அதிவேகமாக வளர்ச்சியை காண்கிறேம். பல துறைகளில் அந்த விஞ்ஞானிகளே தைவாம்சம் படைத்தவர்கள் என்று சொல்லக்கூடுமல்லவா? தத்வ வளர்ச்சியை எடுத்துக்கொண்டாலும் அப்படியே. புண்ணிய புருஷர்களின் ஜீவியங்களை எடுத்துக் கொண்டாலும் அப்படியே. ஏதன் மத்தியில் பாபகர்மாக்களும், கொலை, களவு, மோசமத,மோஹ, போக,லோப வளர்ச்சிகளும் அதிவேகமாக முன்னேறிக் கொண்டிருப்பதைக் காண்கிறேம். ராஜாஜி இதையெல்லாம் பார்த்து யோசித்து ஆராய்ந்து பார்த்துப் பின்னர்தான் ஒருதரம் "ஆண்டவன்தான் நம்மையெல்லாரையும், நம் உலகத்தையும் காப்பாற்ற வேண்டும்; அதற்கு நாம் எல்லாரும் பிரார்த்தனை செய்வோமாக" என்று வேண்டினுர். ஓரோரு கஷ்ட காலங்களிலும் ப்ரும்மருத்ர தேவாதிகள் பார்க்கடல் முன் நின்று கொண்டு "பகவானே! எங்களுக்கு வேறு விமோசனமில்லை. நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும். அவதாரம் எடுங்கள். எங்களை தீமையிலிருந்து காப்பாற்றுங்கள். தீமைகளை விலக்குங்கள்." என்று வேண்டிக் கொண்டனர் என்று படிக்கிறேம். நாம் நேரில் காணவில்லை. இருந்தாலும் பல ஜன்மங்களுக்குமுன் நாமும் அப்பிராத்தனைக் கூட்டத்தில் ஒருவராய் இருந்தோமோ என்னமோ? யாம் அறியோம் பராபரமே! ஏன் நாம் அதை அறியமுடியவில்லை. அதை அறியக்கூடிய சக்தியை ஆண்டவன் நமக்கு அளித்த போதிலும் அதை பயன் படுத்தாமல் மாயையின் வலையில் சிக்கி, அதிலிருந்து தப்ப முடியாமல் தவிக்கிறேம். அதனுலேயேதான் புத்தராக அவதரித்து மாயையை அகற்றுங்கள். அதற்கு வழி இதோ என்று காண்பித்தார். நாம்தான் மூடர்களாயிற்றே! நாம் செய்யும்

ஒவ்வோர் பாவங்களிலும் நம்மை அந்த மாய இருளானது இன்னும் கருமேகமாக மூடிக்கொண்டே போகிறதே! இடி இடித்து அக்கருமேகம் மழையாக நம்தலைமீது பொழிந்து நம்புத்தியை சுத்தப்படுதினுலொழிய நமக்கு புத்தி விகாஸம் ஏற்படப்போவதில்லை!

நேற்று சாயந்திரம் கூட, கபாலீஸ்வரர் குளக்கரையில் சந்தியாஜபத்தில் நான் அமர்ந்திருந்த போது,ப்ராம்மனேத் தமர்களான வைதீகர்கள் பேசிக்கொண்டிருந்த வம்புப் பேச்சுகள் காதில் விழ அதிலும் மற்றைய யோக்கியப் ராம்மணர்கள் ஜபத்தில் அமர்ந்திருந்தவர்கள், மனத்துய ரத்துடன் ஜபம் செய்து கொண்டிருப்பதையும் கவனித் தேன். என்ஜபத்தின் கூர்மை சிறிது பிசகிய போதிலும் இக்காட்சியானது என் சிற்றறிவை பிரகாசப்படுத்தியது. முன்னேற்றத்தைப் பற்றி எல்லோரும் பிரசாரம் செய்யும் காலத்தில், ஒவ்வொரு உத்தமனும் தனக்குத்தோன்றியதை எடுத்துரைக்கும் இந்த காலத்தில், ஹரிஜன முன்னேற்றம், ஏழைகள் முன்னேற்றம், பண்புமுன்னேற்றம், நேர்மைமுன் னேற்றம், என்று பலவிதமான முன்னேற்றங்களைப் பற்றி பேசுங்கால், உத்தம பிராம்மணர்களின் முன்னேற்றத் தைப்பற்றி கருதுபவர்கள் ஒருவரும் இல்லையே என்று மிக வும் கவலைப் படுகிறேன். ஒருவேளை இவர்கள் முன்னே றினுல், இவர்களின் நிலை முன்னேறினுல், மற்றவர்களும், மற்ற எதுவும் முன்னேறுமோ? பகவானின் சித்தமும் இம் மாதிரி இருக்கலாமோ? என்றெல்லாம் நான் சிந்தித்துக் கொண்டேவந்தேன். அப்போது எனக்கே சோதனைமாதிரி ஒரு காட்சியைக் கண்டேன். நான் என் சொல்வேன்? சொல்லவும் முடியவில்லை. சொல்லாமல் இருக்கவும் முடிய வில்லை. ஒருஏழை புரோகிதர், தன்னுடைய ஆதீனத்திலி ருக்ககூடிய ஒரு பருவப் பெண்ணை தரைக்கட்டிடத்தில் உட்கார வைத்துக் கொண்டு, தன்னை அணுகுவார்களா, அன்றைய பொழுதுக்கும், நாளைய பொழுதுக்கும் சாப்பாட் டுக்கு கிடைக்காதா என்ற ஏக்கமும் அவ்விருவர்கள் உள் ளங்களில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. இக்காட்சியைக் கண்டவுடன் இந்த பாவத்திற்கு நாம் சாட்சியாகக் இருக்கக் கூடாது. ஆண்டவன் எந்த வித மெல்லாம் நமக்கு சோதனைகளை ஏற்படுத்தி இந்த சோதனைகளில்இவன் வெல்வானு, இல்லை, அகப்படுவானு, அகப்பட்டால் இவனை எப்படி மீட்பது, என்றெல்லாம் சிந்திக்கிருரா? கருணுமூர்த்தியில்லையா ஆண்டவன். பரி

பாலிப்பதே அவர் கடமையல்லவா! "பாபிகளையும், என்னை ஒரு கணம் நினைத்தால், கட்டாயம் காப்பாற்றுவேன். துயரத்திலிருந்தும் சோதனைகளிருந்தும் மீட்பேன்.'' என்று உத்தரவாதம் அளித்தவரல்லவா? அவரை எல்லோரும் துதிப்போமாக!

8. தரும புத்திரர்

துர்வாஸரிடமிருந்து வாங்கிய வரப்ரஸாதத்தினால் குந்திதேவியானவள், தான் கல்யாணமாகி பருவமடைந்து பாண்டு மகாராஜாவிற்கு கிடைத்த சாபத்தை அறிந்து விஸனமுற்று, சந்ததிபெறவிரும்பி பாண்டுவின் அனுமதிபெற்று, யமதர்மராஜாவை வரித்தாள். யமன் குந்தியின் முன்தோன்றி குந்தியிடம் தன் அம்சமாக புத்ரனை அனுக்ரஹித்தான். யமதர்மராஜன் பூர்வசாபத்தினால் விதுரராக அவதரித்தான் என்றும் விதுரனைப் பற்றி எழுதும் போது கண்டோம். தேவர்களுக்கு நித்யானுபூதியாய், நித்யானுஸாரியாய் தங்கள்லோகங்களிலிருந்து கொண்டே அம்சங்களை பூலோகத்தில் ஆவிர்பவிப்பார்கள் என்று பூராணங்கள் அனேக விதங்களில் கூறுகின்றன. இம்மாதிரி ஒவ்வொரு அவதாரங்களிலும் தேவர்கள் பூலோகத்தில் அவதரித்திருக்கிறார்கள். ராமாவதாரத்தில் தேவர்களெல்லாம் வானரர்களாய் வந்தனரல்லவா? அம்மாதிரி விதுரர் வேதங்களை எல்லாம் அறிந்து வேதங்கள்படி தர்மசாஸ்த்திரங்களை அப்பப்போது த்ருதராஷ்டிரனின் சபையில் எடுத்துரைப்பவர். த்ருதராஷ்டிரனே விதுரர் பேசினால் அவ்வார்த்தைகளுக்கு மதிப்புவைத்தார் என்றால் வித் என்ற வடமொழி பதத்திற்கு அறி'' என்றஅரத்தத்தின் படி விதுரர் தர்மங்களை அறிந்து போதித்தவர். தருமபுத்ரரோ தர்மத்தையே அனுஷ்டித்து ஒருஇமை கூட பிசகாமல் பொருமையே உருவெடுத்தவர். ஆகையால் விதுரரும் தருமரும் முறைப்படி சித்தப்பன் பிள்ளை என்றிருந்தனர் என்றாலும் இருவரும் தர்மராஜனே உருவெடுத்தவர்கள் என்பதற்கு வேறு அத்தாக்ஷியே தேவையில்லை.

தருமரின் வார்த்தைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் கண்ணனே கட்டுப்பட்டான் என்றால் தருமரின் குணசீலங்களைப் பற்றிக்கூற வேண்டியதில்லை. ஸத்யத்திற்கே

கட்டுப்பட்டு வந்தவராதலால் அவருடைய ரதமானது பூமியிலிருந்து ஓர் அடி மேலேயே நிற்குமாம். யுத்தத்தின் போது துரோணரைக் கொல்ல கிருஷ்ணனின் சூழ்ச்சியால் தருமர் வாயிலிருந்து "அஸ்வத்தாமா ஹத:" என்று வந்ததாம். "குஞ்ஜர:" :என்று மெல்லிய குரலில் உரைத்த போது துரோணர் புத்ர சோகமடைந்து வில்லை தூக்கி யெறிந்ததும் அர்ஜுனன் பாணம் தொடுத்து திருஷ்டத் யும்னன் துரோணரின் தலையை அறுத்தான். இவ்வொரு பொய்யை உரைத்ததாலேயே தருமரின் ரதமானது அரை அடிகீழே இறங்கி விட்டதாம். அதாவது தருமமும் ஸத்ய மும் ஒரு மனிதனை "தலை காக்கும்" என்றபடி பூமியில் சம்ப விக்கும் எவ்வித ஆபத்திலிருந்தும் தப்பவைக்கும் என்று புலப்படுகிறதல்லவா? இது மாத்திரமல்ல. இந்த ஒரு பொய்யை யுரைத்து துரோணர் உயிருக்கு ஹேதுவானபடி யால் தருமர் ஸ்வர்க்கத்திற்குப் போகுமுன், நரகவாஸனை யையும் பிடிக்க வேண்டியதாயிற்றும். இவ்வொரு பொய்க்கே இத்தனை விபரீதமென்றால், நம்மைப்போலொத் தவர்கள் பொழுது புலர்ந்தால் பொழுது முடியும்வரை பல காரணங்கள் பற்றிபலபொய்களை, அறிந்தோ அறியாமலோ ஸ்வயகாரியமாகவோ பிறர் காரியமாகவோ உரைக்கி றோமே, நமக்கு விமோசனமே யில்லையா? என்ற கேள்வி எழும்புகிறது. ஈஸ்வரத்யானத்தினாலும், ஈஸ்வரனிடம் சரணாகதி யடைவதுதான் ஒரேவழி என்று பெரியோர்கள் பலர் கூறுகின்றனர்.

தருமரின் சரிதத்தில், சூதாட்டக் கட்டம் ஒரு பெரிய ப்ரச்சனைக் கிடமானது. சூதாட்டம் அதாவது, பாபத்தை யும் துக்கத்தையும் விரோதத்தையும் விளைவிக்கக் கூடியது என்றறிந்தும் சூதாட்டத்தில் தருமர் ஏன் ஈடுபட்டார்? மதியிருந்தும் மதிக்கெதிராக மனிதன் ஒரு காரியத்தில் ஈடு பட்டால் அதுவே விதிஎன்றுகூறலாம். ஆண்டவன்செயல் எனலாம். இவ்விடத்தில் கண்ணனின் திருவிளையாட்டு எனலாம். ஏனெனில் சூதாட்டம் நடந்திராவிடில் பாண்ட வர்கள் வனவாசம் நடந்திராது. மேற்படி துர்யோதனாதி கள் ஸம்ஹாரமும் நடந்திராது. ராமாயணத்தில் எப்படி மந்தரை யதேச்சையாய் தோன்றிராவிடில், ராமகதையே வேருகவும், ராவண ஸம்ஹாரமும் நடந்திராதோ அம் மாதிரியே ஓர் முடிவான கார்யமாக துஷ்ட நிக்ரஹத்திற்கு ஹேதுவாக இந்த சூதாட்டக் கட்டம் ஏற்பட்டது. மேலும், பாபங்களில் ஈடுபட்டவர்களுக்கு அநுபவம் கடைசியில்

தான் படைக்கிறுன். பாபச்செயல்கள் வளர வளர அவனை அவைகளிலிருந்து ஆண்டவன் கட்டுப்படுத்துவதில்லை. அவனுக்கே செல்வமும் செளக்யமும் அளக்கிருர். தர்மத்தில் ஈடுபட்டவர்களுக்கு சோதனைகள் பல ஏற்படுகின்றன. அந்த தர்மத்தின் பலனை கடைசியில் பெறுகின்றுன். இவையெல்லாம் நிதர்சனமாக இப்பவும் காண்கிறுேமல்லவா? அந்த்யகால அநுபவத்தை ஒருவனின் வினைப் பயன் என்று கூறுகிறுேம். "அனுயாஸேன மரணம்" கிடைக்க ஆண்டவனைப் ப்ரார்த்திக்கிறுேம்.

தருமமும் தைரியமும் தர்மரைஎந்நேரமும்காப்பாற்றியது என்பதற்கு அநேக விருத்தாந்தங்கள் கூறப்பட்டுள்ளன. அரக்கு மாளிகை சம்பவம், வனவாசத்தில் அடைந்த இன்னல்கள், திருதராஷ்டிரன் சபையில் பாஞ்சாலி துயிலுரியும் போதடைந்த அவமானம், யக்ஷனின்ப்ரச்சனைகள்,விராட சபையில் தனக்கு நேர்ந்த அநுபவங்கள், யுத்தத்தின்போது பட்ட அல்லல்களும் துயரங்களும், எல்லாவற்றிற்கும் கிருஷ்ணபரமாத்மாவிடம் இடைவிடாத ஓர் பக்தியுணர்ச்சியே என்றுலும், கிருஷ்ணன் தருமரின் தருமசீல குணத்திற்கு கட்டுப்பட்டவனுய், பல இன்னல்களைத் தீர்த்துவைத்தான். கடைசியில் யுத்தத்தில் வெற்றியடைந்து, பலவருஷங்கள் ராஜ்யபாரம் வகித்து பின்னர் ராஜ்யத்தை பரீக்ஷீத்திடம் ஒப்படைத்து விட்டு பாண்டவர்கள் ஸ்வர்க்ககமனம் செல்கிருர்கள். அப்போது வழியில் ஒவ்வொருவரும் மாள, கடைசியாக தருமரை தருமமே ஓர் நாய் உருவாக பின் தொடர்ந்து வந்ததாம். வ்யாசர் வெகு அழகாக விஸ்தரிக்கும்போது, இந்திரன் தேவ சபைக்குள் இந்த நாய்க்கு இடமில்லை என்று சொல்ல தருமர் அப்படியானுல் இந்த ஸ்வர்க்கம் எனக்குத்தேவையில்லை என்று திரும்பினுராம். அப்படி தருமர் பொறுமைக்கும், தயாளகுணத்திற்கும், ஸத்வகுணங்கள் நிரம்பியிருந்ததற்கும் மகாபாரதத்தின் ஒவ்வொரு கட்டங்களிலும் பார்க்கலாம். இதை விரிவாகச் சொல்ல வேணுமானுல் பாரதம் பூராவாக எழுதவேண்டிவருமென்பதால் இத்துடன் விளக்கத்தை நிறுத்திக் கொள்வோம்.

9. பீமஸேனன்

பீமன் வாயு பகவான் புத்திரன். ஆகையால் ஆஞ்ஜநேயரின் தம்பியாவான். பீமன் என்ற பதத்திற்குபீதியை உண்டு பண்ணக் கூடியவன் என்று அர்த்தம். அதிபல

சாலி. பதினாறு யானை பலமுள்ளவனும் கூடதமையன்வார்த்தைக்கு கட்டுப்பட்டவன். இதற்கு அநேக சந்தர்ப்பங்கள் காட்சியளிக்கின்றன. விராடன் சபையில் கூட பீமன் தன் கோபத்தைக்காட்டி ஓர்மரத்தை கண்ணுலேயேஎரித்துவிடுவான்போலத்தோன்றினும்எவ்வளவுக்கெவ்வளவுதருமர் பொறுமையே உருவெடுத்தவரோ அவ்வளவுக் கவ்வளவு கோபமே உருவெடுத்தவன் பீமன்.ஸாதாரணமாகவே நாம் புயல்காற்று வீசும்போது பார்க்கிறோம். அப்பேர்க்கொத்த புயலே உருவான வாயுவுக்கு புத்திரன் எப்படியிருப்பான். இதேமாதிரி ஆஞ்சனேயரையும்லங்காதகனத்தின் போதும் யுத்தத்தின் போதும் காண்கிறோம்.

இங்கே ஓர் சர்ச்சை எழும்புகிறது. இந்திரன் வாயு அக்னி எமன் வருணன் இவ்ஐவரும் பஞ்ச பூதங்களுக்கு முக்ய மான தேவர்கள் எனவே வேதங்கள் சித்தரிக்கின்றன. குந்தி இவர்களில் மூவரைத்தான் வரித்தாள். ஸூரியனை விளையாட்டாக கன்னிப் பருவத்தில் வரித்து கர்ணனை பெற்றது வேறு விஷயம். மாத்ரியானவள் குந்தியிடமிருந்து துர்வாச மந்திரத்தைக் கற்று அசுவனி தேவர்களை வரித்து நகுலசகாதேவர்களைப் பெற்றதும் வேறே விஷயமாக வைத்துக் கொள்வோம். குந்தி அக்னியையும் வருணனையும் விட்டு மற்ற மூவர்களையே பொறுக்கி எடுத்த காரணம் தானென்ன? நெருப்பையும் ஜலத்தையும் கண்டு நடுங்காதவர்யாவர்? இவ்வைவரிலும்சரி இவர்களுடைய புத்திரர்களிலும் சரி பீமனுக்கு மாத்திரம் பலசாலி பட்டம் வந்ததேன்?

ஐந்துதேவர்களிடையே யார் பலசாலி யார் பலஹீனன் என்கிற ப்ரச்சனையே கிடையாது. அப்படி அவர்கள் ஒரு காலத்தில் தங்கள் பலத்தில் கர்வம் கொண்டபோது பகவான் ஒரு துரும்பைக்காட்டி அதனிடம்தங்கள் தங்கள்பலத்தைக் காட்டுமாறு சொன்னார். ஒருவராலும் ஒன்றும் முடியவில்லை. ஆகையால் பலம் பொருந்திய வாயு என்பது நமக்கு பலத்தையும் உயிரையும் ஊட்டுவது இப்பிராணனே யல்லவோ? வாயு பகவான் மறைந்து விட்டார் என்றால் மனிதன் உயிர்வாழ்வதேது? ஆகையால் தான் உபநிஷத்துகளில் ப்ராணவாயுவை முக்யமாக எடுத்துக் கொள்கிறார்கள். யோகாப் யாஸத்திற்கும் ப்ராணனே ஆதாரமாக நிற்கிறது. வாயு ஒன்று இருந்தால் போதும் மனிதன் வெகுகாலம் உயிருடன் இருக்க முடியும் என்று ப்ருஹதாரண்ய உபநிஷத் கூறுகிறது. பலத்தைக் கொடுப்பது வாயு. அம்மாதிரி பஞ்ச பாண்டவர்களுக்கு பக்க பலமாயிருந்தவன்

பீமன்.பீமனைக் கொன்றால் பாண்டவர்களின் பலம் குறையும் ,என்று துர்யோதனன் பலதடவைகளில் பீமனை யல்லவோ கொல்ல முயற்ச்சித்தான்?

இதைக் கூர்ந்து ஆராய்ந்துபார்க்குமளவில் என்ன அறிவோம்? பஞ்ச பூதங்களில் ப்ராணவாயு அல்லது ப்ராணன் அல்லது சுவாஸம் முக்கியமானது. மூச்சு அடங்கி விட்டால் ப்ராணன் போய் விட்டது என்கிறோம். மூச்சே ஒருமனிதன் ஜிவிப்பதற்கு ப்ரதானம். ஒருஜீவனுக்கு ஆயுள் 21600 மூச்சுகள் என்று சிலர் கூறுகிறார்கள். இது ஓர் அநுமான மேதவிந நிர்ணவியமாகச் சொல்லமுடியாது. ஒருவன் வேலை செய்பவன் உடற்பயிற்சி செய்பவன் வேகமாக சுவாஸிக்கிறான். ஆகையால் அவனது ஆயுள் குறைவாகிவிடுமா? அல்ல. மூச்சுஜீவனுக்கு ப்ரதானம். மூச்சை அடக்கி பூரகம் என்றும். நிறுத்தி அதை கும்பகம் என்றும் அதை வெளிப் படுத்தி அதை ரேசகம் என்றும் இவைகளுக்கு அளவு கண்டவன் எவனொருவன் அப்யாஸம் செய்கிறானோ இதையே யோகம் என்று சொல்லி; அவனுடைய ஆயுள் குறைவதேயில்லை என்று சொல்லுகிறார்கள். அதாவது இந்த சுவாஸத்தை கட்டுப் படுத்தினால், யோகாப்பியாஸத்திற்கு மூல ஹேதுவாகவும் ஏகமனதாக ஆண்டவனையோ பரப்ரம்மத்தையோ உள் நோக்குவதற்கும் அல்லது எதற்கும் ஆங்கிலத்தில் concentration என்கிற சக்தியை வலுப்படுத்துகிறது. இந்த concentration அல்லது concentrated meditation என்பதைத் தான் ஏகாக்ரசித்தம் என்று கூறுகின்றோம். இந்த சுவாஸாப்யாஸத்தைப்ராணயாமம் என்றும் விதித்திருக்கிறார்கள். சாதாரணமாய் நித்தியம் சரிவர மூன்று காலங்களிலும் பத்து ப்ராண யாமங்கள் பண்ணுவானேயாகில் அவனுடைய புத்தியானது கூர்மையாகும். இந்த ஏகாக்ரமனதை அதாவது concentration ஐ வளர்க்கும். அதற்காகத்தான் காய்த்ரிஜபத்திற்கு முன்பும் ப்ராணயாமத்தைச் செய்யாமல் ஆரம்பிப்பதில்லை. ஆகையால் ஓர் ஜீவன் வாழ்வைக் காப்பாற்ற வேண்டுமென்றால் ஆகாரமில்லாமலும் நீரில்லாமலும் கூட இருந்து விடலாம். ப்ராணன் உள்ளும் வெளியும் போகாமல் இருந்தால் ஜீவன் உள்ளிருக்க முடியாது. இதையே ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் யாஞவல்கிய மகரிஷி விரிவாகக் கூறியிருக்கிறார். பதஞ்சலி மஹரிஷியும் தன் யோக சூத்திரங்களிலும் சொல்லியிருக்கிறார். பகவானும் கீதாசாஸ்திரத்தில் "ப்ராணான் ஸம்யம்ய" என்று இடை

யையும் பிங்களையையும் சமப்படுத்தினுல் ப்ரம்மஸ்வருபம் காணலாம் என்று கூறினுர். இதெல்லாம் பெரிய சாஸ்திரம். அதற்குள் போகாமல் ப்ராணனின் முக்யத்வத்தைப் பற்றி கூறிவிட்டோம்.

வாயு புத்திரன் பாண்டவர்களின் உயிர் நாடி என்பதற்காக இவ்வளவு தூரம் விவரித்தோம்.

பீமன் மகா சிவ பக்தன். அர்ஜுனன் "தான் தான் சிவனிடத்தில் மிகவும் ஈடுபாடுடையவன், சிவனிடமிருந்து பாசுபதாஸ்திரம் பெற்றுவிட்டோம்," என்று கர்வம் கொண்டிருந்தான். தன் சிவ பூஜைக்காக ஏராளமான புஷ்பங்கள் வரவழைத்து அர்ச்சிப்பான். இப்படியிருக்கும் போது கிருஷ்ணன் ஒரு நாள் அர்ஜுனனை ஓர் ஆற்ருேரம் அழைத்துச் சென்ருர். அவர் ஆற்று வெள்ளத்தில் வித விதமான புஷ்பங்கள் தேவலோகத்து புஷ்பங்கள் போல மிதந்து வந்ததைக் கண்ணன் காட்டினுன். அர்ஜுனனைப் பார்த்து "இந்த புஷ்பங்கள் எங்கிருந்து வருகின்றன" என்று கேட்க, அர்ஜுனனை உற்பத்திஸ்தானத்திற்கு அழைத்துச் செல்கிருர். அங்கே பீமன் ஏகாக்ரகத்துடன் கண் மூடி சிவமானஸ பூஜை செய்து வந்தானும். அவன் கைகளில் தேவலோகத்திலிருந்து புஷ்பங்கள் சொறிய அப்புஷ்பங்களை பஞ்சாக்ஷரியுடன் மனதினுலும் கைகளாலும் அர்ச்சித்து வந்தானும். தன் அண்ணனின் சிவபக்தியைப் பார்த்து அர்ஜுனன் கர்வம் குலைந்து தன்னைத்தானே நொந்து கொண்டானும்.

இதே மாதிரி பீமனும் தன் பலத்தில் மிகப் பெருமை கொண்டு மலைகள் வழியாய் போகும் போது ஆஞ்ஜனேயர் அங்கு படுத்திருந்தாராம். தன் தம்பி வருவதைப் பார்த்து பூரித்து பீமனை சோதிக்க எண்ணி ஏதோ குரங்கென்று பீமன் அவமதித்த போது தன் வாலை அப்புறப் படுத்தி விட்டு செல்லுமாறு ஆஞ்சனேயர் சொன்னுர். பீமனுல் அவ்வாலை தூக்கக் கூடமுடிய வில்லை. பிறகு அது தன் ப்ராதா என்பதை அறிந்து அஞ்சலிபந்தம் செய்து அனுமானை தனக்கு எப்போதும் ஸஹாயமாக இருக்கும்படி வேண்டினுன்.

ஆகையால் மனிதன் அகங்காரமடையும் போதெல்லாம் உள்ளிருக்கும் பரமாத்மாவான ஸ்ரீக்ருஷ்ணன் நம் அகங்காரத்தை அடக்கி விடுகிருர். அகங்காரம், ஸ்வய

காரியதுரந்திரம், அலட்சியம் இத்தீய துர்க்குணங்களெல்லாம் இந்த ஒரு மம காரத்தினுல் ஏற்பட்டு விடுகின்றன என்பதே கருத்து. ஆதலால், மம காரம் எழும்போதெல்லாம் கூடியவரை அடக்க வேண்டும்.

ஸகோதரர்களிடத்தில் வாஞ்சை கலந்த மரியாதைக்கும், அவனுடைய பேதை மனதிற்கும், பல உதாரணங்கள் காணலாம். அரக்கு மாளிகை, சூதாட்டம், பகாசுரவதம், கீசகவதம், விராடன் ராஜசபையில் நடந்த ஓர் அவமானத்தை அடக்கியது, சண்டையில் தன் சகோதரர்களை சுழன்று சுழன்று காப்பாற்றுவது; கடைசியில் துரியோதனஸம்ஹாரம், இவைகளில் பாரதக்கதையின் ருசி தவிர்த்து கதைகளையும் சம்பவங்களையும் அப்படி வ்யாஸர் விஸ்தரித்து, பீமனை ஓர் பெரிய வீரனுகவும், பக்தனுகவும், காருண்யமுள்ளவனுகவும் பெருமைப்படுத்துகிருர்.

10. அர்ஜுனன்

அர்ஜுனன் இந்திரனின் புதல்வனுனதாலேயே மிகவும் அழகு பொருந்தியவன். அழகுக்கு தகுந்த பலமும், வீரமும் தீரமும் உள்ளவனுய் விளங்கினுன். வில் வித்தையில் அவனை விட நிபுணனே இல்லை. அவன் வில் வித்தை கற்றபோது Concentration powers அதாவது ததேக கவனம் என்பதை துரோணர் கண்டார். எல்லா சிஷ்யர்களையும் மரத்தின் மேலுள்ள கிளையொன்றில் குருவியின் தலையை பாணத்தால் அடிக்கச் சொன்னுர். அப்படிக் சொல்லும்போது எல்லோரையும் "குருவியின் தலையை தவிர்த்து, வேறே எதைதைப் பார்க்கீறீர்கள்" என்ருர். எல்லோரும் ஏதேதோ சொன்னுர்கள். அர்ஜுனன் மாத்திரம் "கண்ணுக்கு அக்குருவியின் தலைமாத்திரம் தான் பார்க்கிறேன் அதன் மூக்குகூட தெரியவில்லை" என்றுசொன்னுரும். இவனே நமக்குத் தகுந்த சிஷ்யன் என்றுதுரோணர் மெச்சினுராம்.

தபஸ்ஸும் இதுவே போன்றது. மனதை மற்ற விஷயங்களில் சஞ்சரிக்க விடாமல் ஆண்டவனிடத்திலேயே லயிக்கச் செய்ய வேண்டியது தபஸ்ஸின் முக்கிய நோக்கம். அப்படி லயிக்கச் செய்வதற்கு ஒருவன் மிகப்பிரயாசைபட வேண்டியிருக்கிறது. அது ஸுலபமல்ல. ஏனெனில் இந்த மனமானது ஓர் குரங்கைப் போன்றது. விஷயாவிஷயங்களில் வெகுவேகமாகப் பாய்ந்து கொண்டேயிருப்பது. இதை ஒரு நிலைப்படுத்த வேண்டுமானுல் அதற்கு ஸாத

னங்ளாக பதஞ்சலி மஹரிஷி, யமம், நியமம், ஆஸனம் ப்ராணுயாமம். இத்யாதி வழிகளை வகுத்திருக்கிருர். இவை களெல்லாம் கூட அந்த மனதைக் கட்டுப்படுத்தக் கூடிய ஸாதனங்களே ஒழிய மனதை மனத்தினுல்தான் கட்டுப் படுத்த முடியும். ஒருவன் கணித சாஸ்திரத்தில் ஈடுபட்டி ருப்பவன் ஒரு கஷ்டமான கணக்கை விடைகண்டு பிடிக்க நேரம் கூட போவது தெரியாமல் பக்கத்தில் எது நடந்தா லும் அதுகூட தெரியாமல், எப்படி அக்கணக்கு மேலேயே அவன் மனம் செல்கிறதோ, அப்படிதான் இந்த அஸ் திரப்பயிற்சியாகட்டும், தற்கால ரீதியாக துப்பாக்கிப் பயிற்சி கூட, காலப்போக்கிற்காக பல விளையாட்டுகள் இருக்கின்றனவே அவைகளில் கூடத்தான், டென்னிஸ் ஆடுபவன் அந்த பந்தின் மேலேயேதான், கவனமெல்லா மிருக்கும்.

இந்த அஸ்த்ர சாஸ்திரம் என்பது நம்முன்னேர்களால் மந்த்ர பூர்வமாகக் கண்டு பிடிக்கப்பட்ட ஓர் அரிய சாஸ் திரம். இது அதர்வண வேதத்தில் கூறப்பட்டுள்ளது. வருணுஸ்திரம், ஆக்னேயாஸ்த்ரம்,ப்ரம்மாஸ்திரம்,பலஅஸ் திரங்களுக்கு பலவித மந்தரங்களுடன் உச்சரிப்புடன்விடப் பட்டால் அதன் குறி வீண்படுவதில்லே. அப்படி ராமாய ணத்திலும் பாரதத்திலுல் பல அஸ்திரங்களேப் பற்றிப்படிக் கிருேம். அர்ஜுனன் தவமிருந்து சிவ பிரானிடமிருந்து பாசுபதாஸ்திரம் பெற்ருன். இப்படிப்பல அஸ்திரங்கள். கர்ணன் இந்திரனிடமிருந்து சக்தியாஸ்திரம் பெற்ருன். தற்காலத்தில் நம்முன்னேரிடமிருந்து தலேமுறை தலே முறையாக மற்ற சாஸ்திரங்களேப் போல இந்த அஸ்த்ர சாஸ்திரம் ஏன் வழங்கி வரவில்லே! என்ற கேள்வி எழுகிறது. இதற்கு பல காரணங்கள் கூறப்படலாம். முதற்காரணம் யுகக்கோளாறு கலியுகப்ரபாவத்தினுல் தர்மமும் ஸத்யமும் குன்றிப்போனதால் மனிதனுக்கு தவ வலிமையும் குன்றிப் போய்விட்டது. மைலாப்பூர் குளக் கரைக்கு அருமையான ஸாயம் ஸந்த்யாவேளே ஸூர்யபக வானும் தன்ரச்மிகளேக்குறைத்துக் கொண்டு மனேரம்மி யத்தை கொடுக்கின்றநேரம். பத்து ப்ராமணர்கள் ஸந்தியா வந்தனம் செய்து ஜபத்துக்கு உட்காருகிருர்கள். அந்த பத்து மனதுகளிலும் என்னென்ன தான் எண்ணங்கள் ஓடுமோ அவை பத்தும் வாய் மூலமாகக் கிளம்பி வம்புப் பேச்சே ஜபமாக முடிகிறது. இதை நித்யபடி நாம் பார்க்க லாம். அநேகமாக எல்லா இடங்களிலுமே அப்படிதானி

ருக்குமோ என்னமோ? எதற்கு சொன்னேன் என்றால் யுக தர்மத்தினால் தவவலிமை குறைந்து விட்டது. அஸ்த்ர சாஸ்திரம் துப்பாக்கி சாஸ்திரமாக மாறி, பிறகு பீரங்கிக ளாக மாறி, இப்போது அணு குண்டாகவும், ஹைட்ரஜன் குண்டாகவும் மாறியுள்ளன. இந்த சாஸ்திரங்களெல்லாம் எங்கிருந்து வந்தன! அந்த ஆண்டவன் கொடுத்த பிச்சை அறிவுதானே? தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் சக்தியையும் அவனே தான் கொடுக்கிறான். தன்னைத் தானே முன்னேற்றிக்கொள்ளவும் மோக்ஷஸாதனங்கள் வகுத்துக் கொள்ளவும் அவனேதான் அறிவைத் தந்திருக்கின்றனன்

அர்ஜுனன் கதை முழுவதிலும் கண்ணன் பக்கத்திலி ராமலோ கண்ணனின் உதவி யில்லாமலோ, ஒரு கார்ய மும் நடத்தியதில்லை. இதில்தான், கண்ணன் நாராயண னென்றால் அர்ஜுனன் நரன் என்கிற நர நாராயண தத்வ மடங்கியிருக்கிறது. அதையே ஜீவாத்மா பரமாத்மா ஐக்ய பாவமாகவும் வைத்துக் கொள்ளலாம். இதில் அர்ஜுனன் கண்ணனைப் பார்த்துச் சொல்கிறான்.

"ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்
ஹேக்ருஷ்ண ஹேயாதவ ஹே ஸகேதி
அஜானதா மஹிமானம் தவேதம்
மயா ப்ரமாதாத் ப்ரணயேன வாபி"
யச்சாவஹாஸார்த, மஸத்க்ருதே அஸி
விஹார சய்யாஸனபோ ஜனேஷு
ஏகோ அத வாபயச்சுத தத்ஸமக்ஷம்
தத்க்ஷாமயே த்வாமஹமப்ரமேயம்"

ஜீவாத்மா பரமாத்மாவை எங்கும் நிறைந்த பரப்ரம்ம ஸ்வரூபம் என்றறிவது மிகவும் சிரமம். பரமாத்மா நம் முன்னிருந்து ஸாக்ஷிபூதமாக நம் காரியங்களைக் கவனிக்கி றார். மிஞ்சிய தீய வழியாக இருந்தால் அதற்கு நம் மனச் சாக்ஷி என்கிறோமே அதன் மூலமாக அறிவிக்கிறார். அதற்கும் மிஞ்சிய காரியங்களை இந்த ஜீவாத்மா செய்யுமே யாகில் அதன் பலாபலன்களை அநுபவித்துக் கொண்டும் வருகிறது. பாபச்செயல்கள் மிகையாயிருப்பின் பாப மூட்டையை சுமந்துகொண்டே செல்கிறது. ஒவ்வொரு ஆடையாகிய ஜன்மத்தை அடையும் போதும் அதேமாதிரி புண்ய கர்மாக்களுக்கும் ஸுகங்களை அநுபவித்துக் கொண்

டிருக்கிறது. ஸர்வாந்தர்யாமியாகிய பரமாத்மாவோ வென்ருல் ஸுகத்திலும் பங்கெடுப்பதில்லை. துக்கத்திலும் பங்கு கொள்வதில்லை. புழு முதல் யானை, மனிதன்வரை அதனைல் தான் பகவானை குணாதீதன் என்றழைக்கிறேம். குணங்கள் ஸத்வரஜதமோ குணங்கள் இருந்தால் தானே கர்மாக்களும் ஸுக துக்காதிகளும் ஏற்படுகின்றன. குணாதீதனய் இருந்துவிட்டால் பரமாத்மாவுடன் ஒன்றரக் கலந்து விடுகிறேம். அதையே மோக்ஷம் என்றும் விடுதலை என்றும் (liberation என்று ஆங்கிலத்தில்) கூறுகிறேம்.

அர்ஜுனன் கதையில் எத்தனை ஸம்பவங்களில் கண்ணன் அர்ஜுனன் மனம்போன போக்குப் ப்ரகாரமெல்லாம் விட்டு விட்டு அவனை பல தடவைகளில் காப்பாற்றியு மிருக்கிருர். அர்ஜுனனும் கண்ணனுக்கு தாஸானுதாஸனய் அவன்சொல் தட்டாமல் இருந்ததெல்லாம் விசேஷமாகக் கவனிக்க வேண்டியது. நம்மனதில் கூட நற்புத்தி, துற்புத்தி என்று இரண்டுவிதம் இருப்பதைப் பார்க்கிறேம். துற்புத்தி தீயகாரியங்களை செய்வித்து அவைக்கு ஸமாதானமும் ஆப்யாயமும் தேடுகிறது. நற்புத்தியோ அவைகளைக் கண்டனம் செய்து தடுக்கிறது. நற் காரியங்களுக்கு ஹேதுவாகவும் இருக்கிறது. அதனல் தான் கீதையின் கடைசி ச்லோகத்தில்

"யத்ர யோகேச்வர க்ருஷ்ணோ யத்ர பார்தோ தனுர்தர:
தத்ர ஸ்ரீர்விஜயோ பூதிர் த்ருவா நீதிர்மதிர் மம" என்ருர்

இதன் மர்மமென்ன? பார்த்தன் இருக்குமிடத்தில் எல்லாம், கிருஷ்ணனும் கூடவே இருப்பான் என்ற உள்ளர்த்தம் த்வனிக்கிறது.

இதே மாதிரி ராமாயணத்திலும்

"யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர க்ருத மஸ்தகாஞ்ஜலிம்
பாஷ்பவாரி பரி பூர்ண லோசனம்
மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம்."

எங்கே ராமனைப்பற்றி யெல்லாம் பேச்சு நடக்கிறதோ அங்கே ஹநுமான் இருப்பாராம். இம்மாதிரி ஜீவாத்ம பரமாத்ம ஐக்ய பாவத்தைத் தான் சுட்டிக்காட்டுகிறதல்லவா?

அர்ஜுனனின் போக லீலைகளைப் பற்றியும் அவைக ளில் க்ருஷ்ணன் ஈடுபட்டுவந்த விசித்திரங்களையும் கூடப் பார்க்கிறோம். ஸுபத்ரா பரிணயம், அல்லித் திருமணம், இம்மாதிரி இகபரஸுகங்களிலும் க்ருஷ்ணனின் ஒத்தாசை யுடன்தான் அநுபவித்திருக்கிறான்.

உபநிஷத்துக்களில் பரமாத்மாவையும் ஜீவாத்மாவை யும் ஓர் பழமரத்தின் கிளைகளில் மேல்கிளையில் பரமாத்மா மாதிரி ஓர் பக்ஷியும், கீழ்கிளையில் ஜீவாத்மா என்கிற பக்ஷி யும், இந்த கீழ்கிளையில் உட்கார்ந்திருக்கும் பக்ஷி பழத்தை ருசித்து ருசித்து சாப்பிட்டு ஸந்தோஷப்பட்டுக் கொண்டி ருப்பதை மேற்கிளையிலிருந்த பக்ஷி இதைப் பார்த்துப் கொண்டே ஸந்தோஷிக்கிறதாம். பரமாத்மாவை ஓர் ஸாக்ஷிபூதமாயும் ஜீவாத்மாவே ஸுகதுக்காதிகளுக்கு ஈடுபட்டு ஈடுபட்டு இப்பரமாத்மா ஞாபகம் வரும்போது ஒன்று சேர முயலுவதும் தான் நம் ஹிந்து மதத்தின் உயர்ந்த ஓர் கொள்கையின் ஸாராம்சம். மற்றதெல்லாம் எல்லா மதங்களிலும் காணப்படும் தத்துவங்கள். இவ்வு யர்ந்த தத்வத்தை தான் பல மேல்நாட்டவர் கூட ஒப்புக் கொண்டு சர்ச்சைசெய்து, அநுசரித்தும் வருகிறார்கள்.

11. நகுல ஸகாதேவர்கள்

துர்வாஸ மந்திரத்தை குந்திதேவியானவள் தன் ஸக பத்னியாகிற மாத்ரிக்கு உபதேசித்தபடி அவளும் அச்வனி தேவதைகளை ஆவாஹித்துப் பிறந்தவர்கள் நகுலஸகாதே வர்கள். என்னே அக்காலத்தில் சக்களத்திகளின்பரஸ்பர அன்பு! தருமரும், பீமார்ஜுனர்களைவிட நகுல ஸகாதே வர்களிடம் கண்ணும் கருத்துமாயிருந்தார் என்பதற்கு விளக்கமாக, யக்ஷப்ரச்னைகளைத் தீர்த்து யக்ஷன் வரம் கேள் என்று கேட்டபோது இவர்களில் எவரையேனும் உயிர்ப்பிக்கிறேன் என்று யக்ஷன் சொன்னபோது, நகுலன் உயிர் பிச்சையைத்தான் முதலில் கேட்டாராம். ஏன்? குந்தி தேவிக்குதான் ஓர் பிள்ளை யிருப்பதுபோல மாத்ரிக்கும் ஓர்பிள்ளை இருக்க வேண்டுமல்லவா? மீதி பேரைப்பற்றிக் கவலையில்லை. இந்த சிறந்ததோர் பரந்த நோக்கத்தைக் கண்டு தர்மதேவதையே யாகிற அந்த யக்ஷ ரூபன் சந்தோஷித்து எல்லோரையும் உயிர்ப்பித்து விட்டான்.

நகுலன் மனிதர்களிலேயே மிகச்சிறந்த அழகுள்ளவன் என்று பெயரெடுத்தவன். கடைசியில் ஸ்வர்க்கா ரோஹணத்தின் போது, த்ரௌபதிக்குப்பின் கீழே விழுந்தவன் நகுலன். "ஏன்" என்று தர்மரை பீமன் கேட்டதற்கு "நகுலன் தான் எல்லோரைவிட அழகன்" என்ற கர்வமிருந்தது. அதனுல்தான் வீழ்ந்தான் என்று பதிலுரைத்தார்.

இன்னும் நகுலனுக்கு அசுவலக்ஷணங்களும் பசுலக்ஷணங்களும் நன்கு அறிந்தவன். இதனுல்தான் விராடனின் ராஜ்யத்தில் நகுலன் குதிரை லாயங்களுக்கும் பசு மந்தைகளுக்கும் மேற்பார்வை யிடுபவனுக நியமிக்கப்பட்டான்.

இதுமாத்திரமில்லே. நகுலஸகாதேவர்கள் இருவருமே சிறந்த வீரர்கள்கூட. பாரதப்போரில் இருவர் கைகளினுல் மாண்டவர்கள் பலவீரர்கள். சகுனியைக் கொன்றவன் ஸகாதேவன். பிறகு திக்விஜயத்தின் போது இவர்கள் பல அரசர்களைக்கீழ் படியும்படி செய்து தருமருக்கு சக்ரவர்த்தி பட்டத்தைப் பெறும்படி செய்தார்கள்.

ஸகாதேவனே வென்ருல், அவன் ஓர் சிறந்த சாஸ்த்ரக்ஞன். ஜோதிடத்தில் வல்லவன். நேர்மையுள்ளவன். கிருஷ்ணனை தன் உள்ளத்திலேயே சிறைபடுத்தியவன். துர்யோதனனுக்கு வெற்றி யடையக்கூடிய நேரத்தைக் குறித்துக் கொடுத்தவன். விஷயாதிபோகங்களில் ஈடுபடாதவன். எல்லாவற்றிலும் பற்றற்று, தர்மத்துக்கும் நியாயத்துக்கும் கீழ்படிந்து, தம்பிக்குகந்தார் போல் அண்ணன் சொல்லே வேதவாக்காக மதித்து, கண்ணனைப் பரம் பொருள் என்று முதல் முதலில் அறிந்தவன் என்ருல் மிகையாகாது. அர்ஜுனன் கண்ணனின் ஸ்நேகிதன் என்றும், மச்சான் என்றும், உறவினன் என்றும், பழகி வந்தவன். திடீரென்று போரின்போது பகவத் கீதா உபதேசம் பெற்று, கண்ணனின் விச்வரூபத்தைப் பார்த்த பிறகே அவனைப் பரம் பொருள் என்று கருதி, கண்ணனின் பக்தனுனன் என்று முன்பே பார்த்தோம். ஸகாதேவனே கண்ணனை முன்பே அறிந்து கண்ணனின் காரண காரிய விசேஷங்களை அறிந்து, நம்மால் ஆவதொன்றுமில்லை என்கிறமாதிரி ஆண்டவன் லீலை எனக்கருதி எல்லா விஷயங்களிலும் அதிகம் ஈடுபடாமல் இருந்தான். சூதாட்டத்தின் பிறகு கூட தருமரை எல்லா தம்பிகளும் நிந்தித்தார்கள். ஸகாதேவன் சிரித்தானும், ஏன்?

அவனுக்கு தெரியும். காலத்தின் கோலத்தையும், க்ரஹங்களின் சேஷ்டைகளையும், ஆண்டவனின் கொள்கைகளையும், அவன் திருவுள்ளத்தையும் ஆராய்ந்தாராய்ந்து பாகுபாடு பண்ணினவன். அதனால்தான் சிறந்த அறிவாளி எனப் பெயர் கொண்டவனை "அவனென்ன ஸகாதேவனோ" என்கிறோம்.

12. துரியோதனன்

துரியோதனனைப்பற்றி சில சிறந்த தத்வங்களைக் கூறுவிடில் இப்புத்தகம் பூர்த்தியடையாது. காந்தாரியோ சிறந்ததோர் பதிவ்ரதை. த்ருதராஷ்டிரன் குருடனாகஇருந்த போதிலும் வேதங்களையும் தர்மசாத்திரங்களையும் நன்கறிந்தவன். இப்பேர்ப்பட்டவர்களுக்கு மூத்தப் பிள்ளையாயும் செல்லப் பிள்ளையாயும் வளர்ந்தான் என்றால் அவன் எப்படி துஷ்டனாக யிருக்கமுடியும்? இயல்புக்கு விரோதமல்லவா? இவனுக்கே ஸுயோதனன் என்ற மற்றொரு பெயருமுண்டு. பொறாமையே உருவெடுத்தனாய் பலர் அவனைச் சித்தரிக்கிறார்கள். பொறாமைக்காரனாக யிருப்பின் அவன் பாண்டவர்களுக்கு மூத்தவனான கர்ணனிடம் அத்தனை சலுகைகளைக் காண்பிப்பானேன்?

கர்ணன் தேர்பாகன் பிள்ளை என்று மற்றவர் இகழும் போதெல்லாம் துரியோதனன் சீறுவான், அங்க தேசத்துக்கே அதிபதியாக்கி அவனை அரசனாக எல்லோரையும் மதிக்கச் செய்தான். வீரலக்ஷணங்கள் பொருந்தியவன் கர்ணன். நற்குணங்களுடன் அரசனுக்கு வேண்டிய ராஜ லக்ஷணங்களுடையவன் என்றே கர்ணனைப் போற்றினான்! கர்ணனும் இவ்விதஸ்நேகபாவத்தைத் தன் உயிருள்ளளவும் தான் பாண்டவர்களின் மூத்தவன் என்றறிந்த பிறகும் தன் உயிர் போகும்வரை அந்த ஸ்நேகத்தைப் பரிமளிக்கச் செய்தான். ப்ராணஸ்நேகம் என்றால் இதுவன்றோ?

மேலும் பீஷ்மதுரோணாதிகளை அஸ்தினாபுரத்திலேயே யிருக்கச் செய்து, அவர்களுக்கு ஸகல உபசாரங்களையும் செய்து வந்தான். ஆகையால் பெரியோர்களிடம் மரியாதையின்மையோ, குருபக்தியின்மையோ அவனிடம் குறைகூறமுடியாது. கதாயுதப் போரில் பலராமரிடம்

சிக்ஷைப்பெற்று, சிறந்தவீரன் என்று பெயர் பெற்று, வணங்காமுடி மன்னனுய் விளங்கினுன். அவதார புருஷனுய் விளங்கியகிருஷ்ணனை நிராகரித்தானு? இல்லவே இல்லை. கண்ணன் அஸ்திஞபுரத்திற்கு வரும் போதெல்லாம் அவனுக்குகந்த மரியாதைகளையும், அர்க்யபாத்யாதி உபசாரங்களைச் செய்தவன். கிருஷ்ணனின் தெய்வாம்சத்தை அறிந்து போருக்கு முன் அவன் உதவியை நாடி த்வாரகைக்கு முதலில் சென்றவன். ஆகையால் அவனைக் கண்ணனின் பக்தனல்லன், அஸுராம்சம் படைத்தவன் என்றெல்லாம் கூறிவிடமுடியாது.

பின் ஏன் அவனுக்கு ஸாதுக்களாயும், தர்ம சீலர்களாயும் தன் ஸகோதரர்களாயும் விளங்கிய பஞ்சபாண்டவர்களிடம் த்வேஷ மனப்பான்மை ஏற்பட்டது? இதனுல் நாம் என்ன அறிகிருேம். ஸாதாரணமாய் மனுஷ்யர்களுள் சிறு வயதிலிருந்து ஓர் த்வேஷத்திற்கு சிறு காரணங்கள் ஏற்பட்டு விட்டாலும்கூட, அந்த த்வேஷமானது வளர்ந்து கொண்டே மலை போலாகிவிடுகிறது. வயது வந்த விவேக புத்தி வந்தும்கூட இந்த துவேஷம் கொஞ்சத்தில் போவதில்லை. துவேஷமானது விவேகிகளையும் அவிவேகிகளாக ஆக்கி விடுகிறது. துர்குணங்களில் மிகக் கூர்மையானது துவேஷம். இந்த த்வேஷத்தின் காரணமாய் வந்த துர்குணங்களாலும் துர்புத்தியினுலுமே அவனுக்கு துரியோதனன் என்ற பேர் வந்ததோ என்றெண்ண வேண்டியிருக்கிறது. ஸுயோதனன் என்ற பேர் மாறி துர்யோதனன் என்ற ப்ரபலப் பெயர் வந்தது.

ஆத்மரீதியாய் கவனித்தோமானுல் இந்தயாதனுச்சரீரத்துக்கு பஞ்ச ப்ராணன்கள் மிகவும் அவச்சியமானது. அதிலும் ப்ராணவாயு முக்யம். இந்த வாயுவுக்தும், வாத பித்த ஸ்லேஷ்மாதிகளால் பீடிக்கப்பட்ட இந்தசரீரத்துக்கும் எப்போதுமே ஓர் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. கொஞ்சம் கபம் கட்டிக்கொண்டால் வாயுவின் போக்கு இரு நாடிகளிலும் தடைபடும். ஸாதாரணமாகவே ஸூரிய நாடியில், அதாவது வலப்பக்க நாசியில் குறைவாகவும் இடப்பக்க நாசி என்கிற சந்த்ர நாடியில் வெகுவாகவும் ச்வாஸம் உட்செல்வதை கவனிக்கலாம். இறக்கப்போகு முன்னதாகவே ஸூர்யநாடியில் ச்வாசம் உட்செல்லாமலே போகும். இதை கவனித்து ப்ராணுயாமத்தின் மூலம் ஸூர்யாநாடியைச் சுத்தமாக்கினுல் இறப்பையும் வெல்லக்கூடும்

என்று யோக சாத்திரங்கள் கூறுகின்றன. அதே மாதிரி பாருங்கள். துர்யோதனுக்கு பீமன் மேலேதான் கடும்பகை. பீமனுக்கும் துர்யோதனன் மேல் தீராப்பகை. வாயுவை உள்ளடக்கி சுவாஸபந்தனம் பண்ணி விட்டால் பகைக ளெல்லாமும் அதற்கு காரணமாகிய காமக் ரோதாதிகள் அடங்கி விடும். இவை அடங்கி ஸத்குணங்கள் மேலிட்டா லொழிய ஆத்ம தர்சனம் இயலாதது, குணங்கள் ஒழிந் தால்தான் மாயையை வென்று ப்ரும்ம ஞானத்தையடைய லாம். பிறப்பிறப்புப் பிணியைத் தீர்க்கலா மென்று உப நிஷத்துகள் சைவ சித்தாந்தங்கள் இன்னும் பல நூல்கள் கோஷிக்கின்றன.

போர் முடிந்து ஸ்வர்க்கா ரோஹணத்தின்போது, தருமர் துரியோதனனை இந்திரனுக்கு ஸமானமாக பொற் சிம்மாதனத்தில் வீற்றிருக்கக் கண்டான். என்னே இவ் வாச்சர்யம் என்று திகைத்தான். கண்ணன் அதற்குப்பிறகு விளக்கம் கூறுகையில் துர்யோதனன் செய்த பல புண்ய கர்மாக்களுக்காக ஸ்வர்க்கானுபவம் முதலில் அனுபவித்து அப்புண்யங்களுக்குத் தகுந்த அநுபவங்கள் ஆனபிறகு, அவனுடைய பாப கர்மாக்களுக்குப்பின்னுடி நரக வேதனை களை அநுபவிப்பான் என்றும் பஞ்ச பாண்டவர்கள் முதலில் பாப கர்மாக்கள் சிலவற்றிற்காக முதலில் நரக வேதனைகளை அநுபவித்துப்பிறகு நிரந்தரமாக ஸ்வர்க்கத் தில் காலம் கழிப்பார்கள் என்கிறார். கீதையில் கண்ணன் இதையே கூறுகிறார். அவனவன் புண்யகர்மாக்களுக் கேற்ப ஸ்வர்க்க போகங்களை சிறிது காலம் அநுபவித்துப் பிறகு அவனவன் கர்மாக்களுக்கேற்ப மறுபடியும் மறுபடி யும் பூமியில் பிறந்திறந்து தன் ஜீவன் முக்தியை யடைகிற வரை சுழல்கிறான் என்கிறார். தூர்யோதனன் முழுவதிலும் பாபிஷ்டியாயிருந்திருந்தால், மரணத்திலுல் வீரஸ்வர்க்க மடைந்தான் என்றால்கூட, இந்திரனுடன் ஸ்வர்க்க போகத் தை அநுபவித்தான் என்பதற்குத் தகுந்த குணாதிசயங்கள் அவனிடம் இருந்திருக்க வேண்டும்.

துரியோதனனின் தம்பிகளான மற்றவர்களும் இந்த அண்ணன்மேல் அதிக ப்ரேமை பெற்று இருந்தார்கள். ஒரு தம்பி விரோசனனைத் தவிர, (அவன் கூட அண்ணனுக் காக போரிட்டு, அண்ணனின் தீயச்செயல்களை வருந்திக் கொண்டே உயிர் நீத்தான்.) மற்றவர்கள் அண்ணனைப் போற்றினார்கள்.

ஸ்நேகிதன் எப்படி யிருக்க வேண்டும் என்பதற்கு துரியோதனனும் கர்ணனும் இருந்த ஸ்நேகபாவத்தை உதாரணமாகச் சொல்வது வழக்கம். கடைசிவரையில் தான் பாண்டவர்களில் மூத்தவன் என்றறிந்தும்கூட துர்யோதனனைக் கர்ணன் கைவிடவில்லை. துரியோதனனும் கர்ணனின் பெருமைகளைக்குறைத்துக் கூறியதில்லை. ஒருசமயம் கர்ணனும் துரியோதனனின் மனைவியும் சதுரங்கம் ஆடிக்கொண்டிருந்தபோது, கர்ணனின் முதுகுப்புறமாக துரியோதனன் வாயிலில் நுழையவே, அவன் மனைவி மரியாதைக்காக எழுந்து நிற்க முயன்றாள். அது அறியாமல் கர்ணன் அவளுடைய முந்தானையைப் பிடித்து இழுத்து உட்கார வைக்க முயலும்போது இடுப்பில் கட்டியிருந்த முத்துமாலை அறுந்து முத்துக்கள் சிதறின. இதைத் துரியோதனன் முத்துக்களைப் பொறுக்கிக் கொண்டே “பொறுக்கவோ, கோர்க்கவோ” என்று சொல்லிக்கொண்டே அச்செயலைப் பாராட்டவேயில்லை, கர்ணன் தன் மனைவியிடம் தப்பான எண்ணத்துடன் நடந்து கொண்டான் என்கிற சந்தேகமே யில்லையாம். ஸாதாரணமான ஸம்பவமாக எண்ணி அவளைத்திரும்ப உட்கார வைத்து சதுரங்க ஆட்டத்தில் தானும் பக்கத்திலுட்கார்ந்து ஈடுபட்டான். துரியோதனனுக்கு எப்போதும் கர்ணன் ஓர் பக்கபலமாகவே இருந்தான். நன்றிச்செயல் என்றும் கொள்ளலாம். ஸ்நேகபாவம் என்றும் கொள்ளலாம். கர்ணன் தர்மத்தில் சிறந்தவன், தர்மந்யாயங்களையும் சாஸ்திரங்களையும் அறிந்தவனாயிருந்த போதிலும், துரியோதனன் தீய எண்ணங்களைக் கொண்டு பாண்டவர்கள்மேல் விரோதத்தைக் காண்பித்த போதல்லாம், கர்ணன் அவன் சொல்களை தீயச்செயல்களென கருதவேயில்லை. ஸ்நேகிதனுக்கு நல்லதிலும் கெட்டதிலும் ஈடுபட்டு அவனுடைய பாபங்களைப் பகிர்ந்து கொண்டான் என்றே சொல்லவேண்டும்.

துரியோதனன் என்கிற ஓர் பாத்திரத்தின் தத்வத்தை ஆராய்ச்சி செய்தோமானால், நமக்குத் தீயச்செயல்கள் அறிந்து செய்யும் போது நம் தீய புத்தியானது அவைகளுக்கு சமாதானம் சொல்லுகிறது. உள்ளிருக்கும் பரமாத்மா தீயவை என்று குறிப்பிடும் போதெல்லாம் நம் ஜீவாத்மாவுக்கு மந்திரியாகிற புத்தியானது ஏதோ ஒரு சமாதானம் காட்டி அவைகளுக்குப் பரிகாரம் தேடுவதில்லை. இதையே வினைப் பயனென்கிறோம். தாமஸகுணங்

கள் மேலிட்டுக் கொண்டே வரும்போது, அவைகளை கூடிய வரை விலக்கி நம் வினைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், அந்த வினைகளை நாமே பின்னால் தகுந்தபடி அனுபவிக்கவேண்டுமன்றோ? துரியோதனனோ, ராவணனோ அம்மாதிரி அனுபவத்தை உயிருள்ள போதே அனுபவித்து விட்டார்கள். தங்கள் கண்களெதிரிலேயே, தம்பிமார்கள், மைந்தர்கள், ஸ்நேகிதர்கள், உறவினர்கள் எல்லோரும் மாள்வதைப் பார்த்துக்கொண்டேயிருப்பது எவ்வளவு மனவேதனைப் பட்டிருப்பார்கள்? கடைசியில் தாங்களும் மாண்டார்கள் என்றால் மகத்தான மன வேதனைப் பட்டுக் கொண்டேதான் இறந்திருப்பார்கள் என்பதில் ஐயமேயில்லை. எப்பேர்ப்பட்டவனுக்கும், துறவிகளுக்குக் கூட, தன் உற்றார் உறவினர், மைந்தர்கள், தாங்கள் உயிருடனிருக்கும் போதே அவர்கள் இறக்கும் தருவாயில் வைராக்கியம் பிறக்காமல் இருக்காது, அப்போதும் தன் வினைதான் என்று அறிபவன் கொஞ்சம்பேர்கள் தான். இதை தான் introspection, retrospection, and correction என்று அடிக்கடி மேல் நாட்டு அறிஞர்கள் கூறுகிறார்கள்.

13. துரௌபதியும் ஸுபத்ரையும்.

துரோணனைப்பற்றி எழுதும் போது, "துரோணனுக்கும் துருபதனுக்கும் ஏற்பட்டதோர் விரோதம் கடைசிவரை நீடித்தது. ஒருவரை மற்றவர் வஞ்சம் தீர்த்துக் கொள்ள, பழிக்கு பழிவாங்க நினைத்துக் கொண்டே யிருந்தார்கள்" என்பதைப் பார்த்தோம்.

மானிடர்களிடையும் சகல ஜீவராசிகளிடையேயும் கூட வஞ்சம் என்பதும், விரோதம் என்பதும் முடிவே யில்லாதது. முடிவு இருசார்பின் நாசத்தையேயடைகிறது. மானிடர்களின் அன்புக்குமோர் முடிவு உண்டு எனலாம். வஞ்சத்திற்கு முடிவே கிடையாது. உலக சரித்திரத்தில் பல விதயுத்தங்களின் முடிவு மற்றதோர் யுத்தத்திற்கு அடிகோலாக விளங்கியே வந்தன. அதனாலேயே, ஆங்கிலத்தில் "Hatred begets hatred and love begets love", என்ற மதிச்சொற்படி, மகாத்மாகாந்தி நம் காலத்தில் அஹிம்ஸா தர்மத்தைப்பற்றியும் அன்பின் உயர்வைப்பற்றியும் கூறி வந்தார். இதே தத்துவத்தை ஆதிமுதல் வேதங்

கள், உபநிஷத்துகள், சைவசித்தாந்தங்கள், இன்னும் பல மதபோதகர்கள் இயேசு, முஹம்மது, புத்தர் போன்றவர்களும் அன்பின் உயர்வைப்பற்றி அரை கூறி வந்தார்கள். பின்னே ஏன் ஜனங்கள் பலான மதத்தவர்கள் என்று பேர் சொல்லிக்கொண்டு அம்மதாசார்யர்களைத் தழுவவில்லை? அவர்கள் சொற்படி ஏன் நடக்கவில்லை? அம்மதங்களைச் சார்ந்தவர்கள் அம்மதாசாரியர்களிடம் நம்பிக்கையில்லையா? இதைத்தான் ஆச்சரியமாக பாரதக்கதைகளிலிருந்து நம் தற்கால சரித்திரங்கள் வரைபார்க்கின்றோம். கலியுகதர்மம், கர்மவினைப்பயன், Cause and effect தத்துவம், இப்படி எல்லாம் சமாதானம் கூறுகிறார்கள். இவைகளுக்கு விமோசனம் இல்லையா? எப்போது விமோசனம் வரும் என்ற கேள்விகளும் கூடவே பிறக்கின்றன. 1965 இல் ஒரே குழப்பம் நாட்டில் ஏர்பட்ட போது, முன்னறிஞரும் முதியவருமான ராஜாஜியும் "god alone should save the nation", "ஆண்டவன் தான் நம் நாட்டைக் காப்பாற்ற வேண்டும்" என்றும் அதேமாதிரி, மனிதன் கடைசியில் பலவிதகஷ்டங்களில் அகப்பட்டுக் கொண்டு ஒருவழியும் தென்படாமல், இருள் சூழ்ந்த காட்டின் நடுவிலோ, அலைசூழ்ந்த கடலின் நடுவிலோ, அகப்பட்டுக் கொண்டு தவிப்பவன் போல் அப்போதுதான் ஆண்டவனை நினைக்கிறான். துரௌபதியின் சரித்திரத்திலும் அம்மாதிரி தானாயிற்று. துயிலுரிப்படலத்தின் போது பீஷ்மதுரோணாதிகள், த்ருதராஷ்டிரர் முதலிய பெரியோர்கள் இக்கொடுமையைப் பார்த்துக் கொண்டிருக்க, துரியோதனகர்ணாதிகள் கைகொட்டிச் சிரிக்க, கணவன்மார்களும் தலைகுனிந்து மௌனத்தை ஸாதிக்கக் கண்டு இருகைகளையும் உயரத் தூக்கி, கிருஷ்ணனே கதிஎன்று "ஹரேக்ருஷ்ணா! மாதவா, மதுஸூதனா" என்றெல்லாம் அலறினாள். உடனே ஆண்டவனும் கைகொடுத்து, துரௌபதியின் மானபங்கத்திலிருந்துக் காப்பாற்றினான். இதுவன்றோ ஆண்டவனின் அன்பு, தயை, காருண்யம். பகைவனுக்கும் மோக்ஷம் கொடுத்த ஆண்டவனின் அன்பின் பெருமையைப் பாகவதத்திலும், பாரதத்திலும், ராமாயணத்திலும் காண்கிறோம்.

துருபதன் துரோணன் மேல் வஞ்சம்கொண்டு கடும் தவம் அக்னிபகவானைக் குறித்துச் செய்தான். அக்னி பகவானும் மனமிறங்கி, துருபதனுக்கு அருள் செய்து, என்னவரம் வேண்டுமெனக் கேட்க, துருபதன் "துரோண

னக் கொல்ல ஒருபுத்ரனும், தன்னை அவமானம் செய்த அர்ஜுனனைமணந்து அவனை ஆட்டிவைக்கத் தக்க ஒரு புத்ரியும் வேண்டும்" எனக்கேட்டான். அப்படியே த்ருஷ்டத்யும்னன் என்ற புத்ரனும், துரௌபதை என்ற புத்ரியும் அக்னியிலிருந்து உண்டானார்கள். அதனாலேயே துரௌபதியை தர்மராஜர்கோவில்களில் தைவமாகவும், அக்னிஸ்வரூபிணியாகவும் கொண்டாடுகிறார்கள். நெருப்பு மிதிக்கும் திருநாளையும் கொண்டாடுகிறார்கள்.

பாரத்வாஜ மகரிஷியின் புதல்வனாக உத்தம பிராம் மண மஹரிஷியின் பிள்ளையாகவும் பிறந்த துரோணன், தன் சுயதர்மத்தை விட்டு க்ஷத்திரிய தர்மத்தை மேற் கொண்டதினாலேயே வந்த வினைகள் இவை. க்ஷத்ரிய தர்மத்தை மேற்கொண்ட துரோணரை அழிக்க, அக்னி பகவானே ஒரு புத்ரனையும் ஒரு புத்ரியையும் கொடுத்தான் எனலாம். அதேமாதிரி தான் யமன், வருணன், இந்திரன் முதலிய தேவர்களும் இத்தர்மங்களை மனிதர்கள் சரிவர அநுஷ்டிக்கின்றனரா, அவரவர்கள் கடமைகளை சரிவர செய்கின்றனரா என்று பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். சரிதப்பி நடந்தால் அவர்களை தண்டிக்கவும் தண்டிக்கிறார் கள். அதை மனிதன் உணர்ந்தானில்லை. வேதங்களும், உப நிஷத்துகளும், தேவர்களைக்கண்ட யோகிகளும் இப்போதும் கூறுகிறார்கள். ஸ்வாமி விஷாதானந்தா என்று ஓர் ஞானி ஒட்டபாலத்திலிருந்து அருமையான நூல்கள் தேவர்களு டன் தான் ஸம்பாஷித்ததாக கூறுகிறார். அவர் ஞானி. அவர் பொய்சொல்லி ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. உலகத்துக்காக, அதன் நன்மைக்காக எழுதியிருக்கிறார். இன்றும் பலபேர் அநுபவித்திருக்கிறார்கள். பாமரர்களி லும் சிலர் தாங்கள் கண்டு அநுபவித்த பல ஆச்சரியங் களை சொல்லுகிறார்கள். தேவர்கள், பித்ருக்கள், கடவுள் இவைகள் கட்டுக்கதைகளல்ல. நாம் நேருக்கு நேர் கண்டு பேசி, ஸம்பாஷிக்காததால் அவைகள் பொய்யாக மாட்டா. இனதர்மம் அதாவது அவனவன் பிறந்த வம்சத் தில் உண்டானதொழிற் கடமைகள், நியமங்கள், பழக்க ஒழுக்கங்கள் இவைகளைத் தவறினால், அதற்குத் தகுந்த படி அநுபவங்கள் ஏற்படுகின்றன. அதனாலேதான் ஒருப்பிராம்மணன் இறந்துபோய் அவனை சிதையின்மேல் வைத்து, கொளுத்துவதற்கு முன், அக்னிபகவானை வேண்டி, "இவன் ஏதோ பாவியாகி இன தர்மங்களை விலக்கி, ஸுகானுபோகங்களில் ஈடுபட்டு பல தீச்செயல்

களை புரிந்திருக்கக் கூடும். தெரிந்தோ, தெரியாமலோ, அறிந்தோ, அறியாமலோ செய்த பாவங்களை எல்லாம் மன்னித்து, இவனை அடுத்த ஜன்மத்திலாகிலும் இனதர் மத்தை விடாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டு கிறோம்.'' என்று இறந்தவனைச் சேர்ந்த பிள்ளைகள், சுற்றத்தார், வாயில் வாக்கரிசியிட்டு, இவ்வாக்கரிசி இவனை காப்பாற்றட்டும் என்றுநினைத்து அவ்வாக்கரிசியை அக்னி பகவான் ஏற்றுக்கொண்டு, அவ்வுடலையும் வாக்கரிசியை யும் சேர்த்து ஆட்கொள்கிறான். அபரமந்திரங்கள் நன்றாக படித்த வைதீகர்களைக் கேட்டால் சொல்வார்கள். இது உடலைத் தீயிலிடும் எல்லா ஜாதியினருக்கும், எல்லா மதஸ் தர்களுக்கும் உண்டான ஸகஜமான செயலாகும்.

அக்னியிலிருந்துதித்த புத்ரன் த்ருஷ்டத்யும்னன், புத்ரி திரௌபதை, இவளுக்கு கிருஷ்ணை என்ற பெயரும் உண்டு. கிருஷ்ணன் திரௌபதையை தன் தங்கை யாகவே பாவித்துவந்ததால் கிருஷ்ணை என்று பெயர். இவளையே சக்திஸ்வரூபிணி என்று தர்மராஜா கோவில்களி லெல்லாம் வைத்து பூஜைசெய்கிறார்கள். இவளை நினைத்து நெருப்புமிதித் திருநாளும் நடத்துகிறார்கள்.

த்ரௌபதை வளர்ந்து இவளை மணமுடிக்க துருபதன் ஓர் பந்தயம் வைத்திருந்தான். அக்காலங்களில் ராஜாக்கள் பந்தயங்களை வைத்து மாப்பிள்ளைகளைத் தேடுவது வழக்கமாயிருந்தது. அப்பந்தயத்தில் அர்ஜுனன் ஜயித்து, துரௌபதியை யழைத்துக் கொண்டு தன்தாயார் குந்தி தேவியிடம் வரும்போது,"நான் ஓர் பரிசு பெற்று வந்துள்ளேன்,''என்று அர்ஜுனன் கூறவும், என்ன பரிசு என்றறியாமல் ''ஐவரும் பங்கிட்டுக் கொள்ளுங்கள்.'' என்று குந்தி சொல்லவும், மாதாவின் வாக்யத்தை தெய்வ வாக்காக எடுத்துக் கொண்டு, துரௌபதை ஐவருக்கும் மனைவியானாள்.

இதன் தத்துவம்தான் என்ன? நன்றாக கவனிக்க வேண்டும். மானிடர்களாகிய நாம் அவர்களை தெய்வாம்சம் பொருந்தியவர்கள் என்பதை மறந்து, அவர்களையும் நம்மைப்போலவே மனிதர்களாகக் கருதி, நாமும் ஐவருக் கோர் மனைவி என்று நாம் மணந்தோமானால் என்ன கதிக் குள்ளாவோம்? ஐவரும் ஒருவருக்கொருவர் சண்டை

யிட்டுக்கொண்டு மடிவார்கள் அல்லவா? அக்னியிலிருந்து உண்டானவள். பஞ்ச பூதங்களுக்கு தொடரகமாக பஞ்ச பாண்டவர்கள் உதித்தார்கள் என்று முன்னமேயே கூறியுள்ளோம். பஞ்சபூதங்களுக்கும் அக்கினி மிகத்தேவையானது. ஒன்றுக்கொன்றும் பரஸ்பரம் ஒற்றுமையுள்ளது. இவைகளைப்பற்றி இன்னும் விரிவாக நம்முன்னோர்கள் உபநிஷத்துகளில் எடுத்துரைக்கிறார்கள். பூமிக்குள் நெருப்பு இருக்கிறது. ஜலத்தில் நெருப்பு இருக்கிறது. காற்றில் நெருப்பு இருக்கிறது. இடியிலும் மழையிலும்கூட நெருப்பு இருக்கிறது. விஞ்ஞான நூல்கள்படி பூமியானது ஒருநிலையில் உஷ்ணத்தை வகிக்காவிட்டால், மிகச்சூடாகவோ, இதைவிட குளிர்ச்சியாகவோ, சிறிதளவேனும் வித்தியாசமிருந்தால் ஜீவராசிகள் உயிர்வாழ மாட்டா. சேதன அசேதன வஸ்துக்களுமிரா. இதைத்தான் மகாபாரதத்தில் கதை ரூபத்தில் வ்யாஸ பகவான் பாத்திரங்களாக எடுத்துத் தொகுத்திருக்கிறார்.

பின்னும் துரௌபதை மகாபதிவிரதை. ஓரொருவருஷம் ஒவ்வொருவருக்கும் பத்தினியாக இருந்து மற்றவர்களை எண்ணாமல் உபபாண்டவர்கள் என்ற குழந்தைகளையும் பெற்றவள். பஞ்சபாண்டவர்கள் வனத்திற்கு சென்ற போது துரௌபதை ஒருவளே அவர்களை பின் தொடர்ந்தாள். மற்ற மனைவியர் ஒருவரும் கூடச் செல்லவில்லை. பல வித கஷ்டங்களை அவர்கள் கூட அநுபவித்தாள்.

இந்த கஷ்டங்கள் ஏன் அநுபவித்தாள்? என்ன பாபம் செய்தனள்? மயன் செய்த மாளிகையில் ராஜஸூய யாகமானதும், துரியோதனன் ஜலமென்றும் தரையென்றும் அறியாமல் கீழே இடறி விழ, திரௌபதையும் பீமனும் அவனைப் பார்த்து கைகொட்டிச் சிரித்தார்கள். கடைசியில் கண்ணன் த்ரௌபதியிடம் சொல்கிறார்: "பெரிய மைத்துனன் என்றும் மதியாமல், வணங்காமுடி மன்னனாகியும் விருந்தாளியாயும் வந்துள்ள துரியோதனனைப் பரிகசித்தாயே! பெண்கள் பரிகசித்துச் சிரித்தால் அக்குலமே நாசமாகிவிடும் என்ற மொழியையும் மறந்தனையோ? நற்குணங்கள் படைத்தவளே! கஷ்டங்களைச் சிறிதும் மதியாமல் கணவன்மார்களைத் தொடர்ந்த பதிவிரதையே! உன் அந்த சிறியதோர் குற்றத்துக்காக எவ்வளவு பெரிய கொடுமை விளைவு வந்தது கண்டாயா?" என்கிறார்.

பாண்டவர்களின் வன வாஸத்தின் போது கூட துரியோதனன் அவர்களுக்கு உபத்ரவம் கொடுக்க எண்ணி, தூர்வாஸ மஹரிஷியை தன் சிஷ்யர்களுடன் அங்கு செல்ல கேட்டுக் கொண்டான். மஹரிஷியும் பரிவாரமும் தர்மராஜர் இருந்த இடத்துக்குச் சென்றார்கள். "நடுப்பகலில், இவர்களெல்லோரும் சாப்பிட்டு விட்டு இருந்த நேரத்தில், இக்கூட்டத்தை சரிவர எப்படி உபசரிப்பது. சூரிய பகவான் அளித்த அக்ஷய பாத்திரமோ, ஒரு நாளைக்கு ஒரு வேளைக்குத்தான் எத்தனை பேர் வந்தாலும் அத்தனை பேருக்கும் சாப்பாடு அளிக்கக் கூடிய சக்தி உண்டு. இவர்களுக்கு விருந்தளிக்க என் செய்வதெனத் தருமர் திகைத்திருந்தார். பக்கத்திலிருந்த துரௌபதியும் விசன முற்றாள். மஹரிஷியோ மஹாகோபிஷ்டர், அவர் சாபம் பலிக்குமே என கண்ணனை மனஸாரத்யானித்தாள். கண்ணன் அவளெதிரில் தோன்றி, கவலைப் படவேண்டாம. அவர்களை பக்கத்திலுள்ள நதியில் ஸ்நானம் செய்து விட்டு வரச் செய்து, அடுக்களைக்குச் சென்று, அவ்வக்ஷயபாத்ரத்தில் ஓர் ஓரத்தில் ஒட்டிக்கொண்டிருந்த ஓர் பருக்கையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். இப்பருக்கையானது நதியில் ஸ்நானம் செய்து விட்டு எழுந்திருந்த அத்தனை ஸாதுக்களுக்கும் வயிறு புடைக்கத் தின்ற மாதிரியும் வயிற்று வலி கூட எடுக்கும் போலிருந்தமையால் தூர்வாஸரிடம் சென்று முறையிட்டனர். மஹரிஷிதன் ஞானத் த்ருஷ்டியால் கண்ணனின் லீலையை மெச்சி துரௌபதியின் பக்தியைப் போற்றி, திரும்பி அவர்கள் இருப்பிடம் செல்லாமலேயே தன் வழி சென்று விட்டார். இதனால் நம் வீட்டு பெண்மணிகள் இப்போதும் சோற்றுப்பானையை காலியாக வைக்க மாட்டார்கள்.

கடைசியில் போர் முடிந்த பின், அச்வத்தாமா கையினால் உபபாண்டவர்கள் மாண்டபோது, துரௌபதை தன் வம்சத்திற்கு ஒருவன் கூடமிஞ்சாமல் போய்விட்டானே என்று மிகவும் வருந்தினாள். அப்போது அபிமன்யுவின் மனைவி உத்தரை கர்ப்பிணியாயிருப்பது நினைவுக்குவந்தது, உடனே கண்ணனை வேண்டினாள். கண்ணனும் தோன்றி, உத்தரையின் கர்பத்தைத் தன் சக்ரத்தால் காப்பாற்றினாராம். அபிமன்யுவோ சுபத்திரையின் பிள்ளை. த்ரௌபதை வருந்துவானேன்? சுபத்திரை கண்ணனின் தங்கை. ஸுபத்ரைக்கு இல்லாத அக்கரை த்ரௌபதிக்கு

உண்டாயிற்றென்றால் அவ்வுத்தமியின் குணத்தை என்னென்று போற்றுவது?

ஸுபத்ரையைப்பற்றி எழுதும்போது அவளை அர்ஜுனன்மணந்த விதமே விசித்திரமானது. வஸுதேவருக்கும் ரோஹிணிக்கும் பிறந்தவள். ஸுபத்ரை என்ற பேருக்கு நல்ல துணைவி என்றே அர்த்தம். க்ஷேமத்தைக் கொடுப்பவள் எனவும் கொள்ளலாம். அர்ஜுனன் ஸந்நியாசி வேடம் பூண்டு, அவனுக்கு ஸுபத்ரையை சேவை செய்வித்து அவர்களிருவருக்குமிடையே காதல் மிகுந்து, காந்தர்வ விவாஹத்தினால் ஸுபத்ரையை மணந்த விதமெல்லாம் கண்ணனின் சூழ்ச்சியே எனலாம். ஏற்கனவே ஸுபத்திரையை அர்ஜுனனுக்குத்தான் மணமுடிப்பது என்று பலராமர் எண்ணியிருக்க, மோசத்தினால் அவளைக் கொண்ட விதம் பலராமருக்கும் அரஜுனனிடம் அசூயை பிறந்தது. கடைசியில் கண்ணனே பலராமரை ஸமாதானம் பண்ணி, சீர் வரிசைகளுடன் இந்திரப்ரஸ்தம் சென்று தன் தங்கையையும், மருகனாகிற அர்ஜுனனையும் உபசரித்து விட்டுவந்தார்.

த்ரௌபதையும் ஸுபத்ரையை தன் தங்கைமாதிரி உபசரித்ததோடு அவளை தன் ஸமானமான உன்னதஸ்திதியில வைத்திருந்தாள். பாண்டவர்கள் பதிமூன்று வருடம் வன வாஸத்திற்குப் புறப்பட்டபோது, அர்ஜுனன் ஸுபத்திரையிடம் பிரியாவிடை பெற்றான். அப்போது அபிமன்யு மூன்று வயது குழந்தை. ஆகையால் கண்ணன் தன் தங்கையை துவாரகைக்கு அழைத்து போய், குழந்தை அபிமன்யுவுக்கு எல்லாவித அஸ்த்ர சஸ்த்ர வித்தையெல்லாம் தானே கற்பித்தான். பிஷ்மரின் பத்மவ்யூகத்தையும் உடைத்து உட்சென்று போரிட்டு பல பேர்களைக் கொன்று, பல மகாரதர்கள் அவனைச் சூழ்ந்து, பின்புறத்திலிருந்தும் பக்கத்திலிருந்தும் போர்ப் பண்புகளையும் மீறி கௌரவர்கள் அவனை அழித்தார்கள். கண்ணனுக்கு அபிமானமான மருமகனாக அபிமன்யு இருந்தும் இவ்வியூகத்தை உடைக்கக்கற்றுக் கொடுத்தானே தவிர, பத்மவ்யூகத்திலிருந்து தப்பிவரும் விதத்தைக் கற்றுத் தரவில்லை. இது கற்ற விதமும் விசித்திரமானது. ஒரு காலத்தில் ஸுபத்ரை அபிமன்யுவின் கர்ப்பிணியாக இருந்து வந்தபோது, தன் தங்கைக்கு கண்ணன், கௌரவ பாண்டவர்களின் சரித்

திரம் பூராகச் சொல்லிக் கொண்டேவந்தான். இறந்த காலமும், நிகழ்காலத்தையும் பற்றிச் சொல்லிக்கொண்டு வரும் போதே ஸுபத்ரை தூங்கிவிட்டாள். கர்ப்பத்திலிருந்த சிசு கண்ணன் வருங் காலத்தைப்பற்றி உரைத்துக் கொண்டே வரும்போது ஊங்கொட்டிக் கொண்டே வந்தது. இப்பத்மவியூகத்தைப் பற்றி கண்ணன் விவரித்துக் கொண்டே வந்தான். சிசு இதை விழித்துக் கொண்டே கவனிப்பதையறிந்து, கண்ணன் கதையை நிறுத்திவிட்டான். ஏனெனில், கௌரவாதிகளுடைய மரணம் பஞ்ச பாண்டவர்கள் கைகளால் நடக்க வேண்டும் என்கிறதோர் ஸங்கல்பம். இதேமாதிரி ராமாயணத்தில் ஸீதை நினைத்திருந்தால் தன் பார்வையாலேயே ராவணனை ஸம்ஹரித்திருக்கக் கூடும். ஆனால் ராவணனின் மரணம் தன் பர்த்தாவின் கையால் ஸம்பவிக்க வேண்டியதாயிருந்தது என்று விட்டுவிட்டாள். அதை ராவணனிடம் சொல்லவும் சொன்னாள். அதனால் தான், நம் பெரியோர்களும் கற்பிணிகள் படுத்துறங்கும் போது, நல்ல கதைகள், நல்ல ஸங்கீதம் இப்படி பல நல்லதையே பேசுவார்கள். ஏனெனில் தாயுறங்கும் போது சேய் விழித்திருக்கும். அதற்கு க்ரஹிக்கும் சக்தியானது அதிகம். அந்த க்ரஹித்த வார்த்தைகளையும் பேச்சுகளையும் கதைகளையும் புத்தியில் பதிந்து விடுகிறது. அதைப்பிறந்தபிறகும் அகற்றுவது கடினம். கெட்டதாக சண்டையும் பூசல்களும் கர்ப்பிணிகள் இருக்கும் வீட்டில் நடந்தால் அதேமாதிரி துற்குணங்களுடன் தான் சேயும் பிறக்கும். இந்தக் கொள்கையை நம் .பெரியோர்கள் ஸுபத்ராபிமன்யு சரிதத்திலிருந்து தான் கற்று தழுவியும் வந்தனர். பல பழக்கங்கள் மகா பாரதக் கதைகளிலிருந்து தான் மூலமுள்ளன. இவைகளின் உண்மைகளைப் பற்றி மேல் நாட்டவரும் கண்டு, அதிசயித்து அதில் விஞ்ஞான ரூபமாக பரிசோதிக்கவும் செய்து வருகின்றனர். "Department of Oriental Studies' Research laboratory என்று ரஷியாவில் ஆராய்ச்சி முதலியவை செய்து வருகிறார்கள்.

14. கண்ணனும் பலராமரும்

மஹாபாரதம் பூராவும் கண்ணனின் ஒரு திரு விளையாடல் என்றே கூறலாம். கண்ணனின் பல திருவிளையாடல்கள் பாகவதத்தில் காண்போம். (அத். 16. ஐப் பார்க்கவும்). கண்ணன் வஸுதேவருக்கும் தேவகிக்கும் பிறந்த அஷ்டவஸுக்களில் ஒருவனாகவும் எட்டாவதாகவும் பிறந்தார். பலராமர் வஸுதேவருக்கும் ரோஹிணீ என்ற இரண்டாவது மனைவிக்கும் கர்ப்பப் பிரதானமாய் ஆண்டவன் சித்தத்தினால் ஆவிர்பவித்தவர். ஆதி சேஷனே பலராமராயும் நாராயணனே கண்ணனாகவும் அவதரித்த விசேஷத்தைப் பிறக்கு முன்பே ப்ரத்யக்ஷமாக்கி முன்னறிவிப்புடன் அவதரித்தவர்கள். ஸ்ரீ ராமாவதாரத்தில் அக்னி பகவான் மூலமாக பாயஸத்தை தசரதன் பெற்று மனைவிகளுக்குப் பகிர்ந்து கொடுத்து அதில் நால்வராக சங்கு சக்ர ஆதி சேஷ அவதாரங்களுடன், பிறந்தார். த்ரேதாயுகத்தில் தீமையை ஒடுக்கவும் அறத்தை ஆக்கவும் முன்னறிவிப்பிராமல், அவதார விசேஷத்தைக் காட்டாமல், மானிட உருவில் ஸாதாரணமாய் ஒரு மனிதன் தர்மத்தை எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என்ற முறையைத்தானே நடத்திக் காட்டுவதற்காக அவதரித்தவர். கௌஸல்யைக்கு மாத்திரம் சங்கு சக்ர கதா தாரியாய் தான் ஆவிர்பவிப்பதற்கு முன் அறிவித்ததாகச் சில ராமாயணங்கள் கூறுகின்றன. ஆனால் தன் தாயைக் கூட அவ்வுணர்வைத் தன் மாயா சக்தியால் மறைத்து விட்டு மறக்கச் செய்தார், என்பது ஸ்ரீ ராம சரிதம். ஆனால் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்திலோ தன் அவதார விசேஷத்தை ஒவ்வொரு காரியத்திலும் காட்டிக் கொண்டு வந்திருக்கிறார். அப்படி இருந்தும் அவர் அவதார புருஷர் என்பதைச் சிலரே அறிந்தனர். பலர் இகழ்ந்தனர். மற்றும் சிலர் மறந்தனர். இப்படித் த்ரேதாயுகத்தை விட த்வாபரயுகத்தில் தர்மமானது மலிந்து விட்டபடியாலேயே இக் க்ருஷ்ணாவதாரத்தின் மகிமையை பூர்ணாவதாரம் எனக் கொள்கிறார்கள். ஆகையால் தர்மம் மிகவும மலிந்திருக்கின்ற இக் கலியுகத்தில் கல்கியாய் அவதாரம் செய்தால் அது ஸம்பூர்ணாவதாரம் என்றே நாம் நம்பலாம்.

இந்த ஸம்பூர்ணாவதாரமாகிற கல்கியவதாரத்தில் தர்மம் க்ஷீணமடைந்து இருக்கின்ற நேரத்தில், பண்பும் நேர்மையும் ஸத்வகுணங்களும் மறைந்து விடும் நேரத்தில் ரஜோரூபியாய் இத்தாமஸ குணங்களை உத்தம ஜீவராசியாகிய மனிதனிடத்தி

விருந்து போக்குவதற்காகவே குதிரை மேல் ஏறிக் கையில் கத்தியுடனும் வீரபாஹுஸ்வரூபனுய், நெருப்பைக் கக்கிக் கொண்டு, எல்லோருக்கும் பயத்தையும் ஸாத்விகளுக்கு அபயத்தையும் அளித்துக் கொண்டே கல்கி என்ற பெயருடன் அவதரிப்பார் என்று "பவிஷ்யத் புராணம்" என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

கண்ணன் தான் அவதரிக்கும் முன்பே சிறையில் வஸுதேவருக்கும் தேவகிக்கும் நான்கு கைகளுடன் சங்கு சக்ர கதா தாரியாய் ப்ரத்யக்ஷமானதுமல்லாமல் அவர்களுக்குத் தான் பிறந்த பிறகு என்னென்ன செய்ய வேண்டுமென்பதெல்லாம் ஆக்ஞையிட்டு மறைகிருர். காவலாளிகள் ஸுகமான நித்திரையில் ஆழ்ந்திருந்தார்கள். அதே மாதிரி சிறைக் கதவுகள் தாமே திறந்து கொண்டன. யமுனே வழி விட்டது. கோகுலத்தில் வந்து சேருகிறவரை ஒருவரும் அறியவில்லே. குழந்தையை மாற்றி வஸுதேவர் திரும்ப வந்து சிறையில் சேருகிற வரை, காலம் கூட நின்று விட்டது போலிருந்தது. இம்மாதிரி ஒரு அவதார விசேஷத்தை ஆலோசிக்குங்கால் கண்ணன் கருமேனியுடன் இடியும் மழையும் சேர்ந்து கொண்ட தினத்தில் சூன்ய மாதம் என்று நாம் கருதுகிற புரட்டாசி மாதத்தில் கிருஷ்ண பக்ஷ அஷ்டமியில் ரோஹிணீ நக்ஷத்ரத்தில் பிறந்ததைப் பார்த்தால் துஷ்டர்களே நிக்ரஹம் செய்வதற்காவே எடுத்ததோர் அவதாரமெனக் கருதுகிறேம். ஆனுல் அந்த துஷ்டர்கள் கண்ணன் கையினுல் கொல்லப்பட்டதால் மோக்ஷத்தை அடைந்தனர். பிறர் தீவினேயெல்லாம் தான் ஏற்றுக் கொண்டதால் தான் அவன் திருமேனி கருத்ததோ என்று கலேஞர் கூறுவர்.

கண்ணனின் பால்ய லீலேகளேப் பற்றி விரிவாக பாகவதத்திலும், சுருக்கமாக பாரதத்திலும் எத்தனேயோ கவிஞர், கலேஞர் அதில் மெத்த சுவையுடனும் கற்பனேயும் கலந்து அநேக கதைகள் கூறுவர். இதிலெல்லாம் கண்ணன் விஷ்ணுவே அவதரித்து பூமியில் தர்மத்தை நிலேநாட்டுவதற்காகவும் அதர்மத்தை அழிக்கவும் தோன்றினுர் என்பதை அவருடைய பல செயல்களில் பார்க்கிறேம். அப்படியிருந்தும் அவருடைய காலத்தில் சிசுபாலன் முதலியவர்கள் கண்ணன் நாராயணனின் அவதாரம் என்று நம்பவே இல்லே. இடைப்பயல், மந்திர, தந்திர, ஜால வித்தைகளேக் கற்றுக் கொண்டு எல்லோரையும் ஏமாற்றிக் கொண்டு வருகிருன் என்றனர். துரியோதனனுக்குக் கூட

சில சமயங்களில் சந்தேகம் எழும்பினாலும் அவன் லீலைகளை யெல்லாம் அறிந்து இவன் அவதார புருஷனாகத்தான் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை இருந்தது. விஞ்ஞானம் விரிந்து படர்ந்த இக்காலத்திலும் குதிரையேறி கல்கியாக, கடவுள் அவதரித்து, எல்லோர் முன்னிலும் நின்று தான் பூமியில் அவதரித்திருப்பதாகப் பறைசாற்றினாலும் கூட நம்பாத வர்கள் சிலர் இருக்கத்தான் இருப்பர். கலியுகம் பிறந்த பொழுதே கல்கியும் அவதாரம் எடுத்து நம் உள்ளத்தில் இருந்து கொண்டு ஆட்டி வைத்து இந்த லீலா விநோதத்தைக் கண்டுகொண்டிருக்கிறார் என்று நினைக்கிறோம். தனியாக ஓர் உருவத்துடன் நம் எதிரில் காட்சியளித்தால் கூட ஏதோ வேஷதாரி வேஷம் போட்டுக் கொண்டு வந்திருக்கிறான் என்று சொல்ல பலர் இருக்கின்றனர். சினிமாவில் வேட மேற்கும் விஷ்ணுவோ, சிவனோ கண்ணெதிரில் தென் பட்டால் வணங்கித் தாடையில் போட்டுக் கொள்ளும் பாமரர்களும் பலர் இருக்கின்றனர்.

கண்ணன் காலத்திலேயே ப்ரலம்பனன் என்பவன் இம் மாதிரி கைகளில் சங்கு, சக்ரம், இடையில் பீதாம்பரம் கழுத்தில் துளசிமாலை மணி முதலியவை தரித்துக் கொண்டு தான் விஷ்ணுவின் அவதாரம் என்று கூறிக் கொண்டு வந்தானாம். அப்பொழுது கண்ணன் அவனுக்கு உண்மையைக் காட்டி அவனுக்கு ஞானத்தை யளித்தானாம்.

கண்ணன் சிறுபிராயத்திலேயே, பூதனை வதம், சகடாசுரன் பஞ்சனம், காளிய மர்த்தனம், கோவர்தன கிரிதாரணம். இவை களைச் செய்து காட்டியும் கோகுலத்தில் சோபிகள் இவருடைய அவதார மகிமையை அறியாது. அவனுடைய லீலைகளில் ஒரு விதமான மூட பக்தி கொண்டனர். இன்னலில் காப்பவன் கண்ணன் ஒருவனே என்ற எண்ணம் அவர்களிடம் திண்ண மாக இருந்தது. இச்சிறு பிரயாணத்தில் நடந்த கண்ணனின் கோபிகா லீலைகளைப் பற்றியே விளக்கமாக பேசக் கூடிய ஜனங் கள் நம்மிடம் இருக்கின்றனர். பின்னால் அவன் முதியவனாக கோபிகா வஸ்த்ராப ஹாரணத்தைப் பற்றியும், பதினெண்ணா யிரம் ஸ்தீரீகளை மணந்தவன் கண்ணன் எனப் போட்டிருப் பதைப் பற்றி நம் ஜனங்கள் ஏன் அவனைக் காமுகன் என்று விரஸமாகத் தூற்ற மாட்டார்கள் ? பின்னால் தான் ஒரு நித்தியப்ரம்மசாரி என்று நிரூபித்தது இவர்கள் கண்களில் படவில்லை போலும் ! உடலைக் கொடுத்தவன் அவன். அதனை

காத்தவனும் அவனே. இது தவிர உள் நின்று எல்லா சீவ ராசிகளேயும் ஆட்டி வைப்பதும் அவனே. இப்படி இருக்க, ஏன் எல்லா ஜீவராசிக்கும் அவன் கணவனுக இருக்கக் கூடாது ? இந்த தத்வத்தை அறிந்த ஞானிகள் அவனைக் கணவனுகவே பாவித்துப்பரம் பொருளே யடைந்தார்கள், என்று படிக்கிறேம். ஆழ்வார்கள் சரித்திரங்களிலும் பக்தர் களின் புராணங்களிலும் ஒவ்வொருவர் ஒல்வொரு விதமாகக் கண்ணனைப் போற்றி இருக்கின்றுர்கள். ஆண்டாள் திருப் பாவையில் ஒவ்வொரு கோபிகையும் கண்ணனைக் கணவனுக அடைய மார்கழித் திங்கள் நோன்பு நோற்பதற்காக எழுப்பும் விதம் நம் மனத்தை ஈர்க்கிறது. கீத கோவிந்தத்தில் கண்ணனின் ராஸ லீலைகளைப் பற்றி விவரிக்கும் போது ஞான தேவர் தன் மனதை கண்ணனிடம் எவவளவு தூரம் செலுத்தி இருந்தார் என்பது தெரிய வருகிறது. நாராயண பட்டர் குருவாயூரில் இயற்றிய நாராயணீயத்தில் கண்ணனின் அவதார விசேஷங்களைப் பற்றி ஸ்லோகங்கள் பாடும்பொழுது அவ்விக்ரஹமானது தலையாட்டியதாம். இது கலியுகத்தில் நடந்ததொரு விசேஷம். அவனிடம் வைக்கும் பக்தி பூரண மாக இருந்தால் அவன் நம்மைக் கண்டிப்பாக கஷ்டங்களி லிருந்து காப்பான் என்பது உண்மை. கீதையில்,

அனன்யாச் சிந்தயந்தோ மாம் ஏ ஜனு : பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபி யுக்தானும் யோகக்ஷேமம் வஹாம்யஹம்'

என்று அர்சுனனுக்கு அப்போது சொன்ன வார்த்தைகள் தற் காலத்திலும், எக்காலத்திலும் உண்மையான வார்த்தைகள்.

பகவான் கீதையில் அர்ஜுனனுக்குத் தன் அவதார விசேஷத்தைப் பற்றிக் கூறும் போது கீழ்க்கண்ட ஸ்லோகங் களை கவனிக்க வேண்டும்.

ஓ ! அர்ஜுனு ! என்னுடையதும் உன்னுடையதும் கூட எடுத்த ஜன்மங்கள் அநேகம். எதிரிகளை ஜயிப்பவனே ! உன் பூர்வ ஜன்மங்களை அறிவேன். ஏனெனில் எனக்கு மரணமே கிடையாமற் போன போதிலும் என் ஆத்மமாயையின் விசேஷத்தால் ப்ரக்ருதியை நானுக எடுத்துக் கொண்டு அதில் ஈடுபட்டுக் கொண்டிருந்து, எல்லா ஜீவராசிகளுள்ளும் புறமு மாக இருந்து கொண்டு ஈச்வரனுக இருந்த போதிலும் வ்யாபித்து வருகிறேன். எப்போதாவது உலகத்தில் சீர்கேடு ஏற்பட்டு தர்மம் க்ஷீணித்து வருகிறதோ, ஏ பாரத !

அதர்மத்தைப் போக்கி, தர்மத்தைச் செழிக்கச் செய்வதற்காக என்னையே என் மாயையின் மூலம் பிரித்துக் கொள்கிறேன். ஸாதுக்களைக் காப்பதற்கும் துஷ்டர்களை அழிப்பதற்கும் தர்மத்தை ஓங்கச் செய்வதற்காகவும் ஒவ்வொரு யுகத்திலும் தோன்றுகிறேன்

என்னையே சில மூடர்கள் எனக்கு மானம் கிடையாது என் உடல் என்றைக்கும் இருக்கக்கூடியது என்று எண்ணுகிறார்கள் நானும் அந்த மாயா விசேஷத்தால் அந்த மூலப் பொருளின் ஒரு சிறு அம்சம் தான். அர்ஜுனா! எனக்கு முக்காலமும் நடப்பவை அறிய முடியும். ஆனால் என்னையும் என் மாயா லீலைகளையும் என் நிஜ ஸ்வரூபத்தையும் ஒருவராலும் அறிய முடியாது.

தேவர்களும் மஹரிஷிகளும் கூட என்னை அறியமுடியாதவர்களாகி இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களுக்கெல்லாம் வெகு காலம் முன்பிருந்தே மூல புருஷனாய் நான் விளங்கிக் கொண்டிரும்பவன். எவனொருவன் என்னை ஜனன மரணமில்லாதவன், லோகத்துக்கெல்லாம் மஹேச்வரன் என்று உள்ளூர, சந்தேகமற உணர்கிறானோ அவன் இம்மானிட ஜன்மத்தில் தன் பாபங்களிலிருந்து விடுபடுகிறான்.

நான் எல்லாவற்றிலும் இருக்கிறேன். எதிலும் அழிந்து போகு மட்டும் ஸாக்ஷியாக இருக்கிறேன். இதை எவனொருவன் அறிந்து என்னைத் துதிக்கிறானோ அவனே புத்திசாலி என மதிக்கப்படுவான்.

தான் ஒவ்வொரு ஜீவாத்மாவுக்கும் சேதன அசேதன பொருட்களிலெல்லாம் எல்லா ஜீவ ராசிகளிலும், ஒவ்வொரு ஜீவனுக்கும் சாக்ஷி பூதமாக பரந்தாமன், பரமாத்மாவாக விளங்கிக் கொண்டிருக்கிறான் என்று சொல்லும்போது ஒவ்வொரு உடலும் ஒவ்வொரு கோயிலாகிறது என்று ஆகிறதல்லவா ? அதாவது கல்கி ஏதோ வெறொரு ரூபமன்றி நம்முள் நின்று நம்மையெல்லாம் ஆட்டிப் படைக்கிறான் என்றாகிறது. இதையே "அஹம்ப்ரம்மாஸ்மி" "சிவோஹம்", "நானே அவன்" "அவனே நான்" என்று பலதத்வங்கள் கூறுகின்றன. பாகவதத்தில் பல புராணங்களிலும் கல்கியின் இந்த தாத்பர்யம்' தான் கூறப்படுகிறது. கல்கியவதாரம், குதிரையாகிற நம் உடலில் சவாரி செய்து மனத்தை கடிவாளமாகப் பற்றி நம்

துர்குணங்களை தன் வீரக்கத்தியால் பேதித்து நற்குணங்களைக் கேடயமாக வைத்து நம்முள்ளேயே வீற்றிருக்கிருன். நம் ஊனக் கண்ணை மூடி மனக்கண்ணுல் பார்த்தால் அவனை நாம் பூர்ணமாக அறிய முடியும், அவனுடன் இரண்டறக் கலக்க முடியும். ராமாவதாரத்தில் மனிதன் தர்மத்தை எப்படி அனுஷ்டிப்பது என்று காட்டி அதில் நிறைவின்றி, கிருஷ்ணுவதாரத்தில் பலலீலைகளால் அவதார நிரூபணம் செய்தும், திருப்தியுருது கலியுகத்தில் கல்கியாக நம்முள்ளேயே இருந்து கொண்டு பல அனுரூபங்களால் ஒவ்வொரு ஜீவனுக் குள்ளும் அவதரிக்கிருன். எனவே இனி ஆகாயத்தில் கல்கி யாக குதிரை யேறி வருவான் என்று எண்ணி எதிர் பார்த்து ஏமாற வேண்டியது இல்லை.

மகாபாரதம் வரை கண்ணனின் திருவவதாரத்தில் அவன் செய்த திருவிளையாடல்கள் கொஞ்சமே, கண்ணனை விசேஷ மாக பஞ்ச பாண்டவர்களுக்கு நெருங்கிய பந்துவோடல்லாமல் ஸ்நேகிதன் மாத்திரமல்லாமல், மந்திரியாக இருந்து வந்தது மல்லாமல், ஓர் கைகொடுக்கும் தெய்வமாகவே விளங்கினுன். அர்ஜுனன் கண்ணனின் தங்கை ஸுபத்ரையையே மணந்த போதிலும் கண்ணன் ஓர் மைத்துனருய் தழுவிய போதிலும் அர்ஜுனனுக்கு உள்ளூரக் கிருஷ்ண பக்தி என்றிருந்த போதி லும் யுத்த களத்தில் கீதோபதேசம் கண்ணனிடம் பெற்ற பிறகு கண்ணனின் திவ்ய ரூபத்தை இவ்வூனக் கண்களால் பார்க்க ஆவல் கொள்கிருன். ஸந்தேஹத்தாலல்ல ஆவலினுலேயே பார்க்கக் கோருகிருன். அப்போது தான் கண்ணன் அர்ஜுன னுக்கு திவ்யக் கண்களைக் கொடுத்து தன் விச்வரூபத்தை பரிபூர்ணமாக அவனுக்குக் காட்டுகிருர். பார்த்தவன் பயந்தே போகிருன். தான் கண்ணனுடன் கேவலம் மனிதர்களாகப் பழகிய அந்தரங்க ரஹஸ்யங்கள் ஞாபகத்து வருகின்றன. அப்போது அவன் கூறுகிருன்,

(நண்பனென்று உன்னைக் கருதி உன்னை வித்தியாஸமாக ஏதாவது பேசியதெல்லாம், உன் மஹிமை இப்பேர்க் கொத்தது என்ற அறியாமையால் தான் உனக்கு நான் எப்போதும் கடவுளென்ற முறைப்படி விசேஷமாக தண்ட ளிட்டது கூட இல்லை. ஏதாவது பரிஹாசமாகவோ விளையாட்டுக்காகவோ செய்யத் தகாதவைகளை செய்திருந்தாலும், இருவரும் ச்ரம பரிகாரமாக ஒரே படுக்கையில் படுத்திருக்கிருேம்

பக்கத்து பக்கத்தில் சாப்பிட்டிருக்கிறோம். இம்மாதிரி எத்தனையோ காரியங்களில் தவறுகள் உனக்கிழைத்திருந்தால் அறியாமையினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த என்னை மன்னிக்க வேண்டிக் கொள்கிறேன்.)

தருமரும் பீமனும் நகுலனும் கண்ணனை தெய்வமாகவே பாவித்து வணங்கினார்கள். "உன்னால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. நாங்கள் வாழ்வதே உன் கருணையாலல்லவா? உன்னை நினைத்தால் போதும் எங்கள் கஷ்டங்கள் சூரியனைக் கண்ட பனிபோல் விலகிவிடும்" என்றெல்லாம் தருமரும் பீவனும் கண்ணனைப் போற்றுவர்கள். ஆனால் சகாதேவன் மட்டும் கண்ணனை இன்னும் மேலாக பரமாத்ம ஸ்வரூபமாகவே நினைத்தான். எங்கும் நிறைந்த பரம்பொருளாகவும் ஒவ்வொரு ஜீவராசிக்குள்ளும் ஸாக்ஷிபூதனாயும் ஆட்டிப் படைக்கிறவனாயும் விளங்கிக் கொண்டிருப்பவன், ரூபமெடுத்து தர்ம பரிபாலனத்திற்கும் துஷ்டசம்ஹாரத்திற்குமே அவதரித்தவன் என்று பூர்ணமாக குறைவில்லாமல் நம்பினான். ஒரு தரம் கண்ணனே சகாதேவனுக்கு சவால் விட்டானாம்.

பாரதப் போர் மூளுமுன், துரியோதனன் ஸகாதேவனை அணுகி தான் ஜயிக்கக்கூடிய ஓர் நல்ல நேரத்தை போர் ஆரம்பிப்பதற்குக் குறித்துக் கொடுக்கக் கேட்டான். ஸகாதேவன் ஸத்யம் தவராதவன் ஜோதிஷ சாஸ்திரத்தில் வல்லவன். இப் போரில் பாண்டவர்கள் பங்கெடுப்பதும், பீமனின் சபதமும் த்ரௌபதையின் சபதமும் கண்ணனின் திருவிளையாடலும், இவனுக்கு கொஞ்சமேனும் பிடிக்கவேயில்லை. ஸகோதரர் சொற்படி கீழ்பணிய வேண்டி வந்ததாலேயே இவனும் போரில் ஈடுபட்டு சகுனியைக் கொல்லவேண்டியதாயிற்று என முன்னமையே பார்த்தோம். போரில் வெற்றியும் தோல்வியும் பற்றி இவனுக்குக் கவலையேயில்லை. ஆதலால் துரியோதனனுக்கு தன்னை அண்டிக்கேட்டதாலேயே போரைத் தொடுக்க ஓர் நல்ல நேரத்தை குறித்துக் கொடுத்தான். அப்போது கண்ணனுக்கு கோபம் வந்து ஸகாதேவனைப் பார்த்து, இது தகுமா! சத்ருவை நீ பாலித்து நேரத்தைக் குறித்து கொடுத்துவிட்டாய். அந்நேரத்தில் போர் தொடர்ந்தால், க்ரஹங்களின் நிலைகளாலே உன் அண்ணன் தர்ம, பீம, அர்ஜுனர்கள் மடியவேண்டி வருமே! நீங்களிருவரும் கூட மடிவீர்களே! பதிவ்தா சிரோன்மணி த்ரௌபதிக்கு வைதவ்யம் வந்து விடுமே! உங்களை நம்பி, உங்களுடைய தைவாம்சத்தை நம்பி, அத்தனை அரசர்களும்

ஸேனைகளும் மடியுமே ஏன் உனக்கு புத்தி இப்படி போயிற்று? நான் நினைத்தால் உன்னையே கட்டிப் போட்டிருப்பேன். காரியம் முடிந்து போய் விட்டது. இப்போது என்செய்வது? இவ்வளவு ஸத்யஸந்தனாக இருக்கிறவன் என்னையும் நீ கட்டுப் படுத்துவாயோ? என்று கேட்கிறான். இந்த சவாலை ஏற்று, ஸகாதேவன் கண்ணை மூடி, ஆஸனத்தில் அமர்ந்து ஏகாக்ர சித்தத்துடன் பரம்பொருளை உள்நோக்கில் கட்டலானான். மனதை ஒருமைப் படுத்தினான். மனம் இறுக, இறுக கண்ணன் தவித்தானாம். "ஸகாதேவா ! என்னை விட்டுவிடு. நீயே வெற்றி யடைந்தாய்" என்று கண்ணன் போற்ற ஸகாதேவன் தன் எதிரில் நான்கு புசங்களுடன் சங்கு சக்ர பீதாம்பரதாரியாய், நாராயணஸ்வரூபியாய் தர்சனம் தர, கண்ணனைப் பார்த்தாள். வணங்கினாள். போற்றினாள். தோத்திரங்களுடன் தொழுதாள். என்று பாரதத்தில் விரிவாக வ்யாசர் எடுத்துரைக்கிறார்.

கண்ணனின் அத்தை குந்தி. அவளைக் கண்ணன் குசலம் விசாரிக்கும்போதெல்லாம், குந்தி சொல்கிறாள், 'கண்ணா' பஞ்ச பாண்டவர்கள் கஷ்டங்களை அநுபவிப்பதும் அக்கஷ்டங்களிலி ருந்து உன் உதவியால் விடுபடுவதும், துரியோதனாதிகள் குறையில்லாமல் ஸுகத்தையே அநுபவிப்பதும், அவர்க ளுடைய பொறுமைக் குணங்களும் எல்லாம் உன் திருவிளையா டல்லவா? என் மனதில் ஓரளவேனும் ஸுகமிருக்குமேயா யின் போகங்களில் ஈடுபட்டிருப்பேனாயினும், உன்னை மறந் திருப்பேன். ஆதலால், எனக்கு எப்போதும் கஷ்டங்களையும், துக்கங்களையும் கொடுத்துக் கொண்டேயிரு. அப்போதுதான் "கண்ணா" உன்னை என்றும் மறவாமலிருப்பேன் என்றனள் துரௌபதையோ கண்ணனை பரமாத்மா என்று பூரணமாக நம்பினவள். அவளுடைய துயிலுறிப் படலத்தின்போது நாணத் தையும் மறந்து, சேலையைப் பற்றிய கைகளையும் உயரத் தூக்கி "பகவானே! மாதவ! கண்ணா ! நிராதரவான எனக்கு நீயே கதி! என்று வணங்கினவுடன், கண்ணன் முடிவில்லாத வஸ்த்ரத்தை அவள் உடலைப் போற்றும்படி அளித்தாள். கானகத்திலும், துர்வாச சாபத்திற்கு பயந்து, அக்ஷய பாத்ரமும் காலியாகி விட்டபோது, கண்ணனை நினைத்தாள். உடனே கண்ணன் எதிரில் வந்து, ஓர் பருக்கையை உண்டு, அவளுடைய குறை யைத் தீர்த்தான் என்று பார்த்தோம். கண்ணன் தூதுக்கு புறப்படுமுன்னர், துரௌபதை கண்ணனைப் பார்த்து, "அண்ணா! தூது செல்கிறான். சமாதானமாகி, துரியோதனாதி

கள் ஸ்நேகம் ஏற்பட்டு விட்டால், என் சபதமும், பீமனின் சபதமும் என்ன ஆவது? என் சபதம் தவறினுல், நான் உயிர் விடுவேன்'' என்கிருள். கண்ணனும், "தங்காய்! கவலைப் படாதே, என்ன நடக்கப்போவது என்பது எனக்கு தெரியும். உன் சபதம் நிஜமாய் நிறைவேறும் என் கடமையைத்தான் நான் செய்கிறேன். அப்படி, என் பேச்சைக் கேட்டு, துரியோத ஞதிகள் திருந்தினுல், என்னை விட பாக்கியசாலிகள் யார் இருப் பார்கள். பதிவிரதையாகிய நீ சபதமிட்டு விட்டாய். உன் சபதம் எப்படியாவது எப்போதாவது கட்டாயம் நிறைவேறி விடும். கவலைப்படாதே'' என்று அவளுக்கு தேறுதல் சொல் கிருர்.

பாரதப் போரின் போதும் கண்ணன் உதவியில்லையேல் பாண்டவர்கள் எப்படி தங்களை விட ஏழு மடங்கு பலமுள்ள எதிரிகளை ஜயித்திருக்க முடியும்? பீஷ்மர் ஒருவரையே ஜயித் திருக்க முடியாதே. கண்ணன் நாராயணனின் திருவவதார மென்பதற்கு பாரதப் போர் ஒன்றே சான்று போதும். தன் தங்கை ஸுபத்ரையின் மைந்தன் அபிமன்யுவுக்கு கர்ப்பவாசத் திலேயே கண்ணன் அஸ்த்ர சஸ்திர வித்தைகளெல்லாம் கற்றுக் கொடுத்தான். பத்மவ்யூகத்தை உடைக்கக் கற்றுக் கொடுத்தான். அதிலிருந்து தப்பி வருவதைக் கற்றுக் கொடுக்கவில்லை. அபிமன்யு இறந்தவுடன் அர்ஜுனன்தான் புலம்பினுள் என்று படிக்கிருேமே தவிர, ஸுபத்ரை புலம்பவில்லையாம். அவள் "என் அண்ணன் கண்ணனுக்கில்லாத அக்கரை எனக்கு எதற்கு ? என்ருளாம்.

கடைசியில் கண்ணனின் அவதார லீலைகளெல்லாம் முடிந்துவிட்ட பிறகு, தன்னினத்தவர்கள் யாதவர்கள் கர்வங் கொண்ட நேரத்தில், ஒவ்வொருவரும் அகங்காரம் மிகுந்து மகரிஷிகளையும் மதிக்காமலிருந்ததோர் நிலையை யடைந்து விட்ட பிறகு அவர்களையும் ஒழித்துக்கட்ட தீர்மானித்து விட்டான். மகரிஷிகள் சாபம் யாதவப்பூண்டே ஒழியட்டும் என்பதை தானும் ஏற்றுக் கொண்டு, பிரபாஸ தீரத்தில் யாத வர்களுக்குள் குடிபோதையிட்டு தங்களுக்குள்ளேயே சண்டை போட்டுக்கொண்டு மடிந்துவிட்ட பிறகு, தானும் ஓர் வேடன் பக்ஷியென அம்புவிட, அவ்வம்பு குதிகாலில் தைத்து, தன் த்ரேகத்தை விட எண்ணி, உத்தவரைக் கூப்பிட்டு, அவருக்கு உத்தவகீதை என்கிற ரஹஸ்யங்களெல்லாம் நிரம்பிய பரமாத்ம

10

தத்வத்தை உபதேசித்துவிட்டு, சங்கு சக்ரகதாதாரியாய் வைகுண்டம் சென்று விட்டார்.

15, கீதாஸாரம்

கண்ணனின் கீதை பாரதப் போர்க்களத்தில் அர்ஜுன னுக்கு போதிக்கப்பட்டதும் இந்த கீதையாயது, அர்ஜுன னுக்கு மாத்திரமல்லாமல் எல்லோருக்கும் உபதேசித்ததாகும் என்பதும் இது ஸர்வ மதத்திற்கும் ஸம்மதமான ஓர் அறிய போதனை என்பதும், உலகம் பூரா அநேக பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு அநேகப் பேர்களால் விஸ்தீரமாக விவ ரிக்கப்பட்டும் இருக்கிறது. இக்கீதைக்கு சங்கரர், ராமானுஜர் மத்வர் என்ற மூன்று ஆசாரிய புருஷர்களே இதற்கு பாஷ்யங் கள் எழுதியிருக்கிறார்கள் என்றால் இதன் முக்கியத்துவத்தை பலர் அறிந்து பல மேதாவிகள் பல ஆத்ம விசாரிகள், இன்னும் பல வேதாந்திகள் எழுதியிருப்பது ஓர் அதிசயமல்ல ஸம்ஸ்கிரு தத்தில் இருக்கும் இம் மூலஸ்லோகங்களே மிகவும் எளிய நடையிலுள்ளன. மூலத்தை படித்த மாத்திரத்தாலேயே சிறி தளவு ஸம்ஸ்கிருத ஞானம் இருக்குமேயாலுங்கூட, நன்றாக நமக்கு புரிந்து கொள்ள முடியும். இதை பல பேர்கள் பல விதங்களில், தாங்கள் மனப்போக்கின் ப்ரகாரம் தங்களுடைய சொந்த சரக்குகளையும் ஏற்றி, சிலர் ஸாதாரண அர்த்தங்களை அனர்த்தங்களாக ஆக்கும் வரை, இக்கீதை இடங்கொடுத்தும் ஓர் அதிசயமல்ல. இந்த பதினெட்டு அத்யாயங்களையும் மனப் பாடம் பண்ணி இவ்வதிசய தத்வங்களை மனதில் வாங்கிக் கொண்டு, அதன்படி நடப்பவர்கள், அதனால் உபயோக முற்ற வர்கள், அதனால் தங்கள் வாழ்க்கைகளை உறுவாக்கிக் கொண் ட வர்கள் எத்தனை பேர் என்றால் கொஞ்சமே. இந்த தாத்பர்யத்தை கண்ணனே அர்ஜுனனிடம் கடைசியாகக் கூறும்போது

கச்சிதேதத் ச்ருதம்பார்த்த த்வயைகாக்ரேண சேதஸா !
கச்சித ஞானநம்மோஹ : ப்ரநஷ்டந்தே தனஞ்ஜாய ''

"ஹேபார்த்தனே ! உன்னால் நான் சொல்லப்பட்ட முழுமையும் அல்லது கொஞ்சமேனும் ஒரு மனதுடன் க்ரஹிக்க பட்டதா ? அதனால் தனஞ்ஜயனே ! உன்னைச் சூழ்ந்திருக்கும் அஞ்ஞானத்தால் ஏற்பட்ட ப்ராந்தியானது விலக்கப்பட்டதா !'' என்று ஸந்தோஷத்துடன் கேட்கிறார். அதி புத்திசாலியாகிய

அர்ஜுனனுக்கே இந்த கீதையைப் புரிந்துக் கொள்ளவும் அதன்படி நடக்கவும் கடினமானது என்றால் நாமெல்லாம் எம் மாத்திரம்! ஆனால் அதனால் பயனை யடைந்த பேர்கள் பலரு முள்ளார்கள். தற்காலத்திலும் இருக்கிறார்கள் என்றால் மிகை யான வார்த்தையல்ல.

இதே அர்ஜுனனுக்கு உபதேசித்த கீதைக்கப்பால் இன்னும் பல ரஹஸ்யங்களைப் பொருத்தி, உத்தவருக்கு இதே கண்ணன் தான் பூமியை விட்டுப் போகும் போது கூறியுள்ளார். இதற்கு "உத்தவ கீதை" "உ த் த ர கீ தை" என்று பெயர். இது "பாகவத"த்தில் பதினொருவது ஸ்கந்தத்தின் பகுதியாகும்.

பகவத் கீதையின் ஸாரம் தான் என்ன? கர்மயோகம் பக்தியோகம், ஞானயோகம் இம் மூன்று பிரிவுகளை முக்கியமாக எடுத்துக் கொண்டு, இவை எப்படி எப்படி அநுஷ்டிக்க வேண்டும். இதனால் பலன்தானென்ன, அநித்தியமான இகலோகத்திற்கும், நித்தியமான பரலோகத்திற்கும், மோக்ஷத் திற்கும் ஜனன மரண துக்கங்களிலிருந்து விடுபடக் கூடிய மார்க் கங்கள் தானென்ன, இவையெல்லாம் தகுந்தபடி விளக்கங்களுடன் அர்ஜுனன் அங்கங்கே ஸந்தேகங்களை எழுப்பி, வினாக்கள் போட அவ்வினாக்களுக்கு தகுந்த முறையில் பதில்களைக் கண்ணன் கூற இக் கீதைக்கும் மதத்துக்கும் ஒரு சம்பந்த முமில்லை. என்று உலகம் பூரா ஒப்புக் கொண்டிருக்கிறது.

நம் ஹிந்து மதத்திலேயே அநேகம் நூல்கள் பொக்கிஷங் களாக விளங்கிக் கொண்டிருந்தன. இப் பழைய நூல்களை யெல்லாம் மேல் நாட்டவர் வந்து ஆராய்ச்சி செய்கிறார்கள். பல பிரிவுகள் ஹிந்து மதத்தில் காணப்பட்ட போதிலும், கடைசி முடிவான குறிக்கோள் என்ன என்பதில் எல்லா மதங்களும் ஒருமைப் பட்டுள்ளன. அதையே தான் கண்ணன் உலகத்துக் கெல்லாம் பயன் படும்படி "Universal Religion" என்று கீதைக்கு ஒரு தனி மகத்துவம் கொடுத்திருக்கிறார்கள். மகாபாரதத்திற்கே இக்கீதையினால் தான் பெருமையை யடைந்தது என்றால் அது மிகையாகாது.

இவ்வுலகில் பிறந்து சமூகத்தில் ஈடுபட்டு ஓர் நல்வாழ்க்கையை நடத்தி, இஷ்டஜன பந்து மித்ரர்களால் நல்லவன் எனப் பெயரெடுக்க எல்லோருக்கும் ஆசையிருக் கிறது. அவ்வாசையை நிறைவேற்றிக் கொள்ள மனிதன்

எவ்வளவு பாடுபடுகிருன்? பிறப்பு முதல், இறப்பு வரை, படித்து உழைத்து தன் உடலைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய முறைகளை யெல்லாம் கற்றும் அனுசரித்தும் தனம் ஸம்பாதித்து கலியாணம் செய்து கொண்டு புத்திரர்களைப் பெற்று போகபோக்யங்களை அனுபவித்து முதிர்ச்சி யடைகிருன். அப்புறம் என்ன ? கிழத்தனம் வந்து விடுகிறது. ஸம்பாதிக்க முடிய வில்லை. சேகரித்த தனத்தை வைத்துக் கொண்டு, பாரியா புத்ராதிகளை ஸம்ரக்ஷித்த பின் மேலே பார்க்கிருன். அவன் இத்தனை நாள் உழைத்த தெல்லாம் தனக்கு மாத்திர மல்ல மற்றவர்களுக்குமல்லவா! ஸமூகத்தில் வாழ்பவர்கள் அத்தனை பேரும் ஊடுருவி சிந்தித்துப் பார்த்தால், தான் ஸம்பாதித்த தனம் பெயர் கீர்த்தி எல்லாம் தனக்கு மாத்திர மல்ல அல்லவா? அவன் உழைத்ததெல்லாம் ஸந்ததிக்கும் உலகத்தோருக்கும் சேர்கிறது. அவன் வரை என்ன ஆகிறது

"The pride of wealth the pomp of power that ever gave
The paths of glory all lead but to the grave."

என்று Thomas gray அழகாக விவரித்திருக்கிருர். பார்க்கப் போனல் தன் வரைதான் செய்து கொண்டவை ஒன்று மில்லை. ஸுகதுக்கங்கள்தான் அவன் கண்டவை. பிறகு இதே மாதிரி "புனரபி ஜனனம் புனரபி மரணம்" என்ற படி இவ்வுலகில் திரும்பத்திரும்ப வந்து உழன்று தன் ஜீவாத்மாவிடம் விரக்தியும் வைராக்கியமும் ஏற்பட்டு, ஒரு ஜனமாவில் தான் இந்த ஜனன மரணுதி துக்கதிலிருந்து விடுபட எண்ணுகிருன். அப்போது தான் இந்த "பகவத்கீதை" போன்ற நூல்கள் அவனுக்குக் கைகொடுக்கிறது. மெதுவாக தான் ஆத்ம சிந்தனையில் ஈடு பட்டு வாழ்வின் பலன் தானென்னே! என்று தீவிரமாக ஆலோசிக்கிருன். சிந்தனு சக்தி வளர்கிறது. மேலும் மேலும் இது வளர்ந்து தபஸ்ஸாகிறது. meditation concentration. of thought, ஓர் மனப்பாடு, நேர்மை, பண்பு, தர்மம், நியாயம், ஸத்யம், இதெல்லாம் அவனுள் வளர்ந்து கொண்டே வருகிறது. வளர வளர, பரந்தாமன், அல்லது பரமாத்மா, அல்லது பரம் பொருள், நம்மை ஏதோ ஆட்டு வைக்கும் தெய்வம் இருக்கிறது. என்று நம்பி நல்ல வழியில் திருப்பி, ஸந்நியாசத்தை (காஷாய மல்ல) மேற்கொண்டு பரமாத்மாவுடன் ஒன்று சேர பாடு படுகிருன்.

'இதை யெல்லாம் செய்ய வழிதானென்ன?', 'எந்தெந்த மார்க்கம் நமக்கு இந்த கலியுகத்தில் உபயோகமானது?.

என்பதை எல்லாய் படிப்படியாக கிருஷ்ணன் விளக்குகிருன் ஆத்மாவைப் பற்றியும், க்ஷேத்ரக்ஷேத்ர க்ஞ என்பதைப் பற்றியும் விளக்கி விட்டு, மார்க்கங்கள் மூன்றை படிப்படியாக அநுஷ்டிக்கச் சொல்கிருன். முதலில் கர்மா, இரண்டாவது பக்தி, மூன்ருவது ஞானம்விதித்த கர்மாக்களே ஸரியாகச் செய்து, ஆண்டவனே செய்கிருன், நாம் ஒரு கருவி என்ற நினைப்போடும் நேர்மை தவருமல், பண்பு தவருமல் பலனே எதிர்பார்க்காமல், கர்மாவை எவன், செய்து வருகிருனே முதலாவது அவனிடைத் தாமஸ குணங்கள் மறைந்து ஸத்வ குணங்கள் மேம்பாடடைகின்றன. குணங்கள் பரிசுத்தமானதும், இவன் மனுேநிலே ஆண்டவனிடம் ஈடுபடுகிறது. அப்போது தான் இவன் பக்திமானுக விளங்க யோக்கியதையுள்ளவனுக ஆகிருன். பக்தி மார்க்கத்திலும், பரமனே கதி, தனக்கு ஒன்றும் தெரியாது, பார்ப்பதெல்லாம் பரமன், எல்லோருள்ளத்திலும் பரமன் இருக்கிருன். என்கிற எண்ணங்களில் தயை, கார்பண்யம், அன்பு இவைகளெல்லாம் ஒன்றி வளர்கின்றன, ஸமத்ருஷ்டி என்று, சிங்கம் புலி கரடி முதல் எறும்பு பூச்சி வர்க்கங்கள் வரை ஸகல ஜீவராசிகளிடத்திலும் இவன் மனதானது ப்ரதிபலிக்கிறது. இப்போதுதான் ஞான மார்க்கத்திற்கு உகந்தவனுக ஆகிருன். ஸாதுவாக ஆகிருன். விரக்தி பிறக்கிறது. தனக்கென ஒன்றும் வைத்துக்கொள்வதில்லே. எல்லாவற்றையும் த்யாகம் செய்கிருன். கடைசியில் தன்னேயே தியாகம் செய்துகொள்ளுகிருன் ஆண்டவன்பால்.

இந்த ஆத்ம ஞானத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் உள்ள சம்பந்தத்தையும் இவை இரண்டிற்கும் நடுவில் உள்ள ஒரு No man's land என்று சொல்லும்படி ஏற்படுகிற ஒரு இடைவெளியைப் பற்றி ஸ்வாமி சிவா நந்தரின் சிஷ்யர் ஸ்ரீ ஸ்வாமி வெங்கடேசாநந்தர தன் "கீதையும் குருதேவரும்" என்ற சிறு புத்தகத்தில் அழகாக விளக்கி யிருக்கிருர். (சிவாநந்தாயோகாசன சாலே. இராசிபுரம். சேலம் ஜில்லா) வில் கிடைக்கிறது.

16, பாகவத ஸாரம்

வேத வ்யாஸரால் இயற்றப்பட்ட மற்ருெரு பெரிய கிரந்தம் பாகவத புராணம். இப்புராணத்தை வ்யாஸர் ச்லோகங்கள் மூலம் சொல்லிக் கொண்டே வர விநாயகரே எழுதி வந்தாராம். இருவருக்குள் ஒரே ஒரு நிபந்தனே என்னவெனில் வ்யாஸர்

சொல்லிக் கொண்டே வருவதை நிறுத்தக் கூடாது; விநாயகரோ எழுதுவதை அர்த்தம் புரிந்து கொண்டே எழுத வேணும், அதனுல்தான் ஸரளமான ஸம்ஸ்க்ருதத்தில் சொல்லிக் கொண்டே வரும் வ்யாஸர் இடையிடையே கஷ்டமான சந்தஸ்ஸில் சில சுலோகங்கள் தொகுப்பார். இதை விநாயகர் அர்த்தம் புரிந்து கொள்வதற்குள் வ்யாஸர் மேலே தன் பாடல்களை கவனம் செய்து விடுவார். இந்த மாதிரி செய்யப்பட்ட இந்நூலானது தலை முறை தலைமுறையாக வ்யாஸரின் சிஷ்யர்களின் மூலமாக வந்து பிறகு நம் காலத்தில் அச்சிடப்பட்டு கிடைக்கப் பெற்றிருக்கிறோம். இது ஓர் அரிய பொக்கிஷம் என்றால் மிகையாகாது.

ஏனெனில், இந்த பாகவதமானது உலகச்ருஷ்டி முதல் யுகங்கள் யுகங்களாக ஸ்ரீ மந்நாராயணன், அவதாரங்கள் எடுத்து வந்தாராம். அவ்வவ்வவதாரங்களின் விசேஷங்கள், சரிதங்கள், கருத்துகள், அக்காலங்களில் இப்பூமியானது இருந்த நிலை, தர்மம் எப்படி ஸ்தாபிக்கம்பட்டது, நாகரீகம் எப்படி இருந்தது. ராஜ தர்மம், மனுஷ்யதர்மம் எப்படிப்பட்டவை, இவையெல்லாம் உள்ளடங்கி இயற்றப்பட்டதோர் அரிய நூலாகும். பகவானின் அவதாரங்கள் நமக்கு முக்யமாக பத்துதான் அறிவோம். அவைகள் தவிர, பல அவதாரங்களைப் பற்றி வ்யாஸர் கூறுகிறார். அஸுரர்களும், தேவர்களும் ஒன்றாக வாழ்ந்த காலமும் இவர்கள் வைரிகளாக வாழ்ந்த காலமும் ஆண்டவன் கண்களில் அவ்விரு தரத்தாரும் எப்படியிருந்தனர். ஆண்டவன் இவர்களிடை அடிக்கடி தோன்றி எப்படி தர்மங்களையும் நியாயங்களையும் தீர்த்து வைத்தார் என்பதெல்லாம் காண்கிறோம்.

பல ரஸமான கதைகள் நம் சுவைக் குன்றாதபடி கூறப்படுகின்றன. மயிர்கூச்செருக்கும்படியான சம்பவங்களும் இருக்கின்றன. இவையெல்லாம் புராணக் கதை, பூர்வ சரிதம், தற்கால ரீதிக்குகந்ததல்ல என்று தள்ளி விட்டாலும், ஜீவாத்ம பரமாத்ம தத்வங்களை அந்தந்த இடங்களில் சொல்லப்படுபவை. என்றென்றைக்கும் உபயோகப் படக் கூடியவை. இவ்வுடல் நமக்கு எப்படி கிடைக்கிறது காற்று போனதும் உடல் கட்டையாகி எரிக்கப்படவோ, புதைக்கப் படவோ ஆகிவிடுகிறதே. இவ்வுடலை இருக்கும் வரை எது நம்மை எண்ணும்படியும், பார்க்கும் படியும் கேட்கும் படியும் நுகரும் படியும், தர்மாக்களை செய்யும் படியும் செய்விக்கிறது; ஏன் ஒவ்வொருவருக்கும் ஒரே

வழியில் எண்ணவோ, காரியங்களைச் செய்யவோ வொண்ணுமல் பல வழிகளில் செய்கிறார்கள் இதற்கெல்லாம் முடிவென்ன, பூமண்டலம் எத்தகையது, எப்படி உண்டாயிற்று, இதைப்போல் பன்மடங்கு பெரிய மண்டலங்கள் ஆகாயத்தில் ஒன்றுக்கொன்று மோதாமல் மிதந்து கொண்டிருக்கின்றனவே இவையெல்லாம் எப்படி உண்டாயின. ஸூரிய சந்த்ர நக்ஷத்ராதிகள் எப்படி ப்ரகாசிக்கின்றன இல்லை இவையெல்லாம் நம் கண்களுக்குத் தோன்றும் மாயத் தோற்றங்களா ? இப்பேர்க்கொத்த வினக்களுக்கெல்லாம் தகுந்த விடைகள் இப் பாகவதத்தில் கூர்ந்து வாசித்தவர்கள் அறிவார்கள். பதினொருவது ஸ்காந்தத்தில் உத்தவருக்குக் கண்ணன் அநேக ரஹஸ்யங்களைக் கூறுவதாக வ்யாஸர் அதையெல்லாம் நமக்கு பகிரங்கப் படுத்திருக்கிறார். புரிந்து கொள்ளக் கூடிய ஆசையுள்ளவர்களுக்குத்தான் இந்த உத்தவகீதை புரியும். அர்ஜுனனுக்குக் கூறிய பகவத் கீதையானது மேல்வாரியாக மோக்ஷ மார்க்கத்தைக் கண்ணன் உபதேசித்தது அதுவே, அநேக ஸூக்ஷ்மங்கள் பொரிந்தினதோர் உபதேசம் இந்த பகவத் கீதைக்கு ஸமயாசாரியார்கள் மூவர் தவிர பல பேர்கள் பாஷ்யங்கள் எழுதியிருக்கின்றனர். பல பேர்கள் உரைகளும் வ்யாக்கியாங்னகளும் எழுதியிருக்கிறார்கள். இவ்வுத்தவ கீதைக்கு இவர்கள் பாஷ்யமோ வ்யாக்யானமோ எழுதாத காரணம் என்ன என்பதுதான் தெரியவில்லை.

ராமக்ருஷ்ண மடத்தில் இந்த ஏகாதச ஸ்காந்தத்தில் அடங்கிய உத்தவ கீதையை " The last Message of India" என்று புத்தகம் அருளியிருக்கிறார்கள். வாசகர்கள் அதை வாங்கிப் படித்தால் எல்லோருக்கும் பாகவத மூலமே படிக்க ஓர் ஆவலைத் தூண்டும் என்பதில் சந்தேகமேயில்லை.

17. ராமாயண ஸாரம்

ஸ்ரீ ராமனின் கதையை எத்தனை தடவை கேட்டாலும், யார் எப்படிச் சொல்லி கேட்டாலும் சலிக்கவே சலிக்காது. இந்த ராமாயணத்தின் தனி விசேஷத்தினலேயே பல மஹரிஷிகள் பல கவிஞர்கள், அறிஞர்கள் தாங்கள் தங்கள் கற்பனைகளுக்கு கந்த படி, எழுதியிருக்கிறார்கள். இதில் நம் நாட்டில் வால்மீகி ராமாயணம், கம்பராமாயணம், துளஸிதாஸ் ராமாயணம், காளிதாஸனல் இயற்றப்பட்ட ரகுவம்சத்திலடங்கிய ராம சரிதம், போஜ மகாராஜனல் செய்யப்பட்ட சம்பு ராமாயணம், ராமதாஸரால் இயற்றப்பட்ட ஸ்ரீ ராம மானஸ சரிதை, இன்னும் ஆனந்த

ராமாயணம் போன்றவை, இன்றும் அங்கங்கே ராமனைக் குறித்தும் அவன் சொல்களையும் குறித்தும் திருப்பாவை திருப்புகழ் போன்ற பல பாடல்கள் பல பாகவதர்கள் பாடியுள்ள கீர்த்தனைகள் நடைமுறையில் வருகின்றன. ஆனால் கேரள நாட்டிற்கு போனால் அங்கே எல்லோரும் வ்யாஸரின் அத்யாத்ம ராமாயணமே அப்பழுக்குக்கு இடமில்லாதது விஷ்ணு ஸ்வரூபியாகிய வ்யாஸர் ப்ரம்மாண்ட புராணத்தைச் செய்யும் போது தானே ராம சரிதையை சிவன் பார்வதி விவாத ரூபமாக தெள்ளத் தெளிவாகவும் மிகவும் அர்த்த புஷ்டியுடனும் வேதாந்த தத்வங்களும் பல ரகசியங்களும் அடங்கியதோர் க்ரந்தமாக விவரித்துள்ளார் என்று கருதப்பட்டு, அதற்கு வ்யாக்கியானங்களுடன் ஸ்ரீ எழுத்தச்சன், குருப் என்றவர்கள் ஸம்ஸ்க்ருதத் தேர்ச்சி பெற்றவர்கள், மலையாளத்தில் அழகாக இரண்டு பெரிய பாகங்களாகச் செய்திருக்கிறார்கள். இந்த க்ரந்தத்தில் ஸந்தேகத்திற்கே இடமில்லை எனலாம். இதைப்பற்றி அடுத்த அத்யாயத்தில் விவரிப்போம்.

"ராமகதாம்ருதபானம்" என்று ஒரு கவி வர்ணிக்கிற ப்ரகாரம் ராம கதையின் ருசி வேறு எந்த புராணக் கதைகளிலும் கிடையாதெனவே கூறி விடலாம். அந்தந்த இடங்களில் ஸ்ரீ ராமன்தான் மானிட வேடம் பூண்டு, மனிதன் தர்மத்தை நழுவ விடாமல் ஸத்யம் தவறாமல் நேர்மையுடன் பண்புடன் எப்படி நடக்க வேண்டும் எப்படி நடக்கக் கூடும் என்றெல்லாம், தன் வெவ்வேறு சொல்களால் காண்பிக்கும் போதும் அவனுடைய சாந்தத்தையும், ம்ருதுவாக்யங்களையும், தான் அவதார புருஷன் என்பதை மறந்து, மனிதனாக நடத்து வந்ததோர் பண்பும், அதிக ஆச்சரியத்தையும் உணர்ச்சியையும் அளிக்கக் கூடியவை.

ஸ்ரீமத் வால்மீகி மகரிஷியும், அவரைப் பின் பற்றிய கம்பரும், ஓரொரு காட்சியை பல பாடல்களால் வர்ணனைகள் செய்யும் போது, நமக்கு அந்த பாடல்கள் புராணமாகத் தோன்றாது. ஒரு கலை மிகுந்த அரிய நூல் (Work of Literery art) என்றே தோன்றும். இந்த காட்சி வர்ணனைகளெல்லாம் விரிவாக வ்யாஸரின் அத்யாத்ம ராமாயணத்தில் காணப்பட மாட்டா. அதில் ஸ்ரீ ராமனின் ஸம்பாஷணைகளுக்கும் மற்றவர் விவாதங்களுக்குமே முக்கியத்வம் கொடுக்கப்பட்டுள்ளது. வால்மீகிக்கு நாரதர் உபதேசிக்க, நாரதருக்கு ஸநகஸநந்தனர் உபதேசிக்க,

ஸநகாதிகளுக்கு ப்ரம்மாவே சொல்ல, ஸ்ரீ ராமனின் கதை வால்மீகிக்கு எட்டும் போது நான்காவது பாடமாய் விட்டது. அதனுலேயே அதில் திரிபுகள் காணப்படுகின்றன என்று பல பேர் அபிப்ராயப்படுகிருர்கள். வ்யாஸர் விஷ்ணு ரூபியானதால் தன் அம்சம் ஸ்ரீ ராமனுக ப்ரதிபலித்த போது நடந்த ஸம்பவங்கள் முதல் தரமாகத்தான் இருக்க வேண்டுமல்லவா ? அதனுல் அந்த அத்யாத்ம ராமாயணத்தில் ஸந்தேகத்திற்கே இடமில்லே என்று சொன்னேன். அஹல்யை சாபம், தக்ஷயக்ஞம், கங்காவதாரம், வாலிவதம், ஸீதா அக்னிப்ரவேசம், இம்மாதிரி ஸம்பவங்களிலெல்லாம் பேதங்களேக் காண்கிருேம். வால்மீகி ராமாயணத்தை ஒரு கலேக் களஞ்சியமென்றும் சொன்னுல் மிகையாகாது.

ஆனந்த ராமாயணத்தில் ஸ்ரீ ராமனே பரமாத்மாவெனவும் ஸீதையை ஜீவாத்மாவென்றும், ராவணின் பத்து தலேகள் மானிடனுக்குண்டான ஐந்து கர்மேந்திரியங்களும் ஐந்து ஞானேந்திரியங்களெனவும், இந்த ஜீவாத்மாவாகிற ஸீதை பரமாத்வாகிற ஸ்ரீ ராமனே கூடிப் பிரிந்து மறுபடி கூடும் போது பலவித கஷ்டங்களே யனுபவிப்பதெல்லாம் (Allegorical) என்றபடி மானிடதத்வத்தை அப்படியே விவரித்துக் காட்டுகிறது என்று கூறுகிருர். இது யோசனேக்குகந்தது. ஆனுல் இதற்கு அடிப்படையாக ஆத்மதத்வத்தைப் பற்றி பூரணமாக அறிந்திருக்க வேண்டும்.

வால்மீகி கூறியுள்ள ச்லோகங்களில் அஹல்யையை இந்திரன் கெடுக்க வேண்டிச் சென்றதாகக் காணப்படவில்லே. இதில் கூறிய ஸம்ஸ்க்ருத பதங்களுக்கு விபரீத அர்த்தம் எடுத்து அநர்த்தமாக ப்ரவசனக்காரர்கள் சொல்லி விட்டார்கள். தேவர்களுக்கெல்லாம் அரசன் நேர்மைக்கும் பண்புக்கும் அடிகோலியாயிருப்பவன், விஷ்ணு நாராயணனென்ருல், இந்திரன் அவனுடைய மற்ருெரு அமசம் இப்பேர்ப்பட்டவனே எப்படி மாறுதலாக முனிவர் எண்ணியிருக்கக் கூடும் ? வாலிவதத்திலும் சரி, ப்ரச்னேகளுக்கு இடங் கொடுக்காமல் படும்படி நாம் அர்த்தம் கொள்ள வேண்டும். ஸ்ரீ ராமர் வாலிக்கு உறைத்த ஆறுதல் மொழிகள் மிக விரிவாகவும் விவரமாகவும் உள்ளன. அக்னிப்ரவேசத்தை ஸீதைக்கு விதித்தது மற்ருெரு கேள்விக்கு இடமளித்தது ? கடைசியில் கேவலம் ஒரு வண்ணுன் பேச்சைக் கேட்டு ஸீதையை நிரந்தரமாகப் பிரிந்தது இதையெல்லாம்

வ்யாஸரைப் படித்தவர்கள் ஆறுதலேயடைவார்கள் என்பதில் ஸந்தேகமில்லே.

போஜரின் சம்புராமாயணம், காளிதாஸரின் ரகுவம்சம் இவை போன்றவை கவித்திறன் பொருந்தியவை. துளஸிதாஸ், ராமதாஸ் இவர்கள் செய்தவை பக்தி ரஸத்தால் ஏற்பட்ட நூல்கள். ஸ்ரீ ராமனே பலவிதங்களாக நோக்கினர்கள். எத்தனே பேர்கள் அவனே எத்தனே விதமாக வர்ணித்தாலும் சலிப்பே தட்டுவதில்லே.

18, அத்யாத்ம ராமாயண ஸாரம்

17 வது அத்யாயத்திலேயே இந்த நூலின் விசேஷத்தைப் பற்றி கூறியுள்ளோம் வ்யாஸரைப் பற்றி அறியாதவர்கள் இருக்க முடியாது பகவத் கீதையை வ்யாஸரின் ஐந்தாவது வேதமாகக் கருதுகிருர்களல்லவா ? அந்த வேத ஸாரத்தைத் தவிர வ்யாஸர் ஸ்ரீ ராமனே எப்படி அநுபவித்தார் என்பதைப் பார்ப்போம்

வால்மீகி ராமாயணத்தில் ஸ்ரீ ராமனே அடிக்கடி 'மாம் மானுஷம் மன்யே'' ''என்னே நான் மானிடனுகவே கருதுகிறேன்'' என்று பிறப்பு முதல் மறைவு வரை விஸ்தரிக்கிருர் வ்யாஸரோ அடிக்கடி ஸ்ரீ ராமரின் அவதார விசேஷத்தை பல மஹரிஷிகள் வாக்குகள் மூலமாய் சுட்டிச் சுட்டிக் காண்பித்துக் கொண்டே போகிருர். ஸ்ரீ ராமனின் ப்ரதாபத்தையும் வீரத்தையும் சாந்தத்தையும் தர்ம குணங்களேப் பற்றியும் விவரிக்கும் போது மனுஷ்யர்கள் ஸ்ரீ ராமனிடமிருந்து தர்மத்தை எப்படி அனுஷ்டிக்க வேண்டுமென்பதையும் சொல்கிருர். எல்லோரும் ராமனளவிற்கு அனுஷ்டிக்க முடியாமற் போனுலும் அவன் மாதிரி ஆகவேண்டும் என்கிற ஆஸ்தையை உண்டாக்குகிருர்.

ஸ்ரீ ராம கதை ஒன்ருக யிருந்த போதிலும், பல பேர்கள் பலவிதங்களாக அதை விவரித்த போதிலும். வ்யாஸர் ஒவ்வொரு இடங்களிலும் ஸம்வாதத்திற்கும் ப்ரதிவாதத்திற்கும் இடமில்லாமல், ஒவ்வொரு ஸம்பாஷணேகளிலிருந்து விவரித்துக் கொண்டே அவன் பெருமையை நிலேநாட்டிக் கொண்டே போகிருர் என்பது ஒரு விசேஷம். பக்தி ஸ்தோத்திரங்கள் அநேகம் பேர் வாயிலாக பாடும் போதெல்லாம் நமக்கு ஓர் புல்லரிப்பே ஏற்படுகிறது இந்த பக்தி ஸ்லோகங்களேயெல்

லாம் திரட்டி, ஓர் ராம பக்திக்ரந்தமாக செய்ய வேண்டுமென்பது அடியேன் கருத்து. இந்த அத்யாத்ம ராமாயண மொழி பெயர்ப்பு முடிந்தவுடன் அதைச் செய்ய வேண்டும்,

அது மட்டுமல்லாமல் பல கீதைகளை வ்யாஸர் புகுத்துகிறார் எல்லாம் வ்யாஸருடையது என்றாலும் அவரவர்கள் வாயிலாக வரும் கீதைகளெல்லாம் அவரவர்களுடைய குணங்களுக்கேற்ப அமைந்துள்ளன. கீதைகளெல்லாம் மனுஷ்யர்களுக்கு போதனை சக்தியை யளிக்கக் கூடியவை இக்கீதைகளெல்லாம் திரட்டி ஓர் தனி நூலாகச் செய்ய வேண்டும்.

இவைகளில் முக்யமானது ஸ்ரீ ராம கீதை. ஸ்ரீ க்ருஷ்ண னின் கீதை மோக்ஷ மார்க்கத்திற்காக, கர்ம பக்தி ஞான யோகங்களைப் பற்றிக் கூறுகிறது. ஸ்ரீ ராம கீதை லக்ஷ்மண னுக்கு ஏகாந்தத்தில் மனுஷ்யனுடைய த்ரேக அமைப்பைப் பற்றியும் அவைகளில் உண்டாகிற நாடிச் சக்தியைப் பற்றியும் இந்த மனுஷ்ய யந்திரம் (the man Machine) எப்படி வேலை செய்கிறது என்பதைப் பற்றிய அறிய ஸூக்ஷ்மங்களெல்லாம் காணப்படுகின்றன. விஞ்ஞானத்திற்கும் அப்பாற்பட்டவை இவை. இதை இன்னும் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள் என்றால் அதன் மகிமையை என்னமென்றுறைப்பது? மூலா தார ஸ்வாதிஷ்டான மணிபூரக இத்தியாதி ஸப்த ஸ்தானங்கள் என்ன, எங்கிருக்கின்றன எப்படி வேலை செய்கின்றன அவை களுக்கும் ப்ராணனுக்கும் எப்படி ஸம்பந்தம், ஹ்ருதயம் எப்படி ப்ராணனுக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. இன்னும் பல ரஹஸ் யங்களுள்ள இந்நூலை எல்லோரும் ஆர்வததுடனும் ஊக்கத் துடனும் படித்து, அறிந்து, உள்ளுணர்ந்து, தேர்ச்சி யடைய வேண்டுமென்பது அடியேனின் பூரணமான ஆசை. அதை நிறைவேற்றுவார் என்று ஸ்ரீ ராம பரந்தாமனை வேண்டிக் கொண்டு இந்நூலை முடித்துக் கொள்கிறேன்.